Sangathamil

சங்கத்தமிழ்

குரல் – 19 | சர்வதேச மின் செய்தித்தாள் | 15 பெப்ரவரி 2022



2009ல் தமிழ் மக்களின் தலையில் சிங்கள அரசால் போடப்பட்ட அழிவாயுதங்களின் தடயங்கள் தமிழீழ மண்ணில் இவைகள். உலகம் இன்னும் மவுனமாக ஏன் இருக்கிறது ? தமிழர்கள் என்றபடியாலா?























தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
◆ Purchasing a Residential Property
◆ Selling a Residential Property
◆ Residential Mortgage Refinancing
◆ Wills and Powers of Attorney
NOTARY SERVICES
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.nishanthanlaw.com
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

Ideal Auto Tech
For all your vehicle repair and Service needs
Ontario
www.idealautotech.com
All Mechanical Services - Muffler & Tire Works
Wheel Alignment - Engine & Transmission Repairs
To Wing Services
We do Vehicle Appraisal & Safety Inspection
T: 416 752 LUBE (5823) C: 647 219 5922 F: 416 752 0457
1815 Lawrence Ave., East, Unit 02, Scarborough
(Pharmacy & Lawrence) ON M1R 2Y3

LONGO LAWYERS
Our Clients aren't just a file, each is a life.
We specialize in handling serious and life-changing personal injury claims resulting from all types of accidents. Our team of experienced trial lawyers is dedicated to providing the highest possible standard of legal services. If English isn't your first language, we have members of our team that are fluent in Tamil.
Shenthuran Subramaniam
B.Sc., M.B.A., J.D.
Personal Injury Lawyer
Cell: 647.992.2417
TP: 416.800.4232 Fax: 416.800.6247
Toll Free: 1.844.800.4232
4950 Yonge St, Suite 401, Toronto ON M2N 6K1

A TAMILAN CARPET CLEANING
PROFESSIONAL STEAM
CAR & VAN
உங்கள் வீடு தேடி வந்து செய்து கொடுக்கப்படும்
விருகள், கொண்டோக்கள், வாடகை வசியிடங்கள், வீட்டின் படிகள், தரை விரிப்புகள், சோபாகள், மெத்தைகள் வாகன உட்புறம்...
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

Annai's PRAGATI
SIDDHA HERBAL CLINIC
A total wellness according to Natures Way!
Treatment based on Ancient Siddha Philosophy of Healing.
MASTER HEALER
PREMILA.S
Hereditary Genetic Siddha Practitioner (Royal Physician Treatment), Spagyric Alchemist (CAN)
Alchemist (IND),
Natural Medicine Practitioner© (CAN)
Canada, Europe & India
TEL: 1 647-278-3100
Email: pragatishc@gmail.com | Web: www.pragatisiddha.com

அழகிய மனை நிறைவான வாழ்வின் தொடக்கம்! வீடு வாங்க விற்க அல்லது அது தொடர்பான விபரங்கள் அறிய இலவச ஆலோசனைக்கு அழையுங்கள்
Higher Standard Agents... Higher Results!
HomeLife Landmark Realty Inc., Brokerage
Independently Owned and Operated
Parithi Sinnathamby
Sales Representative
416-904-7444
pari.sinnathamby@gmail.com
7240 Woodbine Ave., Suite 103, Markham, ON. L3R 1A4 Tel: 905-305-1600 Fax: 905-305-1609

Preparation of Income Taxes
T1 and T2 with E/File
Location:
Unit 9-40 Winges Rd
Woodbridge, ON
L4L 6B2
Pearl Fortune Canada
Head Office
101 Laird Dr., Markham
ON L3S 3N6
Tel: 905.554.5606
Fax: 905-554-3236
Please contact:
Yo K Gamar (C.M.A)
Cell : 416-917-7263
Accountant since 1993

K.S PAINTING & HARDWOOD
PROVINTING THE BEST SERVICE
NIRANJAN SELVARAJAH 647.406.7706
www.kspaintingandhardwood.com

GRAND OFFER
this Offer Only December 31th to January 31th, 2022.
MAGAZINES
7" x 5" Size, 100 copys
Inside 32 Pages, B&W 20lb
with colour glossy cover
c $ 310.00
+ Graphic Extra....
Large Format Digital Printing
c $ 9.99 / Sq. Ft (c$ 34.99 / h.)
Design Only
1000 Business Cards
with out design c $ 59.99
One Side - 16pt Card Stock
with out design c $ 29.99
One Side,10pt Card Stock
We print all kind of products
Call Me : Silver Print House - 647 712 1266

Residential, Commercial, Refinance
ALL YOUR MORTGAGE NEEDS
Ari Paramalingam
Mortgage Agent
T: 905.781.1356
F: 1.888.653.5161
E: arikaran@hotmail.com
MORTGAGE ALLIANCE
402-2 Country Court Blvd
Brampton, ON L6W 3W8

SELVAM
GENERAL PEST CONTROL
Cockroaches, Silverfish, Carpet Beetles, Moths, Fleas
Rodents, Spiders, Wasps/Bees/Hornets & Ants...
எலி, பூச்சி தொல்லையிலிருந்து விடுபட
உடங்களுக்கு உதவிட 24 மணி நேரமும்
7 நாட்களும் இலவச மதிப்பீட்டுடன் 100 வீத
உத்தரவாதத்துடன் சேவையாற்றிட அழையுங்கள்
இந்த விளம்பரத்தாலோ எந்த வேலைகளும் நிரந்தரமாகாது
416.831.6343
416.265.6825
கார்த்திகேசு செல்வம்
Karthigesu Selvam

வீடு வாங்குதல், விற்றல், குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ் ஒழுங்குகள் மற்றும் இலவச ஆலோசனைகளும் வழங்கப்படும்
Nesan Chathanantham
Broker
Dir: 416-827-7343
Email: CCN5@hotmail.com
RE/MAX COMMUNITY Realty Inc., Brokerage
RAISING YOUR VALUE
1265 morningside Ave Suite #203
Toronto, Ontario M1B 3V9
Tel: 416.287.2222 | Fax: 416282.4488

Samraj Insurance Group Inc.
வாகனக் காப்புறுதி, ஆயட் காப்புறுதி, வீட்டுக் காப்புறுதி, பயணக் காப்புறுதி உட்பட அனைத்துக் காப்புறுதித் தேவைகளுக்கு அழையுங்கள்
Siva Ananthamoorthy (Licensed Insurance Agent)
RE/ON
வீடு வாங்க - விற்க சிறப்பான சேவை
Dr. Ananthamoorthy
416.823.3686 / 647.857.0086

MT CPA CA
MAYURAN THARMABALAN
PROFESSIONAL CORPORATION
CHARTERED PROFESSIONAL ACCOUNTANT
* AUDIT
* REVIEW ENGAGEMENT
* NOTICE TO READER
* BUSINESS ADVISORY
* CONTROLLERSHIP SERVICES
* CORPORATE TAXES
* PERSONAL TAXES
* FINANCIAL PLANNING
* CRA AUDITS
* PAYROLL
* BOOKKEEPING
Mayuran Tharmabalan, CPA, CA, LPA
647-748-6344 647-989-6298
647-748-6444 www.tharmabalan.ca
Suite 304 - 5200 Finch Ave East, Scarborough, ON M1S 4Z5
A LICENSED PUBLIC ACCOUNTING FIRM

2023 உலக வணிகம்
Ulaga VANIKAM
Tel: 437 345 4203
www.ulagavanikam.com
ulagavanikam@gmail.com

தேசிய தலைவர்
மேதகு
வே. பிரபாகரன்
அவர்களின்
சிந்தனையிலிருந்து

உண்மையானவராக இருந்தால்
அவர் இலட்சியத்திற்காக
செத்திருக்க வேண்டும்.
அல்லது இலட்சியத்தை
அடைந்திருக்க வேண்டும்.
இப்படிப்பார்த்தால் எங்களில்
மாவீரர்கள் தான்
உண்மையானவர்கள் -
உயர்ந்தவர்கள் என்பார்.
நானும் உண்மையானவனல்லன்.





சங்கத்தமிழ்

தொடர்புகளுக்கு

தொலைபோசி

437 345 4203

மின்னஞ்சல் (Email)

sangathamilcanada@gmail.com

முகநூல் (Facebook)


Sangathamil Canada


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீடிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீடுக்கும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.


All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.



லெப். கேணல் பொன்னம்மான் மேஜர் கேடில்ஸ் உட்பட 10 வீரவேங்கைகளின் 35ம் ஆண்டு நினைவுப்பகிர்வு







ஈழ மண்ணை இதயத்தில் தாங்கி விடுதலைக்காய் இன்னுயிர் ஈந்த லெப்.கேணல் பொன்னம்மான், மேஜர் கேடில்ஸ் உட்பட 10 போராளிகளின் 35ம் ஆண்டு வீரவணக்க நாள் இன்றாகும்.

நாவற்குழி சிறீலங்கா சிங்களப்படைமுகாம் மீதான தாக்குதலுக்கு 14.02.1987 அன்று வெடிமருந்து நிரப்பப்பட்ட ஊர்தி ஒன்று வெடிக்க வைத்த பின்னரேயே தாக்குதல் அணிகள் உட்புகுந்து முகாமைக் கைப்பற்றுவதெனத் திட்டம் தீட்டப்பட்டது.

படைமுகாமின் வாயில் உள்ள படையினர் ஐயம் கொள்ளக் கூடாது என்பதற்காக படையினருக்கு குடிநீர் கொண்டு செல்ல பயன்படுத்தப்படும் தண்ணீர் தாங்கி ஊர்தி (பவுசர்) போன்ற தொரு ஊர்தி வெடிமருந்து நிரப்பப்பட்டது.

எனினும் இறுதி நேரத்தில் தண்ணீர் தாங்கியிலிருந்து நீர் ஒழுகியது. இதனை அடைக்கும் முயற்சியில் ஈடுபட்ட வேளை எதிர் பாராத வகையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் காவியமான மூத்த தளபதி லெப்.கேணல் பொன்னம்மான், தென்மராட்சி பொறுப்பாளர் மேஜர் கேடில்ஸ், விடுதலைப் புலிகளின் தொழில் நுட்பப் பிரிவுப் பொறுப்பாளர் கப்டன் வாசு, லெப்.சித்தார்த்தன் உட்பட 10 போராளிகளின் 35ம் ஆண்டு வீரவணக்க நாள் இன்றாகும்.

தந்தை தாய் இருந்தால் நமக்கிந்த தாழ்வெல்லாம் வருமோ ஐயா...

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் புதிதாக இணைந்து பயிற்சி எடுப்பதற்காக பயிற்சி முகாமில் நின்று கொண்டிருந்த புதியவர் களுக்கு நெஞ்சில் மெல்லிய துயரினை அந்த வரிகள் எழுதி யிருக்கக்கூடும்.

ஆனால் அந்த அத்தனை பேருக்கும் தாயாக, தந்தையாக, அண்ணனாக, அம்மானாக, நின்ற பொன்னம்மானே அந்தப் பாடலைப் பாடிக் கொண்டிருந்தார். அம்மான் இருக்கும் இடத் தில் எப்போதுமே மகிழ்ச்சி குடிகொண்டிருக்கும். ஆனால் எப்போதும் தமிழர் துயரநிலை கண்டு அவர் உள்ளம் கொதித் துக் கொண்டிருந்தது. அவர் அந்தப் பாடலை அடிக்கடி பாடும் போது தமிழர் துயரநிலையை சூட்சுமமாகப் பாடுவதாக தோழர் கள் நினைத்துக் கொள்வார்கள்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரனுடன் அக்காலத்தில் தோளோடு தோளாய் நின்று இயக்கத்தைப் பல மாகக் கட்டியெழுப்புவதற்காக அயராது உழைத்தார் அம்மான்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் பிரபாகரனுடன் இணைந்து கொண்டு செயற்படத் தொடங்கி உமையாள்புரம், திருநெல் வேலி தாக்குதல் உட்பட பல தாக்குதல்களில் தனது துணி வையும், வீரத்தையும் வெளிப்படுத்தியிருந்தார்.


1983ஆம் ஆண்டு திருநெல்வேலியில் 13 படையினர் கொல்லப் பட்ட நடவடிக்கைக்குப் பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகள்


மான் பயிற்சியின் போதே சகவீரர்களை எமது இயக்கத்தின் விதிமுறைக்கேற்ப உருவாக்கிக் கொண்டிருந்தார். இந்தப் பாசறையில் தளபதிகளான கிட்டு, விக்டர், புலேந்திரன், சூசை, பொட்டு, கணேஸ், அருணா, ராதா, பரமதேவா, பதுமன், கேடில்ஸ் போன்றவர்கள் உட்பட சுமார் நூறுபோராளிகள் இருந்தனர்.


பயிற்சியை முடித்துக் கொண்ட பொன்னம்மான் தமிழ்நாட்டில் பல இடங்களில் பயிற்சி முகாம்களை ஏற்படுத்தி புதிய வீரர்களை புரட்சியாளர்களாக்கினார். உலகமே வியக்கக்கூடிய வகையில் எமது போராட்டம் வளர்ச்சியடைவதற்குத் தேவையான, புதிய வீரர்களிற்குப் பயிற்சி அளித்தல், வேண்டிய ஆயுதங்களைச் செய்து கொள்ளல் போன்ற முக்கிய விடயங்களில் பொன்னம் மானின் முயற்சி கணிசமாக இருந்தது என்றே சொல்லலாம்.

வெடிமருந்துகளைக் கையாள்வதில் பொன்னம்மான் மிகவும் வல்லுனராக இருந்தார். அதற்கேற்றவாறு மேலும் பல வீரர் களை, ஆயுதங்கள் செய்யும் பிரிவிற்குத் தகுதியுள்ளவர களாகவும் ஆக்கியிருந்தார்.

பேராட்டத்திற்கு கை எறிகுண்டு கணிசமான அளவு தேவை யாக இருந்தது. அன்றைய காலகட்டத்தில் குண்டு தயாரிப்பு வேலைகள் இயலாமல் இருந்தது. பொன்னம்மானின் கடுமை யாக முயற்சியினால் 1985, 1986ஆம் ஆண்டுகாலப் பகுதியில்







என்ற பாடல் முகாமுக்குள் ஒலித்துக் கொண்டிருந்த ஓரிரவில் தோழர்கள் காற்று வெளியில் நின்று கொண்டிருந்தார்கள். அருமையான அந்தப் பாடல் காற்றில் என்னமாய் வந்து அவர் களை உதைத்தது.


இயக்கம் மிகவும் வேகமாகவும் அதேவேளை நிதானத்துடனும் வளரத் தொடங்கியது.


போர்ப் பயிற்சிகள் இந்தியாவில் தொடங்கின. அங்கு நடந்த முதலாவது பாசறையின் பொறுப்பாளராக இருந்த பொன்னம்


மாதாமாதம் ஆயிரக்கணக்கில் கைக்குண்டுகள் தயாரிக்க வழிசெய்தார்.

இந்தியாவில் 2000இற்கும் அதிகமான வீரர்களைத் தோற்று வித்தது மாத்திரமன்றி படையின் தொழில்நுட்பத் வளர்ச்சிக்கும் முதன்மைக் காரணியாக பொன்னம்மான் செயற்பட்டார்.

பெரும் எண்ணிக்கையிலான விடுதலை வீரர்களை உருவாக்கி புலிகளின் இயக்க வரலாற்றில் பெரும் சாதனை படைத்தவர் பொன்னம்மான். பல சிறப்புக்களும், தகுதியும், ஆளுமையும் மிக்க பொன்னம்மானின் போராட்ட வாழ்வின் இறுதிக்கணங்







கள் வீரம் செறிந்தவை.

யாழ்ப்பாணத்தில் உள்ள நாவற்குழி எனும் படைமுகாம் மீது தாக்குதலை நடத்த தளபதி கிட்டுவும் தோழர்களும் திட்டமிட்டுக் கொண்டிருந்தார்கள். அத்தாக்குதலில் பொன்னம்மானும் முக்கிய பங்கேற்று செயற்பட்டுக் கொண்டிருந்தார். படை முகாம் மிகவும் பலம் பொருந்திய வெளி அமைப்பைக் கொண்டிருந்தது. அது கடல் நீர் உள்வாங்கிய பகுதி.


சுற்றிவர நூறு யாருக்கும் மேலாக ஒரே வெளிப் பகுதி. வெட்டை வெளி. சிறு நகர்வும் எதிரிக்குத் தெரிந்து விடக்கூடிய வாய்ப்பு இருந்தது. படை முகாமைச் சுற்றி நான்கு பாதுகாப்பு அரண்கள் அமைக்கப்பட்டு மண்ணை சுவர்போல குவித்து வைத்திருந்தனர். அவர்களுடைய காவல் அரண்களை உடைத்துக் கொண்டு உட்புகுவது என்பது மிகவும் கடினமானதும் எமது வீரர்கள் தரப்பில் அதிக இழப்புக்களை ஏற்படுத்தக் கூடியதுமான முயற்சி.

எனவே அவர்களுக்கு அதிர்ச்சியூட்டி அந்த அதிர்ச்சியில் இருந்து மீண்டு அவர்கள் காவல் அரண்களை பலப்படுத்துவதற்கு முன்னர் நாம் தாக்கி உட்புகக் கூடியதாகத் திட்டம் தீட்டப்பட்டது.

நாள் தோறும் அந்த படை முகாமுக்கு தண்ணீர் எடுத்துக் கொண்டு ஒரு நீர்தாங்கி ஊர்தி (பவுசர்) செல்வது வழக்கம். அது வெளியாரின் வண்டி கூலிக்கு அமர்த்தப்பட்டு இருந்தது.

எனவே அதைப் போலவே ஒரு பவுசர் வண்டியைத் தயாரித்து, அதன் கீழ் அரைவாசிப் பகுதிக்கு தண்ணீரை விட்டு, திட்டமிட்ட நாளில் உள்ளே அனுப்பி வெடிக்க வைத்து முகாமை தாக்கியழிப்பதற்கான வேலைகள் நடக்கத் தொடங்கின.

பழைய வண்டியைப் போல் ஒரு புதிய வண்டியைத் தயாரிப்பது என்பது மிகவும் கடினமான விடயமாக இருந்தது. அதிலும் அந்த பவுசர் எங்கோ தாக்குதலுக்குள்ளாகி ஒரு பக்கத்தில் நசுங்கியும் இருந்தது. அது மாத்திரமல்ல தோழர்கள் செய்யும் வண்டி வாயில் காவலர்களைத் தாண்டிச் செல்ல வேண்டி இருந்ததால்



அதேபோல் நசுக்கப்பட வேண்டி இருந்தது.

இயற்கையாக விபத்துக்குள்ளான வண்டியைப் போல் வெடி மருந்தேற்றிச் செல்லும் வண்டியை மிகச் சிரமத்திற்குப் பின் உருவாக்கினார்கள். புதிதாக மை பூசிய புவுசரை பழைய பவுசரைப் போல் உருமாற்றம் செய்ய வேண்டியிருந்தது. ஏன் பழைய வண்டியில் ஏற்பட்டிருந்த துருப்பிடித்த பகுதிகூட தாக்குதலுக்கு தயாரான பவுசரில் இருந்தாக வேண்டும். அதை விடவும் பவுசர் இரு பகுதியாகப் பிரிக்கப்பட்டு கீழ் பகுதி வெடி மருந்து நிரப்பிய பகுதியாகவும், மேல் பகுதியில் தண்ணீர் நிரம்பிய பகுதியாகவும் தயாரித்தோம். ஏனென்றால் முகாம் வாயிலில் உள்ள காவல் அரணில் இருப்பவர்கள் பவுசரின் மேல் ஏறி மூடியைத் திறந்து தண்ணீரைப் பார்த்தபின்தான் உள்ளே செல்ல விடுவார்கள்.

இத்தனை கடினங்களிற்கும் மத்தியிலும் அந்த பவுசரை மிக நேர்த்தியாக வடிவமைத்தார்கள்.

பவுசருக்கு வெடிமருந்தை இணைக்கும் பணியை பொன்னம்மான் எடுத்துக் கொண்டார். இம்முயற்சிக்கு வழிகோலி, அயராது உழைத்து வந்தவன் கேடில்ஸ்தான். கேடில்ஸ் அப்போது சாவகச்சேரிப் பகுதிக்கு பொறுப்பளராக விளங்கியவன். மிகத் துல்லியமாக முகாமை வேவு பார்த்து, படை முகாமினது ஒவ்வொரு நடவடிக்கையையும் கண்காணித்து வைத்திருந்தான்.

கேடில்சும், வாசுவும் சேர்ந்துதான் இரவுபகலாக உழைத்து அந்த பவுசரை உருவாக்கினார்கள். அவர்களுக்குத் துணையாக ரஞ்சன் எனும் பொறியியலாளர் ஒருவர் பணியாற்றினார். (அவர் பொன்னம்மானின் உறவினருமாகூட. மிகுந்த மதிநுட்பம் வாய்ந்த ரஞ்சன், வாசுவோடு சேர்ந்து வானூர்தி தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டு வந்தார். முழுவதுமாக தன்னை இயக்கத்துடனேயே இணைத்துக் கொண்டவர்).

14-02-1987 அன்று தாக்குதல் நடத்துவதாக இருந்தது. கெரில்லா தாக்குதல்களை இரவு நடத்துவதுதான் தோழர்களுக்கு ஏற்றதாக இருந்தது. தாக்குதல் தொடங்கினால் படை உலங்குவானூர்திகள், குண்டு வீச்சு வானூர்திகளும் தகவல் பெற்று எம்மைத் தாக்கத் தொடங்கலாம்.

பகல் வேளையானால் மேலிருந்து கண்டுபிடித்து குண்டு வீசுவது அவர்களுக்கு மிகவும் சுலபமான விடயம். ஆனால் பிற்பகல் 6 மணிக்குப் பின் இராணுவ முகாமுக்கு தண்ணீர் கொண்டு செல்ல அனுமதிக்கப்படுவதில்லை. எனவே கடைசி சந்தர்ப்பத்தை தோழர்கள் தாக்குதலுக்கான நேரமாக குறித்துக் கொண்டார்கள். 6:30 மணிக்கு சண்டை தொடங்குமானால் சுமார் ஒரு மணி நேரத்தில் இருட்டடித்துவிடும். அதன்பின் தோழர்களுக்கு மிகவும் பாதுகாப்பாகவே இருக்கும்.

முதல்நாள் இரவிரவாக பொன்னம்மான், வாசு, ரஞ்சன் ஆகியோர் மருந்தடைத்தனர். வெடிமருந்தின் நச்சுத்தன்மை அவர்களைப் பாதித்தது. அதனால் மூவரும் மிகச் சோர்வாக வேறு இருந்தார்கள். அதிகாலை வெடிமருந்து இணைக்கப்பட்ட நிலையில் பவுசர் தயாராக நின்றது. அம்மான் அவ்விடத்திலேயே தூங்கியும் விட்டார். வாசுவும் கிட்டுவும் தாக்குதல் குழுக்களைப் பிரித்து அவரவர்களுக்குத் தேவையான வெடி பொருட்களை இணைத்து கொடுத்துக் கொண்டிருந்தார்கள். மூன்று பெரிய சுமையூர்திகள் (லொறிகள்) ஏற்பாடு செய்யப்பட்டன.

முகாமுக்குள் சென்ற பவுசர் வெடித்ததும் ஜோனி, கேடில்ஸ், சூசை தலைமையிலான குழுக்கள் சுமையூர்திகளில் விரைந்து முகாமுக்குள் சுட்டுக் கொண்டே உட்புகுவதாகத் திட்டம். சுமையூர்திகளின் முன்புறமும், மேல்பக்கமும் மணல் மூட்டைகள் அடுக்கப்பட்டன. முதல் சுமையூர்தியில் உந்துகணையுடன் (ரொக்கட் லோஞ்சருடன்) நிற்பவன் உட்புகும் போது உந்துகணையால் வாயில் காவலரணை உடைத்தெறிவதாக திட்டம் தீட்டப்பட்டிருந்தது.

நேரம் பிற்பகலை நெருங்கிக் கொண்டிருக்க தாக்குதல் குழுக்கள் தத்தமது நிலைகளுக்கு செல்லத் தொடங்கி விட்டனர். பவுசரை அனுப்பும் பொறுப்பு பொன்னம்மான், கேடில்ஸ், வாசு, ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கிட்டு தாக்குதலை நடத்துவதற்காக, அனைவருடனும் தொலைத்தொடர்பு கருவி மூலம் தொடர்பு ஏற்படுத்தக்கூடிய வகையில் இடம் தெரிந்தெடுக்கப்பட்டு அதற்குரிய வசதிகள் செய்திருந்தார்.

கிட்டு ஐந்து மணியளவில் எல்லாக் குழுக்களையும் சரி பார்த்து வந்து கொண்டிருந்தார். நேரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு குழுவினர் நின்ற வீட்டில் அவர்களை சரிபார்த்துக் கொண்டிருந்தார்... மிகப்பெரிய சத்தத்தைத் தொடர்ந்து ஒரு முறை பூமி அதிர்ந்தது. அதிர்ச்சி, வியப்பு, சற்றும் புரியவில்லை. 5:30க்கு வேறு இந்த வெடிச்சத்தம் கேட்டதால் தோழர்கள் மத்தியில் ஒரே குழப்பம்.

கிட்டு பொன்னம்மானை வாக்கியில் பலதடவை கூப்பிட்டார். கேடில்சைக் கூப்பிட்டார். வாசுவைக் கூப்பிட்டார். பதில் இல்லை. பல தடவைகள் அழைத்தார். மீண்டும் பதில் இல்லை. ஜோனியை அழைத்தார்: பதில் வந்தது. ஜோனியை அழைத்து உடனடியாக சத்தம் கேட்ட இடத்திற்கு அனுப்பினார். ஜோனி அங்கு சென்ற போது எங்கும் தூசிமயம். பிரளயம் ஒன்று ஏற்பட்டதைப் போல இருந்தது.

அவ்விடத்தில் பெரிய குழி, அதற்கருகில் கேடில்சினுடைய கார் நொறுங்கிப் போய் கிடந்தது. இதற்கு 50 யார் தூரத்தில் சுமையூர்தி ஒன்று நின்றது. ஐவர் அதற்குள் இறந்து கிடந்தார்கள். தண்ணீர் நிரப்பிக் கொண்டிருக்கையில் பவுசர் வெடித்து விட்டது. ஆனால் அந்த இடத்தில் நின்று நிகழ்வைப் பார்த்த யாரும் உயிருடன் இல்லை.

பொன்னம்மான், கேடில்ஸ், வாசு, ரஞ்சன் ஆகியோர் அந்த இடத்துக்கு வந்ததாக தோழர்கள் கூறினார்கள். பவுசரில் தண்ணீர் நிரப்பும்போது தண்ணீர் சிறிது ஒழுகியதாம். அதைப் பொன்னம்மான் கேடில்சுக்கும் வாசுவுக்கும் தெரிவித்து பொறியியலாளர் ரஞ்சனையும் அழைத்துக் கொண்டு பவுசர் நின்ற இடத்திற்கு சென்றார்கள். பொறியியல் நடவடிக்கையின் போது வெடிவிபத்து ஏற்பட்டுள்ளது.

இதனை உறுதிப்படுத்த, அங்கு நின்ற எவருமே இல்லை. எல்லோரையும் தேடினார்கள். வாசுவின் பிஸ்டலும், அடையாள அட்டையும் கேடில்சின் காற்சட்டையின் ஒரு பகுதியும்தான் கிடைத்தது. பொன்னம்மானை அடையாளம் காணக்கூடிய வகையில் அவருடைய உடலோ, உடலின் பகுதியோ எந்தத் தடமும் கிடைக்கவில்லை. ஈழத்தில் வீசிக் கொண்டிருக்கும் காற்றோடு காற்றாய் அவர் மறைந்து விட்டார்.

முகாம்களில் கலைநிகழ்ச்சிகளை வைப்பித்தும், குறும்புகள் செய்தும், நடித்தும், சிரிக்க வைத்து, எந்த நேரமும் மகிழ்ச்சையைக் குடிகொள்ள வைத்திருக்கும் அந்த மனிதன் இன்று இல்லை.

“அம்மான் ஒரு பாட்டுப் பாடுங்கோ” என்று தோழர்கள் அடம் பிடிப்பதும் அவர் எப்போதும் தோழர்களுக்காய் பாடிக் காட்டும் அந்தப் பாட்டும் நினைவில் நனைய கண்கள் பனிக்கின்றன.

ஈரமான இதயம் சுமந்த மனிதர்களின் நண்பனாய், தந்தையாய், தனையனாய், தாயாய், எல்லாமுமாய் நின்ற எங்கள் அம்மானிடம் வளர்ந்த எத்தனையோ தோழர்கள் இன்றும் அவரது கனவைச் சுமந்தபடி மண்ணில் நிற்கிறார்கள்.



தமிழ்மி செய்திகள்



கடலில் இறங்கி போராடும் வடபகுதி மீனவர்கள்

பெப்ரவரி 04, 2022



வடமராட்சி மீனவர்கள் தமது போராட்ட முறையை மாற்றி கடலில் இறங்கி போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களை கண்டித்தும், வட மராட்சி கிழக்கு மீனவர்கள் இருவர் இந்திய மீனவர் களின் படகு மோதி உயிரிழந்த சம்பவத்திற்கு நீதி கோரி யும் ஐந்தாவது நாளாக இன்றைய தினமும் (வெள்ளிக் கிழமை) வடமராட்சி மீனவர்கள் போராட்டத்தினை முன்னெடுத்து வருகின்றனர்.

மீனவர்கள் கடந்த 31ஆம் திகதி முதல் பருத்தித்துறை - பொன்னாலை வீதியினை வழி மறித்து நேற்று வரையில் நான்கு நாட்களாக தொடர் போராட்டத்தினை முன் னெடுத்து வந்திருந் தனர்.

இந்நிலையில் நேற் றைய தினம் குறித்த வீதியின் ஊடான போக் குவரத்து தடை செய்யப் பட்டுள்ளமை, பொதுமக் களின் இயல்பு வாழ் விற் கு இடையூறு வி ளைவித் தல் , கொரோனா அபாயம் உள்ளிட்டவற்றை சுட் டிக் காட் டி பருத் தித் துறை பொலிஸார் , பருத்தித்துறை நீதவான் நீதிமன் றில் போராட்டத்திற்கு எதிராக தடையுத்தரவை பெற்றி ருந்தனர்.



நீதிமன்ற தடையுத்தரவை அடுத்து நேற்றைய தினம் இரவு மீனவர்கள் வீதி மறியல் போராட்டத்தினை கைவிட்டனர்.

இந்நிலையில் இலங்கையின் சுதந்திர தினமான இன் றைய தினத்தினை கரிநாளாக அனுஷ்டித்து மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த மாதம் 27ஆம் திகதி கடலுக்கு சென்ற வத்திராயன் மீனவர்கள் இருவரும் உயிரிழந்த நிலையில் அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும், இதுவரை காலமும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் உயி ரிழந்த மீனவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகவும் சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர்.

அதனை தொடர்ந்து மெழுகு திரிகளை ஏந்தி, கறுப்பு கொடிகளுடன் கடலில் இறங்கி மீனவர்கள் போராட் டத்தினை முன்னெடுத்தனர்.

நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யத் தயார்?

மீனவர்கள் போராட்டத்தில் சுமந்திரன்

பெப்ரவரி 04, 2022

இழுவை மடி சட்டத்தை உடன் அமுல்படுத்துமாறும் தற்போது ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் நீதிமன் றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் - வடமராட்சியில் கடற்தொழிலாளர்கள் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டித்து போராட் டத்தில் ஈடுபட்டு

இந்திய கடற் தொழிலாளர்களின் அத்துமீறல் மற்றும் கடற் தொழிலாளர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் வடமராட்சி - சுப்பர்மடம் பகுதியில் கடந்த நான்கு நாட் களாக போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



குறித்த போராட்டத்திற்கு நீமன்றம் தடைவித்திருந்த நிலையில்,நேற்று மாலை பொலிஸாரினால் ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் அப்புறப்படுத்தப்பட்டனர்.

இந்நிலையில், இன்றைய தினம் வடமராட்சி - சுப்பரமடம் பகுதியில் சுதந்திர தினத்தை கறுப்பு நாளாக அனுஷ்டித்த கடற் தொழிலாளர்கள், உயிரிழந்த மீனவர்களுக்கும் அஞ்சலியும் செலுத்தினர்.

மேலும், நூற்றுக்கணக்கான கடற் தொழிலாளர்கள் ஒன்று கூடி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதுடன், நாடாளு மன்ற உறுப்பினர்களான சுமந்திரன் மற்றும் கஜேந்திரன் ஆகியோரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டிருந் தனர்.

இதன்போது உரையாற்றிய சுமந்திரன். கடற் தொழிலாளர் களின் பிரச்சினைக்கு தீர்வு எட்டப்படாமல் தொடர்ந்தும் நீடித்துக் கொண்டிருக்கிறது. இது குறித்த சட்டங்களை உடனடியாக நடைமுறைப்படத்த வேண்டும் என்று தெரிவித்ததுடன், நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்போவதாகவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் 04.02.2022







மரண சான்றிதழ் வழங்குவோம் என்ற வார்த்தைப் பிரயோகத்தை முற்றாக தவிர்க்க வேண்டும்

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம்

பெப்ரவரி 04, 2022



இலங்கை நாட்டின் 74 ஆவது சுதந்திர தினம் இன்றாகும். ஆனால், தமிழர்களுக்கு இன்றைய நாள் ஒரு கறுப்பு நாள் எனவும் அரசாங்கம் இனிமேல் மரண சான்றிதழ் வழங்குவோம் என்ற வார்த்தை பிரயோகத்தை பயன் படுத்துவதை முற்றாக தவிர்க்க வேண்டும் என்றும், கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் தெரிவித்துள்ளது.

திருகோணமலை அன்புவெளிபுரம் கையளிக்கப்பட்டு, கடத்தப்பட்டு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத் தின் அலுவலகத்தில் இன்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சங்கத்தின் தலைவி ஜே.நாகேந்திரன் ஆஷா இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நாட்டில் எமக்கு எந்த ஒரு சுதந்திரமும் இல்லை. நாங்கள் இன்றுவரை நிம்மதியாக இந்த நாட்டில் வாழ வில்லை. அரசாங்கத்தின் அழுத்தங்களின் காரணமாக இன்றுவரை அரச புலனாய்வு துறையினர்களின் பல கேள்விகளுக்கு உள்ளாக்கப்பட்டு, பின் தொடரப்பட்டு அச்சுறுத்தல்களுக்கு உட்படுகின்றோம்.

நாட்டின் ஜனாதிபதி உட்பட அனைத்து அரசியல் தலை மைகளும், அரச அதிகாரிகளும் இவ்வாறு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் ஒவ்வொரு தீர்க்க மான கருத்துக்களும் தெரிவிக்காத நிலையில் ஆண்டு தோறும் தரவுகள் மாத்திரம் பெற்ற வண்ணம் இருக்கின் றார்கள்.

அவ்வாறு பெறப்பட்ட தரவுகளுக்கு இதுவரை எந்த ஒரு தீர்வும் கிட்டாத நிலையில் நீதியமைச்சர் கடந்த சில நாட் களுக்கு முன்னர் வடக்கிற்கான விஜயத்தினை மேற் கொண்டு, ஊடகங்களுக்கு காணாமல் ஆக்கப்பட்டோர் கான மரண சான்றிதழ்கள் வழங்குவதாக தெரிவித்த விடயத்தை இன்றைய சுதந்திர தினத்தில் வன்மையாக கண்டிக்கிறோம்.

தமது உறவுகளுக்கு நீதி விசாரணை இல்லாமல் எவ்வாறு மரண சான்றிதழ் வழங்க முடியும். எமக்கு மரண சான் றிதழ் தேவையில்லை. அவர்களுக்கான சரியான ஒரு நீதி மாத்திரமே வேண்டும்.

ஜனாதிபதி கூறிய அதே வார்த்தையை மனப்பாடம் செய்து கொண்டு நீதியமைச்சர் மரண சான்றிதழ்கள் வழங்கப் படும் என்ற விடயத்தை கூறுவதை விட்டுவிட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் சரியான ஆய்வுகளை மேற் கொண்டு எமக்கு சரியான நீதியை பெற்றுத்தர வேண்டும்.


நீதியமைச்சரின் குடும்பத்தினரோ அல்லது உறவினர் களோ இவ்வாறு கடத்தப்பட்டு அவர்களுக்கு நீதி கிடைக் காத பட்சத்தில் மரண சான்றிதழ்கள் வழங்கப்படும் என்றால் அவர் ஏற்றுக்கொள்வாரா? என அவர் கேள்வி எழுப்பினார்.

மேலும், 1948 ஆம் ஆண்டு வெள்ளையர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்ற இந்த நாட்டில் இன்று வாழும் தமிழ் மக்களுக்கு எந்த ஒரு சுதந்திரமும் இல்லை.

இவ்வாறு இருக்கையில் நாம் எவ்வாறு சுதந்திர தினத்தை கொண்டாடுவது? நாட்டு மக்கள் என்ற வகையில் இவ் வாறான அநீதிகள் இழைக்கப்படாமல் இருந்தால் நாட்டின் அனைத்து மக்களும் ஒன்றாக இந்த சுதந்திர தினத்தை வெகு விமர்சையாக கொண்டாடியிருக்கலாம் என திரு கோணமலை தமிழர் சமூகத்தின் இணைப்பாளர் ஆர். நிக்லஸ் தெரிவித்தார்.

பெப். 04 தமிழரின் கரிநாள் யாழ். பல்கலை நுழைவாயிலில் மாணவர்களால் கறுப்பு துணிகட்டப்பட்டது!

ஜனவரி 20, 2022



யாழ் பல்கலைக்கழக பிரதான நுழைவாயிலில் கறுப்பு வர்ண துணி கட்டபட்டு இன்றைய சுதந்திர தினத்தை கரி நாளாக மாணவர்கள் வெளியிட்டுள்ளார்கள்.

இன்று முள்ளிவாய்க்காலில் இடம்பெறும் சிவில் சமூகங்களால் ஏற்பாடு செய்யப்பட்ட சுதந்திர தினத் திற்கு எதிர்ப்பு தெரிவித்த போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமுகமாக பல்கலைகழக மாணவர்கள் முள்ளி வாய்க்காலிற்கு செல்வதற்காக பல்கலைகழகத்தில் தமது வாகனங்களை தரித்துவிட்டு செல்ல முற்பட்ட நிலையில் பல்கலைக்கழக பாதுகாப்பு உத்தி யோகத்தர்களால் உள்நுழைய அனுமதி மறுக்கப்பட் டதோடு பரமேஸ்வரா ஆலயத்திற்கு செல்பவர்களிற்கும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களால் தடை விதிக்கப் பட்டது.

இந்நிலையில் இன்றைய நாள் சுதந்திர தினம் என கொடியேற்றுகிறீர்கள் ஆனால் பல்கலைகழகத்திற்குள் மாணவர்கள், ஆலய வழிபாட்டை மேற்கொள்பவர்கள் செல்ல முடியாதா? என மாணவர்களால் கேள்வி எழுப் பப்பட்ட நிலையில் பல்கலைக்கழகத்தில் கடமையாற்று பவர்களையே நாங்கள் அனுமதிக்கவில்லை என பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் மாணவர்களால் சுதந்திர தினம் கரி நாள் என தெரிவித்து மாணவர்களால் கறுப்பு வர்ண துணி பிரதான வாயிலில் கட்டப்பட்டது.

தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள மக்கள் முன்வரவேண்டும்

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள்

03.02.2022



தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்கள் மக்கள் முன்வரவேண்டும் என வவுனியாவில் கடந்த 1812 வது நாளாக தொடர்போராட்டம் மேற்கொண்டுவரும் தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வவுனியாவில் இன்று(வியாழக்கிழமை) ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர்கள் இவ்வாறு குறிப்பிட் டுள்ளனர்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர்கள், "பயங் கரவாதச் சட்டத்தை நீக்குவதற்கு ஜிஎஸ்பி பிளஸைப் பயன்படுத்துமாறு ஐரோப்பிய ஒன்றியத்தை வலியுறுத்தி ஒரு கடிதம் அனுப்பியுள்ளோம். எமது பிள்ளைகள் இலங்கை இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டதற்கு தற்போதைய பயங்கரவாதச் சட்டமே பிரதான காரண மாகும்.

பலவந்தமாக காணாமல் ஆக்கப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களாகிய நாங்கள் பணத்தையோ இறப்புச் சான்றி தழையோ ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம் என் பதை நீதி அமைச்சரிடம் கூற விரும்புகிறோம். எங்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதி வேண்டும். சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் மட்டுமே நீதி மற்றும் பொறுப்புக் கூறலை எமக்கு வழங்க முடியும்.

இதேவேளை சிங்களமக்களின் சுதந்திர தினத்தை நாம்



எதிர்க்க விரும்பவில்லை. தமிழர்களுக்கு சுதந்திரத்தை வழங்குவதற்கு சிங்களமக்கள் முன்வரவேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கின்றோம்.

ஒடுக்குமுறையில் இருந்து சுதந்திரத்தை அனுபவிக்கும் விடயத்தை அவர்கள் தமிழர்களுக்கும் வழங்கவேண் டும். காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளும் தமது உறவு களுடன் மகிழ்வுடன் வாழ்வதை அவர்கள் அங்கிகரிக்க வேண்டும்." எனத் தெரிவித்துள்ளனர்.

சிறீலங்காவின் சுதந்திர நாள் தமிழீழத்தேசத்தின் கரிநாள்! முள்ளிவாய்க்காலில் போராட்டம்!

சிறீலங்காவின் சுதந்திர நாள் தமிழ் தேசத்தின் கரிநாள் எனும் தொனிப்பொருளில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்து மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் பாதிக்கப்பட்ட தரப்பினர் அனைவரும் ஒன்றிணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்துள்ளனர். முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்து ஆரம்பமான இந்த கவனயீப்பு பேரணி முல்லைத்தீவு நகரை நோக்கி செல்கிறது. குறித்த போராட்டத்தில் மத தலைவர்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களின் எட்டு மாவட்டங்களின் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்























வடபகுதி மீனவர்கள் போராட்டத்திற்கு சிறீலங்கா நீதிமன்ற தடை உத்தரவு!

03.02.2022



பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் நடைபெறும் மீனவர் போராட்டத்திற்கு நீதிமன்றத்தின் ஊடாக பொலிஸார் தடை உத்தரவு பெற்றிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனால் மீனவர்களை அங்கிருந்து வெளியேற்ற பொலிஸார் நடவடிக்கை எடுப்பர் என்று எதிர்பார்க்கப்படுகின்ற அதே வேளை, தமது போராட்டத்தினைக் கைவிடப்போவதில்லை என்று மீனவர்கள் உறுதியாகத் தெரிவித்துவருகின்றனர்.

இலங்கையின் சுதந்திர நாள் தமிழ்த் தேசத்தின் கரிநாளாகவே கடப்பிடிக்க வேண்டும்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு

பெப்.03, 2022



இலங்கையின் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேசம் கரிநாளாகவே கடப்பிடிக்க வேண்டும் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுக் கின்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வடக்கு கிழக்கை தமிழர் தாயகமாகக் கொண்டு வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் இறைமையானது, 1505இல் போர்த்துக்கேயராலும், 1658இல் ஒல்லாந் தராலும், 1796இல் பிரித்தானியராலும் தமிழ் மக்களின் அனுமதி யின்றியே பறித்தெடுக்கப்பட்டிருந்தது.

1948இல் தமிழ் மக்களின் அனுமதியின்றி, சிங்கள பௌத்த ஏகாதிபத்தியத்துக்கு, காலணித்துவ ஆட்சி யாளர்களால் தமிழ்த் தேசத்தின் இறைமை கையளிக் கப்பட்டிருந்தது.

அன்று முதல் இன்றுவரை சிங்கள பௌத்த பேரின வாதத்தின் கோரப்பிடிக்குள் சிக்குண்டுள்ள தமிழினம், தமது சுதந்திரமான இருப்பைப் பாதுகாப்பதற்காக, உரிமை வேண்டிப் போராடி வருகின்றது.

இலங்கையின் சுதந்திரத்தை, தமிழர்கள் இதுவரை அனுபவிக்கவில்லை. காலணித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைவதற்கு முன்னிருந்தே, தமிழ் மக்களை நசுக்குவதையே நோக்காகக் கொண்டு, சிங்கள பௌத்த பேரினவாதம் செயற்பட்டு வந்திருக்கிறது.

காலணித்துவத்தின் ஆட்சிக்கு எதிராக விடுதலை தாகத்துடன் தமிழர்களும் போராடியிருந்தனர். பல்லா யிரக்கணக்கான தமிழர்கள் கூடி மூவர்ணக் கொடியை முற்றவெளியில் ஏற்றியிருந்தனர்.

இலங்கையின் சுதந்திரத்துக்கான போராட்டங்களில் தமிழர்களும் போராடியிருந்தனர். ஆயினும், காலணித் துவத்திலிருந்து விடுபட முன்பிருந்தே, தமிழருக்குரிய உரிமையை கிடைக்கவிடாது சிங்களவர்கள் தடுத்ததன் காரணமாகவே, சுதந்திரத்தின் போதான 1948 இல் உருவான முதலாவது சோல்பரி அரசமைப்பையும் தமிழர் தரப்பு நிராகரித்திருந்தது.

இதனடிப்படையில், இலங்கையின் சுதந்திர நாள் என்பது, தமிழர் வரலாற்றில் அழிக்க முடியாத பல வடுக்களைத் தந்து நிற்கும் கரிநாளாகவே உள்ளது.

இத்தகைய வரலாற்று அனுபவங்களைக் கண்டுவந்த நிலையிலும்-தமிழ் மக்களுக்கு எவ்வித பாதுகாப்பையும் வழங்க முடியாத - ஒற்றையாட்சிக்குள்ளேயே, தமிழ் அரசி யலை முடக்கும் சதியும் நடைபெற்று வருகின்றது.

ஒற்றையாட்சிமுறைமை தமிழ் மக்களுக்கு எவ்வித பாது காப்பையும் வழங்கப்போவதில்லை என்பதன் அடிப் படையிலேயே 74 வருடங்களாக தமிழ்த் தேசத்து மக்களாக ஒற்றையாட்சிக்குட்பட்ட 3 அரசமைப்புக் களையும் நிராகரித்து வந்துள்ளோம்.

தமிழ்த் தேசிய இனத்துக்குச் சொந்தமான மரபுவழித் தாயகம், தொன்மையான மொழி, எம்மைத் தக்கவைக் கக்கூடிய பொருளாதாரம், தனித்துவமான கலாசாரம் என்பவற்றை பாதுகாப்பதற்கான அடிப்படைத் தீர்வாக - இறைமை மற்றும் சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஸ்டிக் கட்டமைப்புடனான தீர்வையே வலியுத்தி வருகின்றோம்.

தமிழ்த் தேசிய இனம் என்னும் ஒற்றைக் காரணத்துக் காகவே, சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழர்களை இனப்படுகொலை செய்திருந்தது. இன்றும் கட்டமைக் கப்பட்ட இனவழிப்புக்களை தொடர்ச்சியாக செய்து கொண்டே வருகின்றது.

இலங்கைக்குக் கிடைத்துள்ள சுதந்திரம் என்பது தமிழ்த் தேச இனவழிப்புக்கு வழிவகுத்திருந்தது என் பதன் அடிப்படையிலேயே, கடந்த 74 வருடங்களாக இலங்கை சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேசம் கரிநாளாக அடையாளப்படுத்தி வருகின் றது.

தமிழ்மக்கள் இனவழிப்பைச் சந்தித்த பின்னரும் கூட, மீனவர்கள் மற்றும் விவசாயிகளின் இருப்புக்களை அழிக்கும் வகையில், கட்டமைக்கப்பட்ட இனவழிப்பு உச்சத்தைத் தொட்டிருக்கிறது.

அந்த வகையில் நாளைய இலங்கையின் சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தை தமிழ்த் தேசம் கரி நாளாகவே அனுஸ்டிக்க வேண்டும் என, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி அழைப்பு விடுக்கின்றது.

தமிழ்த் தேசத்தின் கரிநாளான நாளைய தினத்தில், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் போராட் டங்களுக்கும், கடற்தொழிலாளர்களினால் முன்னெடுக் கப்படும் அனைத்துப் போராட்டங்களிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பூரண ஆதரவு வழங் குவதுடன், அப்போராட்டங்களில் தமிழ் மக்கள் கலந்து கொண்டு வலுச் சேர்க்க வேண்டும் என் பதையும் கேட்டு நிற்கின்றோம்.- எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பசில் ராஜபக்ஷவினை அமெரிக்கா விசாரணை செய்ய வேண்டும்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன்

02.02.2022

கள்ள சந்தையில் டொலர்கள் வாங்கி வடகொரியாவிடம் ஆயுத கொள்வனவு செய்த தமது நாட்டு பிரஜையான நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினை அமெரிக்கா விசாரணை செய்து உண்மையை தெளிவுபடுத்த வேண்டும் என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச் சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று (புதன்கிழமை) இடம் பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,"கறுப்பு சந்தையில் டொலர்களை வாங்கி வட கொரியாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்ததாக இலங்கையின் நிதி அமைச்சரும் அமெரிக்க பிரஜையு மான பசில் ராஜபக்ஷ கூறியிருப்பது தற்போது சர்சை யாகியுள்ளது.

தமிழ் மக்களின் விடுதலை போராட்டம் என்பது சுயநிர் ணய உரிமை, சுயாட்சி போன்றவற்றை மையமாக கொண்டு நடைபெற்றது. விடுதலைப் போராட்டம் என்பது பேச்சுவார்த்தை மூலம் பேசி தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய விடயம்.

ஆனால் 2005 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு இந்த அரசாங்கம் மூர்க்கத்தனமாக போராட்டத்தை முன்னெடுத்தமை எல் லோருக்கும் தெரிந்த விடயம். யுத்தத்தை முன்னேடுத்து செல்வதற்காக பல கோடிகளை செலவிட்டு ஆயுதங்களை கொள்வனவு செய்தது.

முக்கியமாக சீனாவிலிருந்தும் பாகிஸ்தானில் இருந்தும் தற்போது வடகொரியாவில் இருந்து ஆயுதங்களை வேண் டியதாக கூறுகின்றார்கள். வடகொரியாவில் இருந்து பல மில்லியன் டொலர்களுக்கு கடன்களாக இராணுவ தள பாடங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

இந்த இராணுவ தளபாடங்களின் கொள்வனவு மற்றும் கடன் என்பன தற்போது எங்கு கொண்டு வந்து விட்டுள் ளது என்பது வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

ஆனால் பசில் ராஜபக்சவின் இத்தகைய விடயம் அன் றைய பாதுகாப்பு செயலாளராக இருந்தவரும் அமெரிக்க பிரஜையாக இருக்கின்ற இன்றைய இலங்கை ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சவுக்கும் தெரியும். அன்றைய பாது காப்புச் செயலாளர் மற்றும் இன்றைய நிதியமைச்சர் ஆகியோர் அமெரிக்க பிரஜையாக இருந்தவர்கள்.

அமெரிக்காவால் பொருளாதார தடை விதிக்கப்பட்ட நாட் டுடன் இவர்கள் கள்ளச்சந்தை மூலம் டொலர்களை கடத்தி அங்கிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தோம் என ஏற்றுக்கொள்கிறார். நிச்சயமாக அமெரிக்க அரசு பசில் ராஜபக்சவை மாத்திரமன்றி அன்றைய காலகட்டத்தில் இலங்கையை வழிநடத்திய தலைவர்களும் விசாரிக் கப்படவேண்டும்.

அன்று கொள்வனவு செய்யப்பட்ட ஆயுதங்கள் ஆயிரக் கணக்கான லட்சக்கணக்கான மக்களை கொன்று குவிப் பதற்கு உதவியாக இருந்தது. யுத்தத்திற்காக கள்ளச் சந்தை ஊடாக வடகொரியாவில் இருந்து கொண்டு வரப்பட்ட ஆயுதங்கள் என்பது ஒரு மனித படுகொலைக் கும், மனித உரிமை மீறலுக்குமாக இலங்கை அரசாங் கத்தால் அப்போது பாவிக்கப்பட்டது என்பதுதான் முக்கிய மான விடயம்.

ஆகவே இத்தகைய விடயம் தொடர்பாக இலங்கை அர சாங்கம் எந்தவொரு விசாரணைகளையும் நடத்தப் போவது கிடையாது. ஆனால் இவற்றை மேற்கொண்டது அமெரிக்க பிரைஜைகள் என்ற அடிப்படையிலும் இலங் கை நாடு என்பது இவர்களுடன் சம்பந்தப்பட்டது என் பதாலும் தங்கள் பிரஜைகளான பசில் ராஜபக்சவை விசாரிப்பதும் இலங்கை அரசு இதற்கு ஊக்கமளித்தது சம்பந்தமாகவும் விசாரிப்பது அமெரிக்காவின் கடமை யென நாம் கருதுகிறோம்.

ஆகவே இவ்வாறான நடவடிக்கைகளை கடந்த காலங் களில் இரகசியமாக தாங்கள் நிறைவேற்றியதாகவும் தற் போதும் கூட நாடு வங்குரோத்து நிலையில் டொலர் களுக்கு பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது, எதுவும் இறக்குமதி செய்ய முடியாத நிலமை இருக்கிறது நாளாந்தம் பொருட் களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு கொண்டிருக்கிறது, அரசாங் கம் எந்தவொரு பொருளுக்கும் விலை நிர்ணயிக்க முடியாது இருக்கிறது.

ஆகவே இவ்வாறான சூழ்நிலையில் மீண்டும் கள்ளச் சந்தையில் டொலர் வாங்கலாம் என்ற சாரப்பட நிதி அமைச்சரின் கூற்று இருக்கிறது. ஆகவே இது தொடர்பில் முழுமையான விசாரணை தேவை.

ஒரு பொருளாதார தடை விதிக்கப்பட்ட நாட்டில் அமெரிக்க பிரஜையை இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா என்பதை உரிய விசாரணை செய்து அமெரிக்க அரசு உண்மைகளை தெளிவுபடுத்த வேண்டும் என்பதை கேட்டுக்கொள்கிறோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

வயல் காணிகளில் தமிழர் விவசாயம் செய்யக் கூடாது! குருந்தூர்மலையில் பௌத்த பிக்கு அடாவடி

02.02.2022



முல்லைத்தீவு குமுளமுனை குருந்தூர்மலை அடிவாரத்தில் உள்ள தண்ணிமுறிப்பு, குமுளமுனை கிராமத்தைச் சேர்ந்த தமிழ் மக்களுக்குச் சொந்தமான வயல் காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது என குருந்தூர்மலையில் அமர்ந்துள்ள பௌத்த பிக்கு தடை விதித்துள்ளார்.

மேலும் தெரியவருகையில், குருந்தூர் குளம் நீர்ப்பாசன எல்லைக்குள் அடங்கும் 07 குடும்பங்களுக்கு சொந்தமான 36 ஏக்கர் வயல் காணிகளில் கடந்த நவம்பர் மாதம் கால போக செய்கையை மேற்கொள்ள காணி உரிமையாளர்கள் முற்பட்டுள்ளார்கள்.

அவ்வேளை அவ்விடத்துக்கு வருகைதந்த குருந்தூர் மலையில் அமர்ந்துள்ள கல்கமுவ சாந்தபோதி நாயக்க தேரர் என்ற பௌத்த பிக்குவும் தொல்லியல் திணைக்களத்தினரும் மேற்படி காணிகள் அனைத்தும் குருந்தூர் மலை புண்ணிய பௌத்த பூமிக்கு சொந்தமான தொல்லியல் நிலங்கள் எனவும் இப்பகுதியில் இனிமேல் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாது எனவும் அவ்வாறு ஈடுபட்டால் கைது செய்வோம் என அச்சுறுத்தியுள்ளதாகவும் காணி உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கடந்த கால போக செய்கையை செய்ய முடியாது தாம் விவசாய நடவடிக்கையைக் கைவிட்டுள்ளதாகவும் காணிக்குரிய ஆவணங்கள் அனைத்தும் இருந்தும் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம் காணிக்குரிய அனுமதிகளை உறுதிப்படுத்துள்ள நிலையிலும் பௌத்த பிக்குவின் அச்சுறுத்தல் காரணமாக அந்த நிலங்களில் விவசாய நடவடிக்கையை கடந்த கால போக செய்கை காலம் முதல் கைவிட்டுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

பௌத்த பிக்குவால் செய்கை பண்ணுவதற்கு தடை செய்யப்பட்ட இந்த விவசாய நிலங்கள் பரம்பரை பரம்பரையாக தாம் விவசாயம் மேற்கொண்டுவந்த நிலங்கள் என்பதோடு தமது வாழ்வாதாரத்தை தக்க வைத்துக்கொள்வதற்கான தமது பூர்வீக சொத்து எனவும் பாதிக்கப்பட்டுள்ள 07 காணி உரிமையாளர்களான தமிழ் மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சம்மந்தப்பட்ட தரப்புகள் குறித்த விவசாய நிலங்களில் தடையின்றி தாம் விவசாய நடவடிக்கையை மேற்கொள்ள உதவிபுரிய வேண்டும் எனவும் காணி உரிமையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் வடபகுதியில் அதிகரிப்பதற்கு கடற்படையினர், கடற்தொழில் அமைச்சர் ஆகியோரோடு இவர்களை வழிநடாத்தும் அரசாங்கமுமே காரணம்

முன்னாள் வடமாகாணசபை உறுபபினர் துரைராசா இரவிகரன்

02.02.2022

யாழ் - வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் உயிரிழந்த மீனவர்களின் துயரிலும், அதேபோல பருத்தித்துறை, சுப்பர் மடம், முனை உள்ளிட்ட பகுதிகளில் தொழிலினை இழந்து தவிக்கின்ற மீனவர்களுடைய துயரிலும் தாமும் பங்கெடுப்பதாக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா இரவிகரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அத்தோடு இந்திய இழுவைப்படகுகளின் அத்துமீறல் செயற்பாடுகள் வடபகுதியில் அதிகரிப்பதற்கு கடற்படையினர், கடற்றொழில் அமைச்சர் ஆகியோரோடு இவர்களை வழிநடாத்தும் அரசாங்கமுமே காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரத்தில் கைவைக்கும் செயற்பாடானது தொடர்ச்சியாக பல தரப்புக்களாலும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

குறிப்பாக இந்திய இழுவைப்படகுகள் மூலமாகவும், தென்னிலங்கை மீனவர்களாலும் எங்களுடைய மீனவர்கள் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டுவருகின்றனர்.

அதன் ஒரு கட்டமாக பருத்தித்துறை, சுப்பர்மடம், முனை ஆகிய பகுதிகளில் பாரிய அளவில் எமது மீனவர்களுடைய தொழில் உபகரணங்கள் இந்திய இழுவைப்படகுகளால் சேதமாக்கப்பட்டுள்ளது. இதனால் எமது மீனவர்கள் கொதித்துப்போயிருக்கின்றனர்.

தற்போது எமது மக்கள் அன்றாட வாழ்வாதாரத்தினை நகர்த்திச்செல்வதில் பாரிய இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்துள்ளநிலையில், இந்திய மீனவர்கள் அத்துமீறி எல்லையைத்தாண்டி எமது கடற்பரப்பிற்குள் வந்து, எமது மீனவர்களின் வாழ்வாதாரத்தினைப் பாதிப்படையச் செய்கின்றனர்.

அதேவேளை வடமராட்சி கிழக்கில் வத்திராயன் என்னுமிடத்தில், இரண்டு மீனவர்களின் உயிர் காவுகொள்ளப்பட்டிருக்கின்றது. இவ்வாறு உயிரிழந்த எமது இரு மீனவர்களின் இறப்பின் பின்னணியில் இந்திய இழுவைப்படகுகள் இருந்திருக்கலாம் எனவும் நம்பப்படுகின்றது.

இவ்வாறாக எமது வடபகுதியில் அத்துமீறிய கடற்றொழில் செயற்பாடுகளில ஈடுபடுகின்ற இந்திய மீனவர்கள் மீதும், தென்னிலங்கை மீனவர்கள் மீதும் உரியவர்கள் இது வரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை.

தற்போது வடபகுதியில் இவ்வாறான அத்துமீறல்கள் அதிகரித்துச்செல்வதற்கு இலங்கை கடற்படையும், கடற்றொழில் அமைச்சரும், இவர்களை வழிநடத்தும் அரசாங்கமுமே முழுமையான காரண கர்த்தாக்களாக காணப்படுகின்றனர்.

எனவே இனியும் எமது மீனவர்களின் வயிற்றில் அடிக்க எவரையும் அனுமதிக்கவேண்டாம் என உரியவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

அத்தோடு இந்த அத்துமீறல் செயற்பாடுகளுக்கு எதிரான நடவடிக்கைகளை உரியவர்கள் விரைந்து முன்னெடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை யாழ். வடமராட்சி கிழக்கு, வத்திராயன் பகுதியில் உயிரிழந்த மீனவர்களுடைய குடும்பங்களின் துன்பத்திலும், அதேபோன்று சுப்பர்மடம், முனைப்பகுதி உட்பட பலபகுதிகளிலும் தொழில்களை இழந்து தவிக்கும் மீனவர்களின் துன்பத்திலும் நாமும் பங்குகொள்கின்றோம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றார்

எல்லை தாண்டும் மீனவர்கள் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பேச்சுக்கு தமிழ்நாட்டு முதலமைச்சர் அழைப்பு

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம் கே சிவாஜிலிங்கம்!

01.02.2002

எல்லை தாண்டும் இந்திய மீனவர்களால் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்தி தீர்வு காண்பதற்கு தமிழ்நாடு வருமாறு தமிழ் நாட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்துள்ளதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான எம் கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

நேற்று சுப்பர்மடம் பகுதியில் மீனவரகள் போராட்டத்தில் கலந்து கொண்டபின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அண்மைக் காலமாக வட பகுதி கடலிலே எங்களுடைய கடற்றொழிலாளர்கள் தங்களுடைய இலட்சக்கணக்கான, கோடிக்கணக்கான கடற்றொழில் உபகரணங்களை மாத்திரமல்ல தங்களுடைய இன்னுயிர்களையும் திறக்கின்ற நிலமை ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக இந்தியாவிலிருந்து எல்லை தாண்டி வருகின்ற ரோளர் பாரிய இழுவை மடி படகுகள் மோதி பாரிய சேதம் ஏற்பட்டுருக்கிறது.

இதே போல இலங்கை கடற்படையினரது படகுகளாலும் வேண்டுமென்றும் விபத்தினாலும் கொல்லப்பட்டு கரை ஒதுங்குகின்ற கடற்றொழிலாளர்களது சடலங்களால் ஒரு பதட்டமான சூழல் அதிகரித்திருக்கிறது.

வடமராட்சி மருதங்கேணி வத்திராயன் பகுதியில் இரண்டு கடற்றொழிலாளர்களது உடல்கள் கரை ஒதுங்கியிருக்கின்றன. இதே போன்று பருத்தித்துறை பொன்னாலை வீதியிலே சுப்பர்மடம் பகுதியிலே வீதியை மறித்து நேற்று முன்தினம் காலை 8:00 மணியிலிருந்து அவர்கள் மறியல் போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். பொலிகண்டி வரை வீதி போக்குவரத்து முடக்கப்பட்டிருக்கிறது.

இலங்கை அரசாங்கம் இதை பற்றி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இலங்கை இந்திய அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஈழ மீனவர்களும், தமிழக மீனவர்களும், நடுக்கடலிலே மோதுவதை இல்லாமல் செய்ய வேண்டும்.

தமிழக அரசும் வட மாகாணத்திலே இருக்கக் கூடிய சங்கங்கள், உட்பட மக்கள் பிரதிநிதிகளும் பேச வேண்டும். இப்பொழுது கூட இரண்டு தினங்களுக்கு முன்னர் மாண்புமிகு முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் உடனடியாக பேச்சுவார்த்தை நடாத்தி இந்தமாதிரியான பதட்டங்களை குறைக்க முன்வருமாறு கேட்டிருப்பதாக எனக்கு செய்தி அனுப்பியிருக்கிறார்கள்.

இப்பொழுது கூட அவரது உதவியாளர் வழக்கறிஞர் ராதாகிருஷ்ணன் அவர்கள் இன்றிரவு தமிழக முதலமைச்சருடன் பேசிவிட்டு செய்தி தருவதாக சொல்லியிருக்கிறார்.

உடனடியாக ஒரு போர் நிறுத்தம் போல அந்த எல்லையில் இருப்பவர்கள் எல்லை தாண்டக் கூடாது. இல்லாவிட்டால் எங்களுடைய மக்கள் பட்டிணியாலும் பசியாலும் தான் பாதிக்கப்படுவார்கள். மீதி விடயங்களை பேசி ஒரு இணக்கத்தின் அடிப்படையில் தீர்வு காணப்ட வேண்டும். இலங்கை அரசு இதில் அக்கறை காட்டும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது. இந்திய மத்திய அரசுக்கும் ஏனோ தானோ நிலவரம்தான். இதிலே அவன் செத்தாலும் இவன் செத்தாலும் தமிழர்கள் என்ற நிலமை இருக்கிறது.

அவர்கள் மிகப்பெரிய எண்ணிக்கையில் இருக்கிறார்கள். பொருளாதாரத்தில் பலமாக இருக்கிறார்கள். தற்போது விலை வாசி அதிகரித்திருக்கும் நிலையில் பனையால் விழுந்தவனை யானை மிரிப்பதாக உள்ளதாகவும் உடனடியாக இந்த பிரச்சினை தீர்க்க வேண்டும். அதற்க்கான முழு முயற்சிகளை உடனடியாக எடுப்போம் என்றார்

தொடரும் வடபகுதி மீனவர்களின் சாலை மறியல் கவனயீர்ப்பு போராட்டம்...

01.02.2022



இந்திய மீனவர்களது அத்துமீறலை நிரந்தரமாக தடுத்து நிறுத்த வலியுறுத்தி வடமராட்சி மீனவர்கள் முன்னெடுத்து வரும் சாலை மறியல் கவனயீர்ப்பு போராட்டம் இன்று 2வது நாளாகவும் தொடர்கிறது.

எல்லைதாண்டி வடக்கு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டு வரும் இந்திய மீனவர்களால் தினம் தினம் சொத்தழிவுகளை சந்தித்துவரும் நிலையில் தற்போது உயிரிழப்புகளையும் சந்திக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலை தொடர்பில் அரச தரப்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு பலதடவை தெரியப்படுத்தியும் இதுவரை சரியான நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக இந்த துயரம் தொடர்கதையாகி வருகிறது.

இத்துயரத்திற்கு நிரந்தர தீர்வாக இந்திய மீனவர்களது அத்துமீறலை நிரந்தரமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி வடமராட்சி வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்கு மீனவர்களால் நேற்று (ஜன-31) முதல் சாலை மறியல் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி பருத்தித்துறை முதல் கடற்கரை வீதியூடான



சாலை போக்குவரத்தை முற்றாக தடைசெய்து சாலை மறியல் கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இன்றைய தினம் (பெப்-01) 2வது நாளாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

வாக்குறுதிகளை நம்பி எமது போராட்டத்தை நாம் கை விடப்போவதில்லை என்றும் இந்திய மீனவர்களது அத்து மீறலை தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கையினை எடுத்து எமது கடல் வளத்தையும், வாழ்வாதாரத்தையும், உயிர்களையும் பாதுகாக்கும் வரை இப்போராட்டம் தொடரும் என மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மீனவர்களது இக்கவனயீர்ப்பு போராட்டத்தின் மூலம்





சிறீலங்கா இராணுவத்தினர், பொலிசாரின் டிப்பர் வாகனங்களிலும் மண் கடத்தல் இடம்பெறுகிறது

பெப்ரவரி 14, 2022

கிளிநொச்சி மாவட்டத்தில் இடம்பெறும் சட்டவிரோத மணல் அகழ்வு பொலிசார், இராணுவத்தினரின் துணையுடனேயே இடம்பெறுகிறது.

பொலிசாரின் டிப்பர் வாகனங்கள் கூட மணல் ஏற்று வதாக மக்கள் தெரிவிக்கிறார்கள் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் பல இடங்களில் மணல், கிரவல் சட்ட விரோதமாக அள்ளப்படுகிறது. பொலிசாரின் டிப்பர் வாகனங்களும் மணல் கடத்தலில் ஈடுபடுவதாக மக்கள் சொல்கிறார்கள். அந்த வாகன இலக்கங்



களையும் சொல்கிறார்கள்.

பல இடங்களில் இராணுவ காவலரண்கள் அமைக்கப் பட்டுள்ளன. அந்த இடங்களை கடந்தே மணல் டிப்பர் கள் செல்கின்றன. எப்படி அவை செல்கின்றன.

மணல் அகழ்வு பற்றிய தகவல்களை பொலிசாருக்கு வழங்கினால், தகவல் தந்தவர்களின் விபரங்களையும் பொலிசார் கடத்தல்காரர்களிற்கு வழங்கி விடுகிறார் கள்.- என தெரிவித்தார்.

கொலைக்குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதி! காணாமல் போனவர்களின் உறவுகள் கொந்தளிப்பு!

பெப்ரவரி 11, 2022

அரசதலைவரின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளால் முன் னெடுக்கப்பட்ட போராட்டத்தை பொலிசார் தடுத்து நிறுத் தியமையால் வவுனியா மன்னார் பிரதான வீதியில் பதற்ற மான சூழல் ஏற்ப்பட்டிருந்ததுடன், பொலிசா ருக்கும் போராட்டக்காரர்களுக்கும் இடையில் முரன்பாடு ஏற்ப் பட்டது.

வவுனியா பல்கலைக்கழகத்தின் ஆரம்ப விழா நிகழ்வு பம்பைமடு பகுதியில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளா கத்தில் ஜனாதிபதியின் தலைமையில் இன்று காலை இடம பெற்றது.

இதனையடுத்து ஜனாதிபதியின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்கலைக்கழகத்திற்கு முன்பாக காணாமல் போனவர்களின் உறவினர்களால் ஆர்பாட்டம் ஒன்று ஏற் பாடு செய்யப்பட்டிருந்தது. ஆர்ப்பாட்டம் இடம்பெறவிருந்த குறித்த பகுதிக்குச் செல்ல முற்பட்ட காணாமல் போனவர் களின் உறவினர்களை பம்பைமடு இராணுவ சோதனைச் சாவடியில் குவிக்கப்பட்டிருந்த பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் வழிமறித்து முன்செல்ல விடாமல் தடுத்து நிறுத்தினர்.

இதனால் ஆர்பாட்டக்காரர்களுக்கும் பொலிசாருக்கும் இடையில் முரண்பாடு ஏற்ப்பட்டதுடன், குழப்பநிலை ஏற்ப் பட்டது.

எமது உறவுகள் காணாமல் போகவில்லை. காணாமல் ஆக்கப்பட்டார்கள். நாங்கள் இந்த நாட்டின் பிரஜை இல் லையா, நடமாடுவதற்கான சுதந்திரம் எமக்கில்லையா, எங்களை மட்டும் எப்போதுமே எதற்காக தடுக்கிறீர்கள்? நாங்கள் பயங்கரவாதிகளா,எமக்கு எப்போதுமே கம்பி வேலி பிரயோகம் தானா? என்று பொலிசாரைப் பார்த்து அவர்கள் கேள்வி எழுப்பினர்.

கொலைக்குற்றவாளியே நாட்டின் ஜனாதிபதியாக இருக் கிறார். அவர்களை நம்பியே நாம் எமது பிள்ளைகளை ஒப்படைத்தோம். எனவே அவரிடம் நாம் சில கேள் விகளைக் கேட்க வேண்டும். அதற்கு அனுமதி வழங் குமாறு போராட்டக்காரர்கள் தெரிவித்தபோதும் அதனை பொருட்படுத்தாத பொலிசார் அவர்களை முன்செல்ல அனு மதிக்கவில்லை. இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் ஏற்பட்டிருந்தது.

இதனையடுத்து ஜனாதிபதியின் பாதுகாப்பு பிரிவின் அதிகாரிகள் குறித்த போராட்டக்காரர்களுடன் கலந்துரை யாடியதுடன் இருவரை மாத்திரம் வந்து ஜனாதிபதியை சந்திக்குமாறு கோரினர். அதற்கு எதிர்ப்பு தெரிவித்த அவர்கள் நாம் அவரை சந்திக்க வரவில்லை. எங்கள் அனைவரையும் முன்செல்ல அனுமதிக்குமாறு கோரி யதுடன். கொலைக்குற்றவாளி எப்படி நீதிபதியாக மாற முடியும் என்றனர்.

இருமணி நேரத்திற்கும் மேலாக குறித்த பகுதியில் பொலிசார் மற்றும் விசேட அதிரடிப்படையினர் அவர்களை வழிமறித்து முன்செல்ல முடியாதவாறாக நின்றனர். இந்நிலையில் போராட்டக்காரர்கள் திரும்பிச்சென்றனர்.









குமாரபுரம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல்

பெப்ரவரி 11.2022

திருகோணமலை - குமாரபுரம் படுகொலையின் 27 ஆவது ஆண்டு நினைவேந்தல் தினம் இன்று வெள்ளிக் கிழமை மாலை குமாரபுரத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

குமாரபுரம் படுகொலையில் உயிரிழந்தவர்களின் உற வினர்கள், பிரதேச மக்கள் ஒன்றிணைந்து நினை வேந்தல் நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

படுகொலையில் உயிரிழந்தவர்களுக்கு ஆத்மா சாந்தி வேண்டி குமாரபுரம் - சித்தி விநாயகர் ஆலயத்தில் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றது.

மேலும், குமாரபுரம் நினைவுத் தூபிக்கு சென்று தீபம் ஏந்தி, மலர்தூவி உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத் தினர்.

1996.02.11ஆம் திகதி இடம்பெற்ற குமாரபுரம் படுகொலை யில் சிறுவர்கள், பெண்கள், ஆண்கள் உட்பட 26 நபர்கள் உயிரிழந்ததோடு, 25 நபர்கள் படுகாயமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





குமாரபுரம் படுகொலையின் 27ஆம் ஆண்டு நினைவேந்த முயன்ற மக்களை அச்சுறுத்திய புலனாய்வாளர்கள்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி

பெப்ரவரி 11.2022



மூதூர் குமாரபுரம் கிராமத்தில் இலங்கை இராணுவத் தினரால் மேற்கொள்ளப்பட்ட அழித்தொழிப்பு நடவடிக்கை யின் போது கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்களின் நினைவேந்தலை உறவுகள் முன்னெடுக்க முனைந்த போது புலனாய்வாளர்கள் கடும் அச்சுறுத்தலை மேற் கொண்டதனைத் தாம் கடுமையாகக் கண்டிப்பதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

மக்கள் முன்னணியின் பிரதிப் பொதுச் செயலாளர் இ.ஸ்ரீஞானேஸ்வரன் இன்று விடுத்துள்ள ஊடக அறிக்கை யிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

11.02.1996 அன்று சுற்றிவளைக்கப்பட்டு குமாரபுரம் மக்கள் படையினரின் தாக்குதலுக்கு உள்ளாகிய போது கர்ப்பிணிப் பெண்கள் உட்பட 26 பேர் குறித்த சம்பவத்தில் பலியானதுடன் 25 பேர் காயமடைந்தனர்.

அப்படுகொலையின் 27 ஆம் ஆண்டு நினைவேந்தலைச் செய்ய முற்பட்ட கிராமமக்கள் தொடர்ச்சியான அச்சுறுத் தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இவ் அச்சுறுத்தலின் உச்ச நடவடிக்கையாக கடந்த 10 ஆம் திகதி கொல்லப்பட்ட மக்களின் உறவினர்களைச் சந்தித்த புலனாய்வாளர்கள் தாம் நீதிமன்ற தடை உத்தரவைப் பெற்றிருப்பதாகவும் நினைவேந்தினால் கைதுசெய்ய வேண்டிய நிலை ஏற்படும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

ஒரு சிலரது பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை நினை வேந்தலைச் செய்ய செல்ல வேண்டாம் எனவும் அச்சுறுத் தியுள்ளனர்.

இவ் அச்சுறுத்தலினால் கொல்லப்பட்ட உறவுகளைக் கூட நினைவேந்தப் பயந்து சில உறவினர்கள் 11 ஆம் திகதி வழமையாக நடாத்தப்படும் பொங்கல் நிகழ்விலும் மாலை நினைவுக்கல் நாட்டப்பட்டுள்ள இடத்தில் நிகழும் நினை வேந்தலிலும் கலந்துகொள்ளவில்லை.



இவ்வாறான அச்சுறுத்தல்கள் ஒருபோதும் தமிழினத்தை நிம்மதியான வாழ்வுக்கு இட்டுச்செல்லப்போவதில்லை. சர்வதேச விசாரணையொன்றின் ஊடாக தமிழருக்கான நீதி கிடைக்கும் மட்டும் தமிழ் மக்கள் தமது உரிமைகளை நிலைநாட்டப் போராடவேண்டியிருக்கும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறித்த அச்சுறுத்தல் விடயத்தை உரிய சான்றுகளுடன் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணை யாளருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



திரு.
பா. தயாமேகன்

அரசியற்துறை
தமிழீழ விடுதலைப் புலிகள்

02.02.2022

தமிழீழம்.

சிறீலங்கா சுதந்திர தினம் – தமிழர் தேசத்தின் கரிநாள்

மதிப்புக்குரிய தமிழீழ மக்களே! மாசி **4**ம் திகதி, ஈழத்தமிழர்களாகிய நாம் காலனித்துவவாதிகளின் கைகளிலிருந்து விடுபட்டு சிங்கள இனவாதிகளின் கோரப்பிடிக்குள் சிக்கிக்கொண்ட அவலத்தின் ஆரம்ப நாளாகும். இதனால் சிறீலங்கா சுதந்திரம் அடைந்த நாளை தமிழீழத்திலும், புலத்திலும் தமிழ்மக்கள் கரிநாளாக தொடர்ந்தும் கடைப்பிடித்து வருகின்றார்கள்.

பிரித்தானியர்களிடம் இருந்து இலங்கைக்கு **1948** ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்தபோதும் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசு இயங்கிய காலத்தைத் தவிர, இன்றைய நாள் வரை விடுதலைக் காற்றைத் தமிழ் மக்கள் சுவாசித்ததே கிடையாது. ஏறத்தாழ **442** ஆண்டுகள் காலனித்துவ நாடுகளின் ஆளுகைக்குள் அடிமைப்பட்டிருந்த ஈழத்தமிழர்கள், அதன் தொடர்ச்சியாகக் கடந்த **74** ஆண்டுகளாக பௌத்த சிங்களப் பேரின வாதத்தின் அடக்கு முறைக்கெதிராக அறவழியிலும், ஆயுதவழியிலும் போராடியே வந்திருக்கிறார்கள். சமநேரத்தில் இலங்கைத்தீவில் தமிழ் மக்களை இல்லாதொழிப்பதற்காக பேரினவாதச் சிங்கள அரசு திட்டமிட்ட இனவழிப்பு நடவடிக்கைகளை கடுகதிவேகத்தில் நடைமுறைப்படுத்தி வருகிறது.

கடந்த **30** வருடங்களுக்கும் மேலாக சிங்களப் பேரினவாத அரசு தமிழ் மக்கள் மீது நிகழ்த்திய கொடிய யுத்தத்தில் சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்டு தமிழ் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனவழிப்பு மற்றும் போர்க்குற்ற நடவடிக்கைகளுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட மக்களின் உறவினர்கள் வீதிகளில் தொடர்ந்தும் இரவு பகலாகத் தீர்வு எதுவும் இன்றிப் போராடி வருகின்றார்கள். சர்வதேசச் சட்ட நடைமுறைமைகளைக் கடைப்பிடிக்காது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறைவாசம் அனுபவிக்கும் தமிழ் அரசியல் கைதிகள், யுத்தம் முடிவடைந்து 12 ஆண்டுகளைக் கடந்தும் இன்றுவரை விடுதலை செய்யப்படவில்லை. தமிழீழ மக்களின் மண் மீட்புக்கான ஆயுதப் போர் அமைதி பெற்று ஒரு தசாப்தம் தாண்டியும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவில்லை.

பலவந்தமாக தமிழர் நிலம் வன்பறிப்புச் செய்யப்பட்டுவரும் நிலையில், இராணுவ முகாம்களுக்கு முன்பாக நின்று பாதிக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்ந்தும் இரவு பகலாகப் போராடி வருகின்றார்கள். எமது மக்களின் காப்பரணாக நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தை அழிக்க உதவிய சர்வதேச நாடுகள், ஈழத் தமிழர்களின் நிரந்தர அரசியல் தீர்வில் அக்கறை காட்டவில்லை. சர்வதேச நாடுகள் தமது பூகோள, பிராந்திய ஆதிக்க அபிலாசைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. ஈழத் தமிழர்கள் பூரண விடுதலை பெற்ற இனமாக வாழவேண்டும் என நாம் எமது மக்களின் சார்பாக வலியுறுத்துகிறோம்.

விடுதலைப் புலிகளின் அரசியற்துறையினராகிய நாம், மாசி **4**ம் திகதியைத் கரிநாளாக எம் மக்களோடு ஒன்றிணைந்து கடைப்பிடிப்பதோடு, தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்புக்குரலை சர்வதேசத்தை நோக்கி ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டும். தமிழர் தாயகத்திலும், புலம்பெயர் நாடுகளிலும் தமிழ்த் தேசிய விடுதலை நோக்கிய சனநாயக வழிப் போராட்டங்களை அனைவரும் ஒன்றிணைந்து முன்னெடுக்க வேண்டு மென அறைகூவல் விடுக்கிறோம்.

எமது தேசியத் தலைவர் மேதகு வே.பிரபாகரன் அவர்களின் சிந்தனைக்கமைவாக எமது போராட்ட வடிவங்கள் மாறினாலும் எமது இலட்சியம் என்றும் மாறாது என்ற கோட்பாட்டிற்கமைய, சனநாயக அரசியல் வழிமுறையில் ஒன்றுபட்ட மக்களாக, அனைத்து அறவழிப் போராட்டங்களிலும் தமிழ்த் தேசிய சக்தியாக அணிதிரண்டு போராடி, எமது இறுதி இலட்சியமாகிய சுதந்திர தமிழீழத்தை அமைப்போம் என உறுதியேற்போமாக.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

பா. தயாமோகன்

02/02/22

.....

அரசியற்துறை

தமிழீழ விடுதலைப் புலிகள்.

மாமனிதர் அரியநாயகம் சந்திரநேரு (அம்பாறை மாவட்ட முன்னாள் பா.உ.) அவர்களின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் மட்டக்களப்பு – 08.02.2022







இலங்கைஅரசின் தமிழர் மீதான இனப்படுகொலை உச்சம் பெற்றிருந்த வேளையில் சிறீலங்கா அரசின் தமிழர் மீதான இனப்படுகொலையில் இருந்து உறவுகளை காக்கக்கோரி 12.02.2009 அன்று சுவிஸ் ஜெனிவா ஐ.நா முன்றலில் தன்னைத் தீயில் எரித்து ஈகைச் சாவடைந்த "ஈகைப்பேரொளி முருகதாசன்" அவர்களின் 13ம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.






"கனிய மணல் அகழ்வு என்னும் போர்வையில் தமிழ் மக்களின் நிலங்களை ஆக்கிரமிக்காதே" கொக்கிளாய் எல்லை கிராம நில அபகரிப்புக்கு எதிராக மக்கள் போராட்டம்... 12.02.2022







நாட்டுப்பற்றாளர், ஊடகவியலாளார் புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி அவர்களுக்கு யாழ். ஊடக அமையத்தில் 13 ஆம் ஆண்டு நினைவேந்தல் 12.02.2022





கனடிய செய்திகள்

கொன்சர்வேடிவ் கட்சியின் தலைவர் எரின் ஓ ரூல் பதவி நீக்கம். இடைக்காலத் தலைவராக கன்டிஸ் பெர்கன் தேர்வு

பெப்ரவரி 02, 2022

கனேடிய சமஷ்டி கொன்சேவடிவ் கட்சியின் பெரும் பான்மை பழமை வாத நாடாளு மன்ற உறுப்பினர்கள், எரின் ஓரூலை (ErinO'Toole) கட்சியின் தலைவர் பதவியில் இருந்து நீக்கியுள்ளார்கள்.



கடந்த புதன் கிழமை காலை இடம் பெற்ற கட்சியின் நாடாளுமன்றக் குழுக்கூட்டத்தில் இடம் பெற்ற வாக் கெடுப்பில், அவருக்கு எதிராக 73பேரும், ஆதரவாக 45பேரும் வாக்களித்தார்கள். குழுவின் தலைவர் வாக் களிக்கவில்லை.

இதையடுத்து எரின் ஓரூல் தலைவர் பதவியைத்துறக்கும் கடிதத்தைக்கையளித்தார். ஆனால், ஒன்றாரியோவின் டுறெம் தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகப் பதவியில் தொடரவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கனேடிய சமஷ்டி கொன்சேவடிவ் கட்சியின் இடைக்கால தலைவியாக, இதுவரை துணைத்தலைவர் பதவியை வகித்து வந்த மனிரோபா மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் கன்டிஸ்பெர்கன் (CandiceBergen) நியமிக்கப் பட்டுள்ளார்.

கட்சித்தலைவர் பதவியில் இருந்து எரின் ஓரூல் நீக்கப்பட்ட பின்னர், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் அவர் தெரிவு செய்யப்பட்டார்.

இடைக்கால தலைவர் பதவிக்குப்போட்டியிட்ட ஒன்பது பேரில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கன்டிஸ்பெர்கன் கட்சிக்கு நிரந்தர தலைவர் தெரிவு செய்யப்படும் வரை



பதவி வகிப்பார்.

தலைவர் பதவிக்கான தேர்தல் எப்போது இடம் பெறுமென அறிவிக்கப்படவில்லை. இடைக்காலதலைவர், கட்சித் தலைவர் பதவிக்குப் போட்டியிட முடியாதென்பது குறிப்பிடத் தக்கது

ரொறன்ரோ பிராந்திய பாடசாலை மாணவருக்கு மருத்துவ தராதரத்தில் உள்ள சுவாசக் கவசங்கள் வழங்க கல்விச்சபை முடிவு

பெப்ரவரி 02, 2022



ரொறன்ரோ பிராந்திய கல்விச் சபை, மருத்து வத்தரத்தில் உள்ள சுவாசக்கவசங்களை மாணவர்களுக்கு வழங்கு வதற்கு முடிவு செய்துள்ளது.

இந்தக் கல்வியாண்டின் இறுதிவரை, ஒரு நாளுக்கு ஒரு மாணவருக்கு ஒரு சுவாசக்கவசம் வீதம் வழங்குவதென கல்விச்சபையின் நிர்வாக சபைக் கூட்டத்தில் முடிவெடுக் கப்பட்டள்ளது.

இதற்கு மாகாண அரசு பணம் வழங்க மாட்டா தென் பதால், பாடசாலைச்சபையின் பணத்தைக்கொண்டே இவை கொள்வனவு செய்யப்படவுள்ளன.

இதற்கு இரண்டு மில்லியன் டொலர் வரை செலவாகவுள் ளது. பள்ளிகளில் 30 சதவீத்துக்கு மேல் கோவிட் தொற்று அவதானிக்கப்பட்டால் மட்டுமே பள்ளிகளை மூடுவது குறித்து சிந்திக்கப்படும் என அரசு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா தடுப்பூசிகளிற்கு எதிரான பாரஊர்திச் சாரதிகளின் ஆர்ப்பாட்டத்தை அடுத்து கனடா தலைநகரில் ஆவசரகால நிலை பிரகடனம்

பெப்ரவரி 06, 2022



தடுப்பூசிகளிற்கு எதிரான பாரஊர்திச்சாரதிகளின் ஆர்ப பாட்டங் களை தொடர்ந்து கனடாவின் தலைநகரில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளத ாக ஒட்டாவா மேயர் அறிவித்துள்ளார்.

வாகனச்சாரதிகள் தடுப்பூசி செலுத்திக்கொள்ளவேண்டும் என்பதற்கு எதிராக ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரபேரணி காரணமாக நகரத்தில் நிலைமை முற்றிலும் கட்டுப்படுத்த முடியாததாக மாறியுள்ளது என ஒட்டாவா மேயர் ஜிம் வட்சன் தெரிவித்துள்ளார்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரஜைகளின் பாதுகாப்பிற்கு அச் சுறுத்தலாக மாறியுள்ளனர் அவர்களுடன் ஒப்பிடுகையில் பொலிஸாரின் எண்ணிக்கை குறைவாகவே காணப் படுகின்றது என மேயர் தெரிவித்துள்ளார்.

பாரஊர்திச்சாரதிகள் தடுப்பூசி செலுத்திக்கொள்ள வேண்டும் என்ற அரசாங்கத்தின் அறிவிப்பிற்கு எதிராக ஆரம்பமான பாரஊர்திச்சாரதிகளின் சுதந்திர வாகனத் தொடரணி ஒட்டாவாவை செயல்இழக்க செய்துள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் சத்தம் எழுப்புவது சைரன்களின் ஒலியை எழுப்புவது பட்டாசுகளை வெடிப்பது போன்ற நடவடிக்கைகளின் மூலம் உணர்வற்றவர்கள் போல நடந்துகொள்கின்றனர் என மேயர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் தோற்றுக்கொண்டிருக்கின்றோம் எங்கள் எண் ணிக்கை போதாதது இதனை மாற்றி எங்கள் நகரை நாங்கள் மீட்டெடுக்கவேண்டும் என மேயர் தெரிவித்துள் ளார்.

அவசரகாலநிலைமையின் கீழ் என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பது குறித்து மேயர் எதனையும் தெரி விக்கவில்லை எனினும் ஆர்ப்பாட்டக்காரர்களிற்கு உதவு பவர்கள் கைதுசெய்யப்படலாம் என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

ஒட்டவாமக்கள் இந்த ஆர்ப்பாட்டங்களிற்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்

மக்களுக்கு இலவச கொரோனா -19 விரைவு சோதனைக் கருவிகளை இலகுவாகப் பொற்றுக்கொள்வதற்கான வளங்களை ஒன்ராறியோ விரிவுபடுத்துகிறது

பெப்ரவரி 11, 2022

மக்கள் தமது வீடுகளிலேயே பயன்படுத்தக்கூடிய கோவிட்-19 விரைவு சோதனைக் கருவிகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளத்தக்க வகையில் அதற்கான வளங்களை ஒன் ராறியோ பரவலாக்கியுள்ளது. வாரந்தோறும் 5.5 மில் லியன் விரைவு சோதனைக் கருவிகளை மாநிலமெங் குமுள்ள மருந்தகங்கள், பல்பொருள் அங்காடிகள், சமுக நிறுவனங்கள் ஊடாக வரும் 8 வாரங்களுக்கு விநி யோகிக்கப்படும்.

இவற்றை இலவசமாக 2,300இற்கும் மேற்பட்ட பல் பொருள் அங்காடிகளிலும் மருந்தகங்களிலும் இவற்றின் கையிருப்பு இருக்கும் வரை ஒரு குடும்பத்துக்கு 5 கரு விகள் அடங்கிய ஒரு பெட்டி என்ற விகிதத்தில் பெற்றுக் கொள்ளலாம். இவற்றை வழங்கும் நிறுவனங்கள் சமுகத்தின் தேவைக்கேற்றவாறு எவ்வாறு கருவிகள் பங் கிட்டு வழங்கப்படலாம் என்பதை முடிவுசெய்து, அவற்றை நேரடியாக வருபவர்களுக்கோ அல்லது முன்பதிவு செய்து வருபவர்களுக்கோ அல்லது இணையமூடாக பதிவு செய்து வருபவர்களுக்கோ வழங்கலாம். இவற்றை விநியோகிக் கும் நிலையங்களின் பட்டியலையும், நிலையங்களின் முகவரிகளையும், இவை எவ்வாறு விநியோகிக் கப்படுகின்றன என்ற விபரத்தினையும் Ontario.ca/rapidtest என்ற இணைய முகவரியில் பார்க்கலாம்.

விஜய் தணிகாசலம்,
ஒன்ராறியோ மானில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ - றூஜ் பார்க்.



தமிழக செய்திகள்



தமிழக மீனவர்களின் படகுகளை சிங்கள அரசு ஏலம் விடுவதை இந்தியா வேடிக்கை பார்க்கக்கூடாது

– பா.ம.க. தலைவர் மருத்துவர் இராமதாஸ் –

ஜனவரி19. 2021

தமிழக மீனவர்களின் படகுகளை சிங்கள அரசு ஏலம் விடுவதை இந்திய அரசு வேடிக்கை பார்க்காமல் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக டாக்டர் ராமதாஸ் இன்று வெளியிட்ட அறிக்கை:
வங்கக்கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த தமிழக மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்து அரசுடைமை ஆக்கப்பட்ட 105 படகுகளை ஏலம் விடும் பணிகளை இலங்கை அரசு தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த எதிர்ப்பையும் மீறி, தமிழக மீனவர்களின் வாழ் வாதாரத்தை அழிப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் முதல் இராமநாதபுரம் வரை யிலான கடற்கரையோர மாவட்டங்களைச் சேர்ந்த மீனவர்கள் வங்கக்கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது, எல்லை தாண்டி மீன்பிடித்ததாகக் கூறி அவர்களை சிங் களப் படையினர் கைது செய்வதும், அவர்களின் படகு களை பறிமுதல் செய்வதும் வாடிக்கையானதாக மாறி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் கைது செய்யப்பட்ட மீனவர் கள் அனைவரும் விடுவிக் கப் பட்டு விட்ட நிலையில், அவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்ட 105 படகுகள் இன்று முதல் பிப்ரவரி 11-ஆம் தேதி வரை ஏலம் விடப்படும் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தது. அதன்படி, மீனவர்களிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டு யாழ்ப்பாணம் காரைநகர் துறைமுகத்தில் நிறுத்தி வைக் கப்பட்டிருந்த 65 மீன்பிடிப் படகுகள் இன்று காலை முதல் ஏலம் விடப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ்நாட்டு மீனவர்களின் 105 படகுகளை ஏலம் விடப் போவதாக கடந்த ஜனவரி 23-ஆம் தேதி இலங்கை அரசு அறிவித்த போது அதைக் கண்டித்ததுடன், உடனடியாக



தடுத்து நிறுத்த வேண்டும் என்றும் நான் வலியுறுத் தியிருந்தேன். அதைத் தொடர்ந்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலினும் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங் கருக்கு கடிதம் எழுதினார். ஆனால், அதன்பின் இரு வாரங்களுக்கு மேலாகியும் மத்திய அரசுத் தரப்பில் இலங்கை அரசுக்கு எந்த அழுத்தமும் கொடுக்கப்பட்டதாக தெரியவில்லை. அதன் காரணமாகவே தமிழக மீனவர் களின் படகுகளை இலங்கை அரசு துணிச்சலாக ஏலம் விடுகிறது.

மத்திய அரசு தடுக்க வேண்டும்

யாழ்ப்பாணம் காரை நகர் துறைமுகத்தில் உள்ள படகுகள் இன்று ஏலத்தில் விடப்படும் நிலையில், நாளை காங் கேசன் துறைமுகத்தில் உள்ள 5 படகுகளும், பிப்ரவரி 9-ஆம் தேதி கிராஞ்சியில் உள்ள 24 படகுகளும் பிப்ரவரி 10-ஆம் தேதி தலைமன்னாரில் உள்ள 9 படகுகளும் பிப்ரவரி 11-ஆம் தேதி கற்பிட்டியில் உள்ள 02 படகுகளும் ஏலத்தில் விடப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த ஏலம் உடனடியாக தடுத்து நிறுத்தப்படாவிட்டால் பல்லாயிரக் கணக்காணோர் வாழ்வாதாரம் இழக்கும் ஆபத்து உள் ளது. ஒரு விசைப்படகில் 10 மீனவர்கள் வரை கடலுக்குச் சென்று மீன்பிடிப்பார்கள். ஒரு படகு பறிக்கப்பட்டு ஏலத்தில் விடப்பட்டால் 10 மீனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்த 50 முதல் 60 பேர் வரை வாழ்வாதாரம் இழப்பார்கள். 105 படகுகள் ஏலத்தில் விடப்பட்டால் குறைந்தது 7500 பேரின் வாழ்வாதாரம் பறிக்கப்படும். இதை உணர்ந்து படகுகள் ஏலம் விடப்படுவதை தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு ஏலத்தில் விடுவது இது முதல் முறையல்ல. கடந்த 2014, 2020 ஆகிய கால கட்டங்களிலும் தமிழக மீனவர்களின் படகுகளை அழிப்பது. ஏலத்தில் விடுவது போன்ற அத்து மீறல்களை இலங்கை அரசு அரங்கேற்றியது. இப்போது மூன்றாவது முறையாக தமிழ்நாட்டு மீனவர்களின் படகு களை சிங்கள அரசு ஏலம் விடுகிறது. இதை இந்தியா வேடிக்கை பார்க்கக்கூடாது.

கைவிட செய்க, உணவுக்குக் கூட வழியில்லாமல் தவிக் கும் இலங்கைக்கு இந்தியா ரூ. 18,090 கோடி கடன்வசதி வழங்கியுள்ளது. அதில் ரூ.3500 கோடி கடனுக்கான ஒப் பந்தம் சில நாட்களுக்கு முன் தான் கையெழுத்து இடப்பட் டது. அதன் தொடர்ச்சியாக இந்தியா - இலங்கை உறவு குறித்து பேச்சு நடத்துவதற்காக இலங்கை வெளியுறவுத் துறை அமைச்சர் ஜி.எல்.பெரிஸ் 3 நாட்கள் பயணமாக நேற்று டெல்லி வந்திருக்கிறார். இத்தகைய சூழலில் இந்திய மீனவர்களின் படகுகளை இலங்கை அரசு ஏலம் விடுவதும், அதை இந்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் இந்தியாவின் நிலையை வலுவிழக்கச் செய்துவிடக்கூடும். தமிழக மீனவர்களின் படகுகள் ஏலம் விடப்படும் விவகாரத்தில் மத்திய அரசு உடனடியாக தலை யிட்டு, படகுகள் ஏலம் விடப்படுவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும். இலங்கை வெளியுறவுத்துறை அமைச்சருடனான பேச்சுகளின் போது தமிழக மீனவர்கள் சிக்கலுக்கு நிரந்தரத் தீர்வு காணும் முயற்சிகளுக்கு இலங்கை கண்டிப்பாக ஒத்துழைக்க வேண்டும் என்று

தமிழகத்து – ஈழத்து மீனவர்களிடையே பகைமையை ஏற்படுத்தும் சூழ்ச்சியை முறியடிக்க வேண்டும்

நாம் தமிழர் சீமான் வேண்டுகோள்!

பெப்ரவரி 07, 2022

இலங்கை - இந்திய கடற்பரப்பில் நிகழும் சம்பவங்களை அடிப் படையாக கொண்டு தமிழகத்து - ஈழத்து மீனவர்களிடையே பகைமையை ஏற்படுத்தும் சூழ்ச்சியை இரு நிலத்தில் வாழும் தமிழர்களும் ஒன்றுபட்டு முறியடிக்க வேண்டும் என நாம் தமிழர் கட்சியின் தலைவர் சீமான் வேண்டுகோள் விடுத்துள் ளார்.



இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் டிருப்படாவது,

தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர்களுக்குமிடையே பகைமையை ஏற்படுத்தி, ஒருதாய் வயிற்றுப்பிள்ளைகளான தமிழ்த்தேசிய இன மக்களைத் தங்களுக்குள்ளேயே மோதிச்சண்டையிட வழிவகை செய்திடும் சிங்கள இனவாத அரசின் கொடுங்கோல் செயல்பாடுகள் பெரும் அதிர்ச்சியளிக் கின்றன.

ஈழப்பெருநிலத்தில் இரண்டு இலட்சம் தமிழர்களைக் கொன் றொழித்து, ஒரு பாரிய இனப்படுகொலையை நிகழ்த்தி, 800க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை நடுக்கடலிலே படு கொலை செய்தும் இன்னும் வன்மம் தீராது தமிழர் களுக்குள்ளேயே பகைமூட்டும் சிங்கள இனவாத ஆட்சியாளர் களின் போக்குகள் கடும் கண்டனத்திற்குரியது.

யாழ்ப்பாணம் மாவட்டம், சுப்பர்மடம் கடற்பகுதியிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற மீனவத்தம்பிகள் தணிகைமாறன், பிரேம்குமார் ஆகியோர் படகு கவிழ்ந்து உயிரிழந்த செய்தியறிந்து பெரும் வேதனையடைந்தேன். தம்பிகளை இழந்து வாடும் அவர்தம் பெற்றோர்களுக்கும், உறவுகளுக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்து துயரத்தில் பங்கெடுக்கிறேன். தம்பிகளின் இழப்பு எதன்பொருட்டும் ஈடுசெய்யவியலாதது. அம்மரணம் ஏற் படுத்தும் வலியென்பது சொற்களால் விவரிக்க முடியாதது. அதே சமயம், அது விபத்துதானே ஒழிய, திட்டமிடப்பட்டத் தாக்குதல் அல்ல் தமிழக மீனவர்கள் தொப்புள்கொடி உறவுகளான ஈழத் துச்சொந்தங்களை ஒருநாளும் பகையாளியாகக் கருதவோ, தாக்குதல் தொடுத்திடவோ மாட்டார்கள் என அறுதியிட்டுக் கூறுகிறேன். அது எதிர்பாராத விதமாக நடந்த ஒரு கோர விபத்து ஏற்கவே முடியாத ஒரு துயரச்சம்பவம். அத்துயரை நானும் பகிர்ந்துகொள்கிறேன் வலியை முழுமையாக உணர்ந்து கொள்கிறேன்.

அதேநேரத்தில், இம்மரணத்தைத் துருப்புச்சீட்டாகப் பயன்படுத்தி, ஈழத்து மீனவர்களுக்கும், தமிழக மீனவர் களுக்குமிடையே சண்டை மூட்டிவிட்டு, வேடிக்கைப் பார்க்கும் சிங்கள அதிகார வர்க்கத்தின் செயல்களுக்குப் பலியாகாது விழிப்போடும், தெளிவோடும் இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்து மீனவர்கள்தான் ஈழ மீனவர்களைத் தாக்கிக் கொன்றுவிட்டார்கள் என அந்நிலத்தில் பரப்புரை செய்வதும், தமிழகத்து மீனவர்களது படகுகளை ஈழத்து மீனவர்களுக்கு ஏலத்தில் விற்று, காழ்ப்புணர்வை தமிழக மீனவர்களிடம் உருவாக்க முயல்வதுமான போக்குகள் சொந்த இரத்தங்களுக்குள்ளே யுத்தத்தை நிகழ்த்த துடிக்கும் பெரும் மோசடித்தனமாகும்.

சிங்கள இனவாத அரசால் இனப்பேரழிவை தமிழர் தாயகம் எதிர்கொண்டபோது, தமிழகத்திலிருந்த 18 க்கும் மேற்பட்ட தமிழர்கள் தங்கள் உறவுகளைக் காக்க தங்கள் உயிர்களை இரையாக்கினார்கள் அவர்கள் தங்கள் உள்ளத்திலே கொதித்த நெருப்பை உடலிலே கொட்டி தீக்குளித்து, போராட்ட நெருப்பைப் பற்ற வைத்தார்கள். ஈழத்தாயகம் எப்போதெல்லாம் தாக் குதலுக்கு உள்ளாகிறதோ அப்போதெல்லாம் தமிழகம் கொதித் தெழுந்து தங்கள் உறவுகளைக் காக்க உணர்வோடு வீதிக்கு வந்திருக்கிறது. ஆகவே, தமிழகத்துக்கும், ஈழத்துக்குமான தொப்புள்கொடி உறவை, வரலாற்று வழித்தொடர்பை எவ ராலும் மறுக்க முடியாது. ஏற்கனவே, தமிழ்த்தேசிய இன மக்களை சாதியும், மதமும் பிளந்து, பிரித்து ஓர்மையைத் தடுத்துக் கெடுக்கும் நிலையில் அரங்கேற்றப் படும் சதிச்செயல்களையும், தமிழகத்து தமிழர்களுக்கும், ஈழத்து தமிழர்களுக்குமான இரத்த உறவை முற்றாக அறுக்கத்துடிக்கும் பெருஞ்சூழ்ச்சிகளையும் புரிந்து கொள்ள வேண்டியது பெருங்கடமையும், பேரவசியமாகிறது. அந் நிலத்தில் தமிழ் மீனவர்கள் மட்டும்தான் இருக்கிறார்கள் சிங்களர்களில் எவரும் மீனவர்கள் இல்லை என்பது போலவும், சிங்கள மீனவர்களது வளங்களை தமிழக மீனவர்கள் சுரண்டுகிறார்கள் என்பது போலவும், தமிழகத்து மீனவர்கள் சிங்கள மீனவர்களைத் தாக்குகிறார்கள் என்பது போலவும் கருத்துருவாக்கம் செய்து, இரு நிலத்து மீனவர்களையும் பகையாளிகளாக மாற்ற முனைவது கொடும் வன்மத்தின் உச்சமாகும்.

ஆகவே, தமிழகத்து மீனவர்களுக்கும், ஈழத்து மீனவர் களுக்குமிடையே பிளவையும், பகையையும் உருவாக்கத் துடிக்கும் இனவெறி சிங்கள ஆட்சியாளர்களின் தமிழர் விரோதச்செயல்பாடுகளுக்கு இரையாகாது அவர்களது உள் நோக்கத்தைப் புரிந்துகொண்டு, தமிழர் ஓர்மையையும், இணக் கப்பாட்டையும் கடைபிடிக்க வேண்டுமென இரு நிலத்தில் வாழும் தமிழர்களையும் உள்ளன்போடும், உரிமையோடும் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுத்திடுக: பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம்

பெப்ரவரி 13, 2022



தமிழகத்தை சேர்ந்த மீனவர்களை விடுவிக்க பிரதமர் மோடி நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்று பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுகுறித்து பிரதமர் மோடிக்கு, தமிழக முதல் அமைச்சர் மு.க ஸ்டாலின் எழுதியுள்ள கடிதத்தில் "12.02.2022 அன்று, IND-TN-10-MM-612 மற்றும் IND-TN-10-MM-328 ஆகிய பதிவெண்களைத் தாங்கிய இரண்டு இயந்திர மீன்பிடிப் படகுகளில் மீனவர்கள் ராமேஸ்வரம் தளத்தி லிருந்து மீன்பிடிக்கக் கடலுக்குள் சென்ற நிலையில், 13.02.2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு தலைமன்னாருக்குக் கொண்டு செல் லப்பட்டுள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களில் இவ்வாறு நடந்துள்ள மூன் றாவது சம்பவம் இது என்பதையும், தற்போது வரை, தமிழ் நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் 41 பேரும் 6 மீன்பிடிப் படகு களும் இலங்கைக் கடற்படையின் வசம் உள்ளனர். இது போன்று மீனவர்கள் மீண்டும் மீண்டும் கைது செய்யப் படுவதும் துன்புறுத்தப்படுவதுமான நிகழ்வுகள் தமிழ் நாட்டின் மீனவர் சமூகத்திடையே, குறிப்பாக பாக் வளை குடாப் பகுதியில் பாதுகாப் பின் மை உணர் வை ஏற்படுத்தியுள் ளதுடன் மீனவர்களின் வாழ்வாதாரங் களை மோசமாகப் பாதித்துள்ளது.

மத்திய மற்றும் மாநில அரசுகளின் கூட்டு முயற்சிகளின் வாயிலாக, நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் இந்த எரிச்சலூட்டும் சிக்கலுக்கு நிலையான தீர்வைக் காண வேண்டியது மிகவும் இன்றியமையாதது. அதன் தொடக் கமாக இருதரப்புப் பேச்சுவார்த்தைகளைக் கூட்டுவதற் கான ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். கொரோனா தீவிரம் குறைந்துள்ள தற்போதைய நிலை யில், கூட்டுச் செயற்குழுக் கூட்டம் (துறுபு) மூலம் பேச்சு வார்த்தைகளை உடனடியாக மீண்டும் தொடங்க வலி யுறுத்து கிறேன்.

இரு நாட்டு மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த் தைக்கும் வழிவகை செய்திட வேண்டும். தமிழகத்தை சேர்ந்த 41 மீனவர்களை விடுவிக்க உடனடியாக நடவடிக் கைகளை விரைவுப்படுத்துங்கள்" என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

மார்ச் 11 ஆம் தேதி சென்னை, தமிழ்நாட்டில் உலகத்தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடும் 'உலகத் தமிழ் பாராளுமன்றம்'

பெப்ரவரி 12, 2022



உலகத்தமிழ் வம்சா வளி அமைப்பு மற்றும் உலகத்தமிழ் வர்த்தக சங்கம் கடந்த 07 ஆண்டுகளாக உலகத் தமிழ் வம்சாவளி மா நாடு நடத்தி வருகிறது. இதில் பல்வேறு நாடு களை சேர்ந்த தமிழ் ஆர்வலர்கள், தமிழ் சங்கங்கள், கல்வி யாளர்கள், தொழி லதிபர்கள், பொருளா தார நிபுணர்கள், தாய் தமிழகத் திற்கு வந்து தம் உறவுகளை சந்தித்து சமுதாயம் மேம் படுவதற்கான நிகழ்வுகள் நடைபெற்று வருகிறது.

இவ்வாண்டு மார்ச் 11ஆம் தேதி சென்னை நந்தம் பாக்கத்தில் உள்ள வர்த்தகமையத்தில் உலகத்தமிழ் வம்சாவளி மாநாட்டில் ஒரு நிகழ்வாக உலகத்தமிழ் பாராளுமன்றமும் கூட உள்ளது.

கலை, கலாச்சாரம், கல்வி, பொருளாதாரம் போன்ற வற்றில் முன்னேற்றமடைய நம் நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஏற்று மதி செய்யவும் அயல்நாடுகளில் நமக்கு தேவையான பொருட்களை இறக்குமதி செய்யவும் இவ்வமைப்பின் மூலம் பலர் பயன் பெறுகின்றனர்.

இதுவரை இணையத்தில் நடைபெற்ற மக்களால் தேர்ந் தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், ராஜ்யசபா உறுப்பினர்கள், செனட்டர்கள், தேசிய உறுப்பினர்கள் மத்திய அமைச்சர்கள், பெரும்பான்மையான உறுப்பி னர்கள் நேரடியாகவும், இணையத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.

இந்நிகழ்வில் 12 நாடுகளில் 152 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்க அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தாங்கள் வசிக்கும் நாட்டில் அரசாங்கத்தின் மூலம் தமிழர்களை கல்வி பொருளாதாரத்தில் எப்படி மேம்படுத்தலாம் எனவும், 12 நாட்டு அரசாங்கத்தின் உதவிகளை பெறவும் ராஜாங்க உறவை மேம்படுத்த இந்த உலகத் தமிழ் பாராளுமன்றம் பேருதவியாக இருக் கும் என உலகத்தமிழ் வம்சாவளி அமைப் பின் தலைவரும் உலகத் தமிழ் பாராளுமன்ற அமைப்பாளர் செல்வகுமார் தெரிவித்தார்.

WTP

உலகத் தமிழ் பாராளுமன்றம்
WORLD TAMIL PARLIAMENT

உலக வணிகம்
ULAGA VANIKAM 2022
வெளிவந்துவிட்டது

இப்பொழுது அனைத்து தமிழர் வியாபர நிலையங்கள், உணவகங்கள், கோவில்கள் அலுவலகங்களிலும்

'உலக வணிகம்'

கையேட்டினை பெற்றுக்கொள்ளலாம்.



மேலதிக தொடர்புகளுக்கு: 437.345.4203

உலக வணிகம் ULAGA VANIKAM
2023
LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY

உலக வணிகம் ULAGA VANIKAM

விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரும், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.

தொலைபேசி எண்: 437.345.4203

உலக செய்திகள்

இலங்கையில் இடம்பெறும் சித்திரவதைகள் பாலியல் வன்முறைகள் குறித்து சர்வதேச உண்மை நீதிக்கான திட்டம் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை தீவிரமாக எடுத்துள்ளோம் -பிரிட்டன்-

பெப்ரவரி 03, 2022



இலங்கையில் இடம் பெறும் சித்திரவதைகள் பாலியல்வன் முறைகள் குறித்து சர்வதேச உண்மை நீதிக்கான திட்டம் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை தீவிரமாக எடுத்துள்ளதாக பிரிட்டன் தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோச மடைந்து வரும்மனித உரிமைகள் நிலவரம் குறித்து கடும் கரிசனை களை வெளியிட்டுள் ளோம் எனவும் பிரிட்டன் தெரிவித்துள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் டோனியா அன்டோனியாசி எழுப்பிய கேள்விக்கு வழங்கியுள்ள எழுத்துமூல பதிலில் வெளிவிவகார பொதுநலவாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அமன்டா மில்லிங் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கான சமீபத்தைய விஜயத்தின் போதுஅமைச் சர் தாரிக் அகமட் இலங்கை தலைவர்களுடன் இந்த விவகாரங்கள் குறித்து இலங்கை தலைவர்களுடன் பல முறை பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரங்களின் முக்கியத்துவம் குறித்து அமைச்சர் பிரிட்டனிற்கான இலங்கை தூதுவருடனுட இலங்கை வெளிவிவகார அமைச்சருடனும்பல தடவை பேச் சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்,இலங்கைக்கு ஜனவரி18 ம் திகதிமுதல் 20 திகதி வரை மேற்கொண்ட விஜயத்தின் போது ஜனாதிபதி வெளிவிவகார அமைச்சர் அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்களை சந்தித்த வேளை மோசமடைந்து வரும் மனித உரிமை குறித்து அவர் கேள்வி எழுப்பினார் என அமன்டா மில்லிங் தெரி வித்துள்ளார்.

ஒக்டோபர் 26ம் திகதிவெளிவிவகார அமைச்சர் ஜிஎல் பீரிசினை சந்தித்தவேளை வெளிவிவகார அமைச்சர் இது குறித்து கேள்வி எழுப்பினார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கியநாடுகள் மனிதஉரிமை பேரவையினால் ஆணை வழங்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் இலங்கை யில் மனித உரிமைகள் பொறுப்புக்கூறல் நடவடிக் கைகளை கண்காணிக்கும் நடவடிக்கைகளிற்கு நாங்கள் தொடர்ந்தும் ஆதரவளிப்போம் என பிரிட்டிஸ்அமைச்சர் தெரிவித்துள்ளார்.

"கள்ளச்சந்தையில் பெற்ற டொலர்களை பயன்படுத்தி வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தோம்"

- பசில் இராயபக்ச, சிறீலங்கா நிதியமைச்சர் -

01.02.2022

இலங்கையின் உள்நாட்டு யுத்தம் தீவிரமாக இடம்பெற்ற காலப்பகுதியில் கள்ளச்சந்தை மூலம் பெறப்பட்ட பணத் தை பயன்படுத்தி இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை கொள்வனவு செய்தது என நிதியமைச்சர் தெரிவித்திருப்பது பெரும் அதிர்வலைகளை ஏற்படுத தியுள்ளது.

சண்டே திவயினவிற்கு வழங்கிய பேட்டியில் நிதி யமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

கள்ளச்சந்தையில் பெறப்பட்ட பணத்தை பயன்படுத்தி இலங்கை வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களை பெற் றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலப்பகுதியில் எரிபொருள் கொள்வனவிற்கு செலுத்து வதற்காக கள்ளச்சந்தையில் அமெரிக்க டொலர்களை அரசாங்கம் பெற்றது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம் பெற்றுக்கொண்டிருந்தவேளை எரிபொருள் கப்பல்களிற்கு செலுத்துவதற்கு இலங்கைக்கு டொலர் தேவைப்பட்டது, என தெரிவித்துள்ள நிதியமைச்சர் அக் காலப்பகுதியில் தானும் அதிகாரிகளும் புறக்கோட்டைக்கு சென்று கள்ளச்சந்தையில் டொலரை பெறுவதற்காக அங் குள்ள வர்த்தகர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம் என குறிப்பிட்டுள்ளார்.

நாங்கள் புறக்கோட்டை வர்த்தகர்களை சந்திப்போம் அவ் வாறே நாங்கள் எரிபொருள்களிற்கு கட்டணத்தை செலுத் தினோம் என பசில் இராஜபக்ச தெரிவித்துள்ளார்.

வடகொரியாவிடமிருந்து ஆயுதங்களைபெற்றதை அரசாங் கத்தின் சிரேஸ்ட உறுப்பினர் ஏற்றுக்கொண்டுள்ளமை இதுவே முதல் தடவை என சுட்டிக்காட்டியுள்ள ஆங்கில செய்தி இணையத்தள மொன்று நிதியமைச்சர் அமெரிக்க அதிகாரிகளினால் விசாரணை செய்யப்படக் கூடிய சூழ் நிலை உருவாகியுள்ளது எனவும் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் வடகொரியா பொருளாதார தடைகளில் இருந்துதப்புவதற்காக கிரிப்டோ நாணய மூலம் உதவி யதற்காக அமெரிக்க பிரஜையொருவர் விசாரணைகளை எதிர்கொண்டதை ஆங்கில இணையத்தளம் சுட்டிக்காட் டியுள்ளது.

அவருக்கு இந்த மாதம் தண்டனை வழங்கப்படவுள்ளது அவருக்கு நீண்டகால சிறைத்தண்டனை வழங்கப் படலாம் என இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இதேவேளை பெரும் குற்றத்தின் சிறிய பகுதியே அம்பல



மாகியுள்ளது என புலம்பெயர் செயற்பாட்டாளர் ஜன் ஜன நாயகம் தெரிவித்துள்ளார்.

தடைகள் விதிக்கப்பட்ட வடகொரியா ஈரான் போன்ற நாடு களிடமிருந்து பெறப்பட்ட ஆயுதங்களை பயன்படுத்தியே தமிழ்மக்கள் மீதான இனப்படுகொலை இடம்பெற்றது என நாங்கள் நீண்டநாட்களாக கருதிவந்துள்ளோம் என டக் எனப்படும் இனப்படுகொலைக்கு எதிரான என அமைப் பின் ஜன் ஜனநாயகம்தெரிவித்துள்ளார்.

இவ்வாறு சட்டவிரோதமாக பெறப்பட்ட கொத்துக்குண் டுகள் இரசாயன ஆயுதங்கள் போன்றவை அவற்றின்

உக்ரைன் மீது போரை ஆரம்பித்தால் இரஷ்யா மீது பொருளாதாரத் தடை

- கனடா பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் -

ஜனவரி 27, 2021

இரஷ்யாவுக்கு எதிராக மேற்கத்திய நாடுகளுடன் இணைந்து நடவடிக்கை எடுக்க பாதுகாப்பு அமைச்சர் அனிதா ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைனின் எல்லைக்கு அருகே இரஷ்யா படைகளை குவித் துள் ளதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையேகடும் பதட்டம் ஏற் பட்டுள்ளது.

கனடா, அமெரிக்கா உட்பட ஐரோப்பிய நாடுகள் உக்ரை னுக்கு ஆதரவு வழங்கி வருகின்றன.

அவை உக்ரைன் மீது படையெடுத்தால் இரஷ்யா கடும் விளைவுகளை சந்திக்கும் இரஷ்யாவை எச்சரித்துள்ளன.

இந்நிலையில் நேட்டோ பொதுச் செயலாளர் Jens Stoltenberg அவர்களைச்சந்தித்த அனிதா ஆனந்த், உக்ரைன் மற்றும் நேட்டோ கூட்டணிக்கு ஆதரவளிக்கக் கனடா தயாராக இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் நடை பெற்று வரும் இராணுவப்பயிற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கான கனடா அரசாங்கத்தின் திட்டங்களை பாதுகாப்பு அமைச்சர் முன் வைத்துள்ளார்.

ஐரோப்பிய, வட அமெரிக்க நாடுகளை மீறி, இரஷ்யா உக் ரைன் மீது படையெடுத்தால், பிறநாடுகளுடன் இணைந்து இரஷ்யா மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கக் கனடா தயாராக இருப்பதாகவும் தெரிவித் துள்ளார்.

அனிதா ஆனந்த் அண்மையில் உக்ரைனுக்குச் சென்று திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

ஆங்கிலோயரிடமிருந்து ஆட்சியை கபடமாக சிங்களவர் கைப்பற்றிய குறியீடு நாளே பெப்.04

- அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை -

பெப்ரவரி 04, 2021

ஈழத்தமிழருக்கு பெப்ரவரி 4 ஒரு கரிநாள். இந்த நாள் தமிழருக்கு சுதந்திர தினமாக எப்படி ஏற்க முடியும்? அடாத்தாக நுழைந்த ஐரோப்பியர் வருகைக்கு முன் ஈழத் தமிழர்கள் தங்களுக்கே உரித்தான பாரம்பரியத் துடன் இயற்கையோடு ஒன்றிப் போய் வாழ்ந் தவர்கள். வாழ் வாதாரமாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக் கேற்றவாறு உணவு முறைகளை அமைத் துக் கொண்டார்கள். விவ சாயத்தையும் மீன்பிடியையும் பெருமளவில் நம்பி வாழ்ந்த தனித்துவமான பழங்குடி இனம். எமது திருநாட்டின் வளங்களைச் சுரண்ட பெரும் ஆயத பலத்துடன் வந்த ஐரோப்பியர்கள் தமிழர் நிலங்களை, அடையாளங்களை, ஆட்சிமுறைகளை அழித்தனர். இலங்கையில் காலனித் துவத்தின் காலப்பகுதியிலும் பின்பும் தமிழர்களுக்கு பல் வேறு பட்ட பாதகமான விளைவுகள் ஏற் பட்டமை குறிப் பிடத்தக்கதாகும். அவர்களால் இழைக்கப்பட்ட அநீதி களுக்கு இன்றுவரை தமிழர்களுக்கான பரிகார நீதியைப் பெற்றுத்தர அவர்கள் முன்வரவில்லை.

ஆங்கிலேய காலனித்துவ ஆட்சி நாட்டில் இருந்து கிளம்பும் போது சிங்கள பெரும்பான்மையிடம் ஆட்சியை வழங்கிய குறியீட்டு நாளே பெப்ரவரி 4. இந்த நாள் தமிழருக்கு ஒரு கரிநாள், ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து சிங்கள இன வெறி பிடித்த பெரும்பான்மையிடம் ஒப்படைக்கப்பட்ட ஆட் சியின் கைமாற்றமே அன்றி தமிழர்களுக்கான சுதந்திர நாள் அன்று. முதன்முதலில் ஆட்சிப்பீடம் ஏறிய டி.எஸ் சேனநாயக்க முதல் இனப்படுகொலையாளி கோத்தபாய ராஜபக்ச வரை சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் அனைத்தும் ஒரே பேரினவாத கொள்கையை பின்பற்றி 1948 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல இலட்சம் அப்பாவி தமிழர்களை கொன்ற குவித்தது. ஈழத்தமிரைப் பொறுத்தவரையில் சுதந்திர தமிழீழம் மலரும் நாளே உண்மையான சுதந்திர நாளாகும்.

சோல்பெரி அரசியலமைப்பை ஊருவாக்கிய சோல்பரி பிரபு தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்வார் கள் என்று எதிர்பார்த்துத்தான் அரசியலமைப்பை வரைந் தார். பிரித்தானியர்கள் நாட்டிலிருந்து சென்ற மிகக் குறுகிக காலத்திற்குள்ளேயே சிங்களப் பெரும்பான்மை தனது சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கியது. சூழ்ச்சியும் தந் திரமும் வாய்ந்த சிங்களத் தலைவர்கள் காலத்துக்குக் காலம் அமைச்சர் பதவி, பட்டம், வாக்குறுதி போன்ற வற்றை வழங்கித் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றினார் கள். சிங்களத்தால் தமிழர்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்று உணர்ந்த திரு. செல்லப்பா சுந்தரலிங்கம் அவர்கள் சோல்பெரி பிரபுவிற்கு ஒரு முறைப்பாட்டுக் கடித்தை அனுப்பினார். அவரது மடலை வாசித்த சோல்பெரி பிரபு அதிர்ச்சியடைந்து தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிக்கு தானும் ஒரு முக்கிய காரணமாகிவிட்டேன் என்று மனம் வருந்தி திரு. செ. சுந்தரலிங்கத்துக்கு கடிதமொன்றையும் எழுதியிருந்தார். இன்றும் தமிழர் அவலத்தைச் சொல்லும் ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாக இக்கடிதம் உள்ளது.

சோல்பெரி பிரபுவின் இன்னுமொரு முக்கியமான கருத் தையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தாமனது. இலங்கை யின் பொருளாதாரத்திற்கு தமிழ்மக்களின் பங்களிப் பென்பது மிகப்பெரியது, நான் அவர்களின் கடுமையான

உழைப்பைக் கண்டு மிகவும் பெருமிதமடைகிறேன். சிங்களமக்களை விட தமிழ்மக்கள் கல்வியிலும், நிர் வாகத்திலும் அதிதிறமை உடையவர்கள். தான் முன் மொழிந்த அரசியல் யாப்பில் தமிழர்களுக்கு போதுமான பாதுகாப்பு இருப்பதாக நினைத்த லோட் சோல்பெரி, யாப்பின் 29வது சரத்து எதிர்பார்த்தளவு பாதுகாப்பை வழங்கவில்லை என்பதை பிற்காலத்தில் உணர்ந்தார்.

இலங்கைக்கு என்றோ ஒரு நாள் சுதந்திரம் பெற்றுத் சுயாட்சி அமைக்கும் என்று எந்தச் சிங்களத் தலைவர் களும் கனவிலும் கூட நினைக்கவில்லை. ஆனால் இலங்கைக்கு ஒரு நாள் தன்னாட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையை சகோதரர்களான சேர்.பொன். அருணா சலம், சேர்.பொன். இராமநாதன் ஆகியோரே முதன் முதலில் மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்கள். தமிழீழம் என்கிற சொற்பதத்தை முதன்முதலில் உபயோகித்தியவர் சேர் பொன் அருணாச்சலம் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். பின்னர் தமிழீழக் கொள்கையை முன்வைத்து முதன்முதலில் அரசியல் களத்தில் பணியாற்றத் தொடங் கியவர்கள் திரு. செ. சுந்தரலிங்கமும், வீ.நவரத்தினமும் ஆவார்கள். தமிழர்களால் அளிக்கப்படும் வாக்குகள் சோசலிச தமிழீழத்தை உருவாக்கும் என்று கூறியவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள். காலப்போக்கில் இந்த தனிநாட்டுச் சிந்தையே தமிழர்களை இனவழிப்பில் இருந்து பாதுகாகக் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது. 1977ல் சனநாயக ரீதியாகத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று தமிழீழக் கொள்கையை மேலும் வலுப்படுத்தினார்கள் தமிழர்கள். அகிம்சை வழியில் நியாயமான அரசியற்தீர்வுக்காகப் போராடிய இலங்கைத் தீவின் பூர்வீகக் குடிகளான ஈழத்தமழிர்கள் தொடர்ந்தும் இனவழிப்பிற்கு உட்படுத்தப்பட்டதாலேயே தமிழீழப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து மேதகு வே. பிரபாகரன் தலைமையில் மூன்று தசாப்தமாக வலுப்பெற்று அசைக்க முடியாத பேரியக்கமாக வளர்ந்திருந்தது.

பல அர்ப்பணிப்புகள், இழப்புகள், ஏமாற்றங்களை தொடர்ச் சியாக சந்தித்து வரும் ஈழத்தமிழர்களின் அரசியல் வேண வாவை நிறைவேற்ற இன்றைய அரசியல்வாதிகள் ஒன்று மில்லாத 13வது திருத்துச் சட்டத்தைக் கையில் எடுத்துள் ளனர். ஓற்றையாட்சிக் கட்மைப்புக்குள் உள்ள 13ஐ ஏன் இவர்கள் கேட்கிறார்கள். இந்தியாவின் பூகோள அர சியலையும் நலன்களையும் பேணவா இவர்கள் ஈழத் தமிழர்களின் சுதந்திர தாகத்தை நிர்மூலமாக்குகிறார்கள்? 2009 பேரிழப்புக்குப்பின், ஒரு ஆரம்பப் புள்ளியாக் கூட ஏற்கமுடியாத 13ம்திருத்தச் சட்டதை மீண்டும் தூசி தட்டி புத்துயிர் வழங்கி, சிங்களத்தின் பாராளுமன்ற கதிரை களை கைப்பற்ற கபட நாடகமாடும் தமிழ்த் தலைமை களை இனங்கண்டு தமிழ் அரசியல் இருந்து விரட்டியடிக்க வேண்டிய நாளாக கருதுங்கள்.

2013 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங் கத்தால் (GoSL) இந்த சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பகிர்ந்தளிக்கப்படாததால் எந்த அபிவிருத்தியும் தமிழர் பிரதேசங்களில் நடைபெறவில்லை. தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்திப் பணி களையும் தடுக்கும் அதிகாரம் சிங்களவர்களைக் கொண்ட அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களுக்கு மட்டுமே உண்டு. தமிழர் தாயகத்தில் தனியாருக்குச் சொந்தமான அனைத்து வளமான பண்ணைகளும் இராணுவத் தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. வேலை செய்ய அனுமதிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான உள் ளூர் தமிழர்கள் நிரந்தர வறுமையில் அடிமைப்படுத்தப் பட்டு உள்ளனர்.

இலங்கையின் சிங்கள அரசியல் கட்டமைப்பு கடந்த ஏழு தசாப்தங்களாக தமிழ் மக்களுடன் செய்து கொண்ட அனைத்து அரசியல் உடன்படிக்கைகளையும் ஒருதலைப் பட்சமாக ரத்து செய்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் கட்டமைப்பு ரீதியான இனவழிப்பை முடிவுக் குக் கொண்டுவருவதற்கு, இந்தியா, ஐக்கியராச்சியம், கனடா மற்றும் நோர்வே உட்பட ஐரோப்பாவுடன் இணைந்து செயற்பட அமெரிக்க அரசாங்கம் கருதினால், தமிழர்கள் இதற்கு ஆதரவாக இருப்போம். மேலும், தமிழர்களின் அரசியல், கலாசார மற்றும் பொருளாதார எதிர்காலம், சுயநிர்ணய உரிமை மற்றும் பறிக்க முடியாத நிலையான அரசியல் தீர்வைக் காண்பதற்கு இந்த முன்னெடுப்பு உதவும் என்று நம்புகிறோம்.

தமிழர் பிரதேசங்களில் இருந்து சிங்களக்குடியேற்றங்கள் அகற்றப்பட்டு, அடாத்தாக நிறுவப்பட்ட பௌத் விகாரைகள் விலக்கப்பட்டு, அத்துமீறி அபகரிக்கப்பட்ட தமிழர் பூர்வீக நிலங்கள் திரும்பவும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு இராணுவம் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிய பின்னரே தமிழர்களுக்கு நிரந்தரமான சுதந்திர நாள் கிட்டும். அதுவரை பெப்ரவரி 4ம் திகதி ஈழத்

பயங்கரவாததடைச்சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் மூலம் இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் முடிவிற்கு வராது

சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம்

பெப்ரவரி 08, 2022



இலங்கை அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச்சட் டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தின் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் முடிவிற்கு வராது என சர்வதேச மனித உரிமை கண் காணிப்பகம் தெரிவித்துள்ளது

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி இலங்கை அரசாங்கம் மோசமான துஸ்பிரயோகங்களில் ஈடுபடுகின்றது என தெரிவித்துள்ள சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் இந்த சட்டத்தை கைவிடுமாறு இலங்கை அரசாங்கத்திற்கு ஜரோப்பிய ஒன்றியம் அழுத் தங்களை கொடுக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மதிப்பிழந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்தி நீண்டகாலமாக தன்னிச்சையாகதடுத்து வைத்திருத்தல் சித்திரவதைகள் போன்றவற்றில் இலங்கை அரசாங்கம் ஈடுபடுகின்றது என மனித உரிமை கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

ஜரோப்பிய ஒன்றியமும் இலங்கையின் ஏனைய வர்த்தக சகாக்களும் நிதிவழங்குநர்களும் குறிப்பிட்ட கால எல் லைக்குள் இலங்கை அரசாங்கம் இந்த சட்டத்தை கைவிட வேண்டும் என அழுத்தங்களை கொடுக்கவேண்டும் என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

பரந்துபட்ட துஸ்பிரயோகங்களை முடிவிற்கு கொண்டு வருவதற்கு உதவாத உத்தேச திருத்தங்களை நிராகரிக்க வேண்டும் எனவும் சர்வதேச மனித உரிமை கண் காணிப்பகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதாக முன்னைய அரசாங்கங்கள் அளித்த வாக்குறுதிகளைமறுத்து விட்டு இலக்குவைக்கப்பட்ட பொதுமக்களின் அடிப்படை உரிமை களை பறிப்பதற்காக இலங்கை அதிகாரிகள் தொடர்ந்தும் பயங்கரவாத தடைச்சட்டத்தை பயன்படுத்துகின்றனர் - என சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் தென்னாசியாவிற்கான இயக்குநர் மீனாக்சிகங்குலி தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் முன்வைத்துள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட திருத்தங்கள் துஸ்பிர யோகங்களிற்கு முடிவு காண்பதை நோக்கமாக கொண் டவையில்லை மாறாக ஜரோப்பிய ஒன்றியத்தினதும் ஏனைய நாடுகளினதும் கவலைகளிற்கு தீர்வை காண்பதற்கான அரசாங்கத்தின் முயற்சி போல தோன்று கின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

ராஜபக்ச அரசாங்கத்தின் மனித உரிமை துஸ்பிரயோக நடவடிக்கைகள் பயங்கரவாத தடைச்சட்டத்தை திருத்துவதற்கான முன்மொழிவுகள் என அது வெளியிட் டுள்ள தவறாக வழிநடத்தும் திருத்தங்கள் மூலம் முடிவிற்கு வராது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஜரோப்பிய ஒன்றியம்ஐக்கிய இராச்சியம் அமெரிக்கா ஆகியன இலங்கைஅரசாங்கம்அதன் கடப்பாடுகளை ஏற்று மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான அர்த்த முள்ள நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என அழுத் தம் கொடுக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

Allstate.
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



Raji Linghan
Ajax Agency
15 Westney Road, N
(416) 817 5060
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316



BOROS CANADIAN
PAPER CONVERTING INC.



Alan Maniam 647 299 2450
Director

235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3

boroscanadianpaper@gmail.com

சத்தியம் என்றும் சாவதில்லை அது வரலாற்றின் ஆன்மா

–தமிழீழத் தேசியத்தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் –



எமது விடுதலை இயக்கத்தின் அதிகாரபூர்வ வானோசையான "புலிகளின் குரல்" இன்றுடன் தனது நான்காவது ஆண்டு சேவையை நிறைவு செய்கிறது. இரண்டாம் கட்ட தமிழீழப்போர் தொடங்கியதை அடுத்து ஆரம்பமான எமது வானோசை, யுத்தசூழலால் எழுநத நெருக்கடிகளுக்கும் சாவல்களுக்கும் ஈடுகொடுத்து பிரமாதமான முறையில் பெருவளர்ச்சி கண்டிருக் கிறது. விடாமுயற்சியாலும் கடின உழைப்பாலும் ஈட்டப்பட்ட இந்தசாதனை பாராட்டுக்குரியது.

உன்னதமான இலட்சியப் பாதையில் முன்னேறிச் செல்லும் எமது விடுதலைப் போராட்டத்தை களங்கப்படுத்தும் நோக்குடன் பல்வேறு சக்திகள் செயற்பட்டு வருகின்றன. நீண்ட காலமாகவே, இந்த சக்திகள் எமது போராட்டத்திற்கு எதிராக, திட்டமிட்ட ஒரு பிரச்சாரயுத்தத்தை நடத்தி வருகின்றன. உண்மைகளை மறைத்து, பொய்களை திரித்து, விசமத்தனமான பிரச்சாரத்தை செய்துவருவகின்றன. மக்களின் விடுதலை உணர்வை மழுங்கடித்து, மக்களை குழப்பித் திசைதிருப்பி போராட்டத்தை நசுக்கிவிடும் நாசகார நோக்கில் இந்தப்பிரச்சாரப்போர் முடுக்கி விடப்படிருக்கிறது.

பொய்மையையே பிரதான ஆயுதமாகக்கொண்டு எமது போராட் டத்திற்கு எதிராகத் தொடுக்கப்பட்ட இந்தக் கருத்துப் போரை முறியடிக்க நாம் உண்மையை ஆயுதமாக ஏந்தினோம். இந்த உண்மையின் குரலாகவே "புலிகளின் குரல்" ஒலித்துக் கொண்டிருக்கிறது.

பொய்களுக்கு ஆயுள் குறைவு. அவை வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் சென்று விடுகின்றன. ஆனால் சத்தியம் என்றும் சாவதில்லை. அது வரலாற்றின் ஆன்மாவாக என்றும் நிலைத்து நிற்கும்.

ஒரு விடுதலைப்போராட்ட சூழலில் மக்கள் தொடர்பு சாதனங் களின் பங்கு முக்கியமானது. இவை மக்களுக்கு உண்மை நிலைமையை எடுத்துச்சொல்ல வேண்டும். உண்மையான விளக்கங்களைக் கொடுக்க வேண்டும். உண்மையையும், நேர்மையையும் தார்மீகநெறியாகக்கொள்ளவேண்டும். உண் மையைத் தாங்கிவரும் கருத்துக்களே மக்களை கவர்ந்துகொள் கிறது. மக்களை விழிப்புணர்வு கொள்ளச்செய்கிறது.

எமது விடுதலைப் போராட்டத்தின் உண்மை நிலையை, செய்தித்தொகுப்பாக, கருத்துத் தொகுப்பாக, கலைவடிவமாக, மக்களுக்கு எடுத்துக்கூறி எமது வானோசை மக்களின் நல் லெண்ணத்தைப்பெற்று வருவதைக்கான நான் பெருமகிழ்ச் சியடைகிறேன். "புலிகளின் குரல்" வானோசையின் அபாரமான வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அயராது உழைத்துவரும் நிர்வாகப் பொறுப்பாளர்களுக்கும், கலைஞர்களுக்கும், ஏனை யோருக்கும் எனது பாராட்டுக்கள்.

புலிகளின் குரல்" தனது பணிகளை வெற்றிகரமாக முன்னெடுக்க எனது நல்லசிகள்.

("புலிகளின் குரல்" நான்காவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு, தலைவர் அவர்கள் வெளியிட்ட செய்தி)

நாம் அணி வகுத்துள்ளோம்...

நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
நாம் அணிவகுத்துள்ளோம்
இழந்த எமது நாட்டை மீட்க

எதிரி நமது நாட்டை
வஞ்சகமாக அபகரித்துவிட்டான்!
அதைக் கண்டு நாம் அஞ்சவில்லை!

புயலெனச் சீறி
இழந்த நாட்டை மீட்க
நாம் அணிவகுத்துள்ளோம்
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!

எமது படையணி கடக்க வேண்டியது
நெருப்பாறென்பது எமக்குத் தெரியும்
ஆனால்...
அதைத் தாங்கக் கூடிய
மக்கள் ஆதரவென்னும்
கவசம் எம்மிடம் உண்டு!

எதிரியின் ஆயுதமோ பலம் பொருந்தியது!
எமது
ஆத்ம பலமோ அதைவிட
வலிமை வாய்ந்தது!
எதிரியின் குண்டுகள் வெடிக்கும்...
ஆனால்
எமது விடுதலை நெஞ்சங்கள்
எரிமலையென வெடிக்கும் சத்தத்தில்
அதன் சத்தம் அமுங்கிவிடும்!

நாம் அணிவகுத்துள்ளோம்...
நாம் தமிழ் ஈழப் படைவீரர்கள்!
எமது அணிவகுப்பு
எமது தமிழ்ஈழ மக்களிடையே
அணிவகுத்துச் செல்கிறது!

நாம் செல்லும் இடமெல்லாம்...
எமது எதிரிகள் அஞ்சி ஓடுகிறார்கள்!
மக்களிடத்தில் உள்ள
பிரதேசம் சாதி
மதமென்னும் பேய்களும்
அலறி ஓடுகின்றன...

எமது படையணி விரைகிறது...
எம தேசத்தை மீட்க!

நாம் செல்லும் இடமெல்லாம்...
காடுகள் கழனிகள் ஆகின்றன!
வெட்டிப் பேச்சு வீரர்கள்
மிரண்டோடுகின்றனர்...!

உழைப்போர் முகங்களில்
உவகை தெரிகிறது
ஏழைகள் முகங்களில்
புன்னகை உதயமாகிறது.

(1981-ஆம் ஆண்டில் தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் எழுதிய கவிதை)



TAX ANALYST

ACCOUNTING | BOOKKEEPING | & MORE



- Affordable and Reliable Services
- Experienced Accountants
- Presonal & Corporate Tax
- Tax Planning / Audit Appeal
- HST/GST/WSIB
- Bookkeeping & Payroll
- UBER/LYFT Tax Filling

CRB/CERB HELP

OFFICE
416-898-8879

CALL FOR APPOINTMENT
416-838-2826

105Consumers Drive.
Whitby ON L1N 1C4

115 Mathesan Blvd W.
Mississauga ON L5R 1C6

www.taxanalyst.ca
taxmatters@kannantax.com



சிவஶ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
aarthanan@hotmail.com
aarthananyathu@gmail.com

HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS

24h EMERGENCY SERVICES

ALL MAKES & MODEL Furnance, Air Conditioner, Hot Water Tank
Tankless Water Heater, HRV, Fireplace, Attic Insulation,
Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer

up to **$5000 REBATE**

0 Down, Rental
Rent - to - Own
10 Years Warranty



WHY UPGRADE TO TANKLESS?

- Endless Supply of Hot Water
- No Up-front Equipment Cost
- Save Up To 40%
- Save Money & Space Design
- 15 Years Warranty
- No More Risk of Flooding or Explos

KD Navien®
The Leader in Condensing Tankless Technology

FREE ESTIMATE
Sales, Service & Repair

S.Kumar
416-993-8001
geansam@yahoo.com

FINANCING WITH $0 DOWN
HOME ENERGY LOAN
$15,000

PEEL TAE KWON-DO

PEEL TAE KWON DO
Family Martial Arts

Trusted Local Taekwon - Do Training School




- Over 20+ Years Taekwon-Do Training Experience
- For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
- Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS



Ebenezer Location:
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

Bovaird Location:
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268





தமிழீழ விடுதலைப் புலிகளால் முதலாவது பெயர் சூட்டப்பட்ட தமிழீழ இராணுவ நடவடிக்கை "ஆகாய–கடல்–வெளிச்சமர்"




இச் சமரானது மூன்று பிரதான பிரிவு களாக நடைபெற்றது.

முதலாவது வன்னிப் பெருநிலப்பரப்புப் பக்கமாக அதாவது பெரிய உப்பளம் சுற் றுலா விடுதியை நோக்கியதாக இருந்து இச் சமரை தளபதி பால்ராஜ் அவர்கள் நெறிப்படுத்தி வழிநடாத்த உள் நடவடிக் கையை தளபதி சூசை அவர்கள் வழிநடாத் தினார்.இவ் இராணுவ நடவடிக்கை. முதலாவதாக 10.07.1991 அன்றும் இரண்டாவதாக 13.07.1991 அன்றும் நடைபெற்றது.13.07.1991 அன்றைய தாக்குதலில் மேஜர் கேசரி அவர்களும் உதவியாக கப்டன் டக்ளஸ் அவர்களும் ஓட்டிச் சென்ற கனரக வாகனம் மீது இராணுவச் சிப்பாய் வாகனத்தில் ஏறி குண்டைப் போட்டு வெடிக்கவைத்ததால் அன்றைய முயற்சியும் வெற்றியளிக்க வில்லை.



இரண்டாவது தென்மராட்சிப் பக்கமாக அதாவது தடைமுகாமை கைப்பற்ற இச் சமரை தளபதி தமிழ்ச்செல்வன் அவர்கள் வழிநாடாத்த உள் நடவடிக்கையை தளபதி குணா அவர்கள் வழிநடாத்தினார்.இந் நடவடிக்கை முறையே 11.07 1991அன்றும் இரண்டாவதாக 27.07 1991 அன்றும்



நடைபெற்றது. இவ் இராணுவ முகாம் தாக்குதல்களும்.வெட்டவெளியேன்பதால் உழவு இயந்திரங்களுக்கு இரும்புத் தகட் டால் மூடப்பட்டு அதன் பின்னால் போராளி கள் சென்றே தாக்குதல் நடாத்தினார்கள் .இந்த தாக்குதல்களிலிருந்து பட்ட அனு பவங்களின்படி 27.07.1991 அன்றைய தாக்குதல் எமது காவலரணிலிருந்து எதிரியின் காவலரண்களுக்கு அண்மை வரை பதுங்கு குழிகள் வெட்டி அத னூடாகா அணிகள் எழும்பி தாக்குதல் நடாத்திக்கொண்டு தடைமுகாமை கைப் பற்றுவதென்றும் .



மற்றொரு நடவடிக்கை கனரக வாகனத் துக்கு இரும்புத் தகடு அடிக்கப்பட்டு அதனை காப்பாக பயன்படுத்தி போராளி கள் சென்று தடைமுகாமை கைப்பற்றுவ தென்றும். ஆனால் துரதிஸ்டவசமாக எதிரியின் தாக்குதலால் கனரக வாகனம் எதிரியின் காவலரனுக்கு அண்மையாக செயலிழந்தது. இக்கனரக வாகனத்தை செலுத்திய தளபதி லெப் கேணல் சரா அவர்களும் உதவியாக சென்ற மேஜர் குகதாஸ் அவர்களும் வீரச்சாவடைந் தனர். இச் சமரின் இன்னுமொரு முயற் சியாக மேஜர் சொனி அவர்கள் தலமை யிலான ஒரு அணியொன்று சின்ன



உப்பளமூடாகச் சென்று இராணுவத் திற்க்கு பின்பக்கமாக சென்று தாக்குதல் நடாத்தி தடைமுகாமை கைப்பற்ற எடுத்த நடவடிக்கையும் பலனளிக்கவில்லை.இச் சமரின் உள் நடவடிக்கையை வழி நடாத் திய தளபதி குணா அவர்கள் விழுப்புண ணைடைந்தார். அவரை போராளிகள் பின் னுக்குக் கொண் டுவந் தார் கள். ஆனால் அவரோ மருத்துவமனைக்கு செல்ல மறுத்து ஆனையிறவிலே நின்றார். அதன் பின்னர் மூத்த தளபதி பொட்டு அவர்களால் வலுக்கட்டாயமாக மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டார். இது மாதிரி யான பலசம்பவங்கள் இச் சமரில் நடை பெற்றன.

மூன்றாவது வெற்றிலைக்கேனி கட்டைக் காடு கடற்கரை இவ்விடத்தில் கடற்படை யால் தரையிறக்கலாமென எதிர்பார்த்து காத்திருந்த வேளையில் 14.07.1991 அன்று கடுமையான தாக்குதலுக்கும் மத்தியில் தரையிறக்கினான். இச் சமரை வழிநாடாத்திய தளபதி லெப்.கேணல் சூட்டி அவர்கள் அன்றைய தினம் வீரச் சாவடைந்தார். இருந்தும் சண்டை தொடர்ந்தது. முன்னேறிய இராணு வத்தை அதாவது வெற்றிலைக்கேணியி லிருந்து புல்லாவெளிச் சந்திவரை சங்கிலித்தொடராக நின்ற இராணுவத்தை 21.07.1991அன்று தளபதி சொர்ணம் தலைமையில் தகர்த்தெறிந்து நுழைதல் பாணியிலான ஒரு தாக்குதல் முள்ளி யானில் மேற்கொள்ளப்பட்டது.இத் தாக் குதல் திட்டமானது இராணுவத்தை இரண் டாகப் பிரிப்பது ஆனால் இரண்டாகப்பிரிக்க முடியாவிட்டாலும்.

பல இராணுவத்தை கொன்று ஆயுதங் களும் கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து முன்னேறிய படையினரை. கடுமையான எதிர்த் தாக்குதலைத் தொடர்ச்சியாக தொடுத்தனர். கொம்படி வரை வந்த படையினர். கொம்படியிலிருந்து இயக்கச்சி சந்திக்கு வர முயற்சித்தபோது. தளபதி லெப் .கேணல் ராஜன் அவர்கள் தலமை யிலான அணிகள் இராணுவத்தின் முன் னேற்ற முயற்சியை எதிர்த்து கடுமையாக போரிட்டதால் படையினர் அம் முயற்சியை கைவிட்டு. அப்படியே கைவிட்டுவிட்டு வேறு பாதையால் முன்னேற்றத்தை தொடர அங்கும் எதிர்த்தாக்குதல் நடை பெற்றது.

இச் சமர் பற்றி எழுதுவதற்கு இலகுவான தாக இருந்தாலும் ஆனால் போராளிகள் பட்ட கஸ்ரம் கொஞ்சமல்ல கடற்கரை மணல் உப்பு வெட்டை காப்புகள் ஏதுமற்ற நிலை சுட்டெரிக்கும் வெயில் ஓய்வற்ற நித்திரையற்ற பொழுதுகள் உணவுகள் இருந்தும் உண்ணமுடியாத நிலை இவை களுக்கும் மத்தியில் வெல்ல வேண்டும் என் கிற எண் ணம் மட் டுமே தவிர வேறொன்று மில்லை இவ் அர்ப்பணிப்பு மிக்க இச்சமர் இயக்கத்திற்க்கு பல முக் கியத்துவத்தை உணர்த்திய சமர் இச் சமர் பல படையணிகளின் தோற்றத்தை உரு வாக்கிய பல துறைகளின் அவசியத்தை உணர்த்தி சமர் இலங்கையில் இரண்டு இராணுவம் உள்ளதை வெளி உலகுக்கு உணர்த்திய இச் சமர்களை ஒருங் கிணைத்து செவ்வனவே புலனாய்வுத் துறைப்பொறுப்பாளரும் மூத்த தளபதியு மான பொட்டு அவர்கள் தலைவரின் ஆலோசனையுடன்.வழிநடாத்தினார். ஒரு மாதமாக நடைபெற்ற இவ் இராணுவ நடவடிக்கையில் அறுநூற்றி மூன்று போராளிகள வீரச்சாவடைந்தனர்.

உண்மையிலே இச்சமரிலே வீரகாவிய மான ஒவ்வொரு போராளிகளுக்குப் பின் னாலும் அற்புதமான தியாகங்களும், மனிதத்தன்மைக்கு அப்பாலான விடு தலை உணர்வும் உள்ளன. இவர்க ளுடைய அர்ப்பணிப்புக்கள் சாதாரண மான இழப்புக்கள் அல்ல மாறாக தமிழர் களுடைய வீர வரலாற்று சரித்திரங்கள்.

இச்சமரிலே தங்கள் உயிர்களைக் கொடை யாக்கி தாய்மண் விடுதலைக்காகத் தங்களை ஈகம் செய்த அனைத்து மாவீரர் களுக்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வோமாக.

2 ஆம் கட்ட ஈழப்போர் தொடங்கியது. வெறும் வான் தொடர்புகளை மட்டுமே நம்பி எமது மண்ணில் எதிரி அமைத் துவைத்திருந்த இராணுவ முகாம்களான கோட்டை, கொக்காவில், கொண்டச்சி என்பன போரின் ஆரம்பக் கட்டத்திலேயே இறுக்கமான முற்றுகைக்குட் கொண்டு வரப்பட்டதால் எமது கைகளுள் வீழ்ந்தன. எனவே, எதிரி இப்போது வான்படை, கடற் படை, தரைப் படையென முப் படை களினதும் தொடர்புகளுடன்கூடிய அல்லது அவ்வாறான தொடர்புகளை உடன் ஏற் படுத்தக்கூடிய இராணுவக் கூட்டுத்தளங் களை மட்டுமே எமது பிரதேசங்களில் வைத்திருப்பதற்கு நிப்பந்திக்கப்பட்டான்.

ஆனையிறவுத் தளமும் இத்தகைய அமைப்பைக் கொண்டதாக இருந்தது. இம் முகாம் மீது நாம் தாக்குதலைத் தொடுக் கும் பட்சத்தில் வான், கடல், தரையென மும் முனைகளிலும் எமது நடவடிக் கைகளை எதிகொள்ளக்கூடிய வாய்பான சூழ்நிலையில் ஆனையிறவு இராணுவத் தளம் இருந்தது யாழ்ப்பாணக் குடாநாட்டிற் கும் தமிழீழத்தின் ஏனைய பகுதிகளுக்கு மான ஒரேயொரு தரைப்பாதையாக ஆனையிறவுக் கடல்நீரேரியூடாக ஒடுங் கிச்செல்லும் பாதையில், குடாநாட்டின் கழுத்தை நெரிப்பதுபோல் ஆனையிறவு இராணுவத்தளத்தை எதிரி நீண்டகாலமா கவே வைத்திருந்தான். கடல்நீரேரியும் நீண்ட உப்புவெளிகளைக் கொண்டிருந்த பிரதேசங்களும் எதிரியின் பாதுகாப்பிற்கு நம்பிக்கை கொடுப்பதாக அமைந்திருந்தன

இவ்வாறு, சகலவழிகளிலுமே எதிரிக்குச் சாதகமாக இருந்த ஆனையிறவுத் தளத் தின் மீது ஒரு முற்றுகைத் தாக்கியழிப்புச் சமரை மேற்கொண்டு, அதை வீழ்த்துவ தென எமது இயக்கம் முடிவுசெய்தது. ஒரு மரபுவழிச் சமருக்குரிய ஆட்பலநிலை யிலும் கருவி நிலையிலும் எதிரி பல மடங்கு மேலோங்கியிருந்தான். எனி னும், ஒரு கெரில்லாப் போராட்ட அமைப் பிற்குரிய ஆட்பல நிலையையும் கருவி நிலையையும் மட்டுமே கொண்டிருந்த எமது இயக்கம், மரபுவழிச் சமருக்கு முகங் கொடுக்கக்கூடிய எமது போராளிகளின் மனத்திடத்தை மட்டுமே நம்பிச் சமரங் கைத் திறக்க முடிவுசெய்தது. எமக்குக் கிடைக்கக்கூடிய வளங்களை வைத்து, எமது போராளிகளின் தனித்து வமான தொழினுட்ப அறிவை மட்டுமே பயன் படுத்தி மரபுவழித் தாக்குதலுக்கு மிகவும் இன்றிய மையாததாயிருந்த போர்க் கலங்கள் ஆனையிறவுச் சமருக்காகத் தயாரிக்கப்பட்டிருந்தன. உழவு இயந்திரம்,



புள்டோசர் என்ப ன பெரும் வெட்டை களுடாக எமது அணிகளை நகர்த்து வதற்குத் தேவையான கவச வாகனங் களாக உருமாற்றப்பட்டிருந்தன. எமதியக் கத்தால் தயாரிக்கப்பட்ட “பசிலன் - 2000” என்ற அதிகதாக்கம் விளைவிக்கக்கூடிய குறுந்தொலைவீச்சுப் பீரங்கியும் எம்மிடம் இருந்தது.

எனவே, போராளிகளின் மனப்பலத்தை மட்டுமே பெரிதாக எண்ணித் திட்டமிடப் பட்ட ‘ஆகாய, கடல், வெளி நடவடிக் கையில், முகாமின் தென்பகுதியூடான நட





வடிக்கைகளுக்கான பிரதான பணி சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியிடம் வழங்

கப்பட்டது. ஏனைய படையணிகளையும் உள்ளடக்கி இத்தென்சமர்முனையைச் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் சிறப்புத் தளபதி பால்ராஜ் அவர்கள் வழி நடத்தினார்.

போன்ற இடங்களில் நடைபெற்ற சமகளில் படையினர் கடும் இழப்பினைச் சந்தித் தனர். பூவரசங்குளச் சந்திப்பகுதியில் நடைபெற்ற கடுமையான சமளிற் சிறீலங் கா வான்படைமீதான எமது படையணிப் போராளிகளின் தாக்குதலில் ‘பெல்’ ரக உலங்குவானூர்தி ஒன்று சுட்டுவீழ்த் தப்பட்டது. இது போராட்ட வரலாற்றில் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி புரிந்த முக்கிய சாதனையாகும், எதிரியின் கவச வாகனங்கள் பலவும் சேதமாகின. களத்தில் மூக்குடைபட்ட எதிரி தன் அநா கரிகத்தை வெளிப்படுத்தி அண்டியிருந்த மக்கள் குடியிருப்புக்கள்மீது கண்மூடித் தனமான குண்டு வீச்சுக்களை நடாத் தினான். 19.06.1991 வரை நடந்த கடுமை யான சமரில் 50 இற்கு மேற்பட்ட படை யினரையும் ஆயு தங்களையும் இழந் ததுடன் 150 இற்கு மேற்பட்ட படையினர் படுகாயமடைந்ததிற் படையினர் பின் வாங்கத் தொடங்கிள். புலிகளின் பலம் பற்றி இராணுவ விமர்சகர்கள் வியந்து நின்ற இச்சமரின் வெற்றிக்காகச் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த போராளிகள் 22 பேர் வரலாறாகினர்.

‘வன்னி விக்கிரம’ நடவடிக்கைகளில் இலங்கை இராணுவத்தினரின் இழப் பைப்பற்றி ஆராய்ந்த பி.பி.சி. உலக சேவையின் இலங்கை முகவர் கருத்து வெளியிடுகையில் இலங்கைத்தீவில் இலங்கை இராணுவம் புலிகளிடம் புதிய சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டியுள் ளதாகத் தெரிவித்தார். அவ்வளவிற்குச் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் ‘வன்னி விக்கிரம’ எதிர்த்தாக்குதல் வலுப் பெற்றிருந்ததை உலகம் அறிந்து கொண்டது.

- நெருப்பாற்று நீச்சலில் பத்தாண்டுகள் நூல்

'ஆகாய கடல் வெளி' சமரில் உள்ளூரில் கிடைத்த ஊர்திகளுக்கு கவசமிட்டு அவற்றை 'காப்பூர்திகள்' ஆக மாற்றி அதன் துணை கொண்டு களமாடினர்

1990களின் தொடக்க காலத்தில் விடு தலைப்புலிகளிடம் நவீன கவசவூர்திகள் இருந்திருக்கவில்லை. ஆகையால் அக் காலத்தில் அவர்களால் மேற்கொள்ளப் பட்ட முதலாவது மரபுவழிச் சமரான "ஆகாய கடல் வெளி" நடவடிக்கையின் போது உள்ளூரில் கிடைத்த ஊர்தி களுக்கு கவசமிட்டு அவற்றை "காப்பூர் திகள்" ஆக மாற்றி அதன் துணை கொண்டு களமாடினர். இக் காப்பூர் திகள்(Protective vehicles) முன்செல்ல அதனால் ஏற்பட்ட காப்புமறைப்பினைக் கொண்டு அதன் பின்னால் சென்று படைத் தளத்தினுட் புகுந்து தாக்குதல் நடத்தினர், புலிவீரர். உலகம் வியந்தது ஈழத்தீவினுள் இரு படைத்துறை உள்ளதென்று உல கறிந்தது. அது வரலாறானது!


14-07-01991 அன்று வெற்றிலைக் கேணியில் (சிங்கள கட்டுப்பாட்டுப் பகுதி) 10,000 வீரர்களை சிங்களம் தரை யிறக்கியதன் மூலமாக தமிழரின் இப் படைத்தளம் மீதான முற்றுகை முடிவிற்கு வந்தது.

தமிழர்களில் 602 விடுதலை வீரர்கள் வீரச்சாவடைந்தனர் 1500 மேற்பட்ட போராளிகள் காயமடைந்தனர். சிங்கள வரில் 400 படைத்துறை வீரர்கள் கொல் லப்பட்டு 1000 மேற்பட்டோர் காயமடைந் தனர். இப்படைத்தளம் மீதான முற்று கைக்கு தமிழர்கள் ஆகாய கடல் வெளிச் சமர்(ஆ.க.வெ.) என்றும் சிங்களவர் பலவேகய - 1என்றும் பெயரிட்டனர்.


இச் சமரானது மூன்று முதன்மை பிரிவுகளாக நடைபெற்றது.

1) இடுவாருவக (Bulldozer) காப்பூர்தி – 1

10,11 ஆம் திகதிகளில் நடைபெற்ற தாக் குதல்களில் பங்கேற்ற இடுவாருவக காப் பூர்தியானது 13.07.1991 அன்று உப்பள அலுவலக தாவளத்தில் (Camp) நடை பெற்ற தாக்குதலின் போது சிங்கள வீர



னொருவன் ஏறி கைக்குண்டைப் போட்டு வெடிக்கவைத்ததால் செயலிழந்தது. இம் மூன்று தாக்குதல்களின்போதும் இதை ஓட்டிச்சென்ற மேஜர் கேசரி அவர்களும் இவரிற்கு உதவியாகச் சென்ற கப்டன் டக்ளஸ் அவர்களும் 13 ஆம் திகதி



வீரச்சாவடைந்தனர்.







'இடிவாருக காப்பூர்தி மீதேறும் புலிவீரன் / இந்த ஊர்தியின் அடிப்பகுதியில் சுற்று வரவிற்கு சங்கிலி வலை போடப் பட்டுள்ளது.'

'இடிவாருக காப்பூர்தி மீதேறி களம் விரையும் புலிவீரர்'

2) இழுபொறி (Tractor) காப்பூர்தி – பல

இவ்விழுபொறிகள் சூலை மாதத்தின் 10,11,13 ஆகிய திகதிகளில் நடைபெற்ற



தாக்குதல்களில் பயன்படுத்தப்பட்டன. இழு பொறிகளானவை இரும்புத் தகட்டாலும் சிலாகைகளாலும் மூடப்பட்டு அதனுள் சாக்கில் மண்நிரப்பப்பட்டு அடுக்கி கவச மேற்றப்பட்டு அதன் பின்னால் போரா ளிகள் சென்று தாக்குதல் நடாத்துமாறு வடிவமைக்கப்பட்டது.


3) நெரியுருளை (Road roller) காப்பூர்தி – 1

இதே ஆனையிறவில் இருந்த தடைத் தாவளம் (Block Camp) மீதான இரண் டாவது தாக்குதல் நடவடிக்கைக்கு இரும் புத் தகடு அடிக்கப்பட்ட நெரியுருளையை காப்பாக பயன்படுத்துவதென்று முடிசெய் யப்பட்டு நடந்தேறியது. ஆனால் போக்



கூழாக நெரியுருளைக் காப்பூர்தி எதிரியின் காவலரனுக்கு அண்மையாக சென்ற போது எதிரியின் சேணேவி (Artillery) எறிகணை ஒன்று பட்டு வெடிக்க செய லிழந்தது காப்பூர்தி, அதனோடு சேர்த்து அதனுள்ளிருந்த இரு புலிவீரர்களும்!

இக்காப்பூர்தியைச் செலுத்திய கட்டளை யாளர் லெப்.கேணல் சரா அவர்களும், உதவியாக சென்ற மேஜர் குகதாஸ் அவர்களும் 27.7.1991 அன்று வீரச் சாவடைந்தனர்.





இலங்கைத்தீவின் அமைதி என்பது தமிழர்களுக்கான பரிகாரநீதியில் தங்கியுள்ளது! நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்

பெப்ரவரி 04, 2022

சிறீலங்கா தனது சுதந்திரநாளை கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்நாளில், இலங்கைத்தீவின் முழுஅமைதி என்பது தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கான பரிகாரநீதியில் தங்கியுள்ளது என நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

இரத்தக்கறை படிந்த சிறீலங்காவின் சுதந்திரநாளை, கரிநாளாக தமிழர்கள் எப்போதும் பார்ப்பதானது, இலங்கைத்தீவில் இரு தேசங்கள் என்ற நிலைப்பாட்டை உலகிற்கு வெளிப்படுத்தி நிற்கின்றது எனவும் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் இந்நாள் தொடர்பில் தெரிவிக்கையில், தமிழர்களது இறைமை பறிக்கப்பட்டு சிங்கள பேரினவாதபூதத்திடம் கையளிக்கப்பட்ட நாளாகவே இந்நாள் இருக்கின்றது. இலங்கைத்தீவு முழுவதுமே சிங்களவர்களுக்கு என்ற நிலைப்பாட்டில் இறுகிப்போயுள்ள பௌத்த பேரினவாதமானது, அந்நாள் முதல் தமிழர்களை இனஅழிப்புக்கு உள்ளாக்கி வருவதோடு, தமிழர் தேசத்தை ஆக்கிரமிப்புச் செய்து தமிழர் தாயகத்தை கபளீகரம் செய்து வருகின்றது.



இத்தகையொரு சூழலில் தமிழர்கள் தமது நீதிக்கும், அரசியல் இறைமைக்கும் போராடி வருவதோடு, சிறீலங்காவின் சுதந்திரநாளை கரிநாளாகவே கருதுகின்றனர்.

இனஅழிப்புக்கான பரிகாரநீதியின் அடிப்படையில் தமிழர் தேசத்தின் அரசியல் இறைமை அங்கீகரிக்கப்பட்டு, தமிழர்கள் ஓர் தேசிய இனமாக தமது சுதந்திர தேசத்தை சுவாசிப்பதற்கான நாள் கிட்டாதவரை, இலங்கைத்தீவில் முழு அமைதி என்பது இல்லை என்பதே சிறிலங்காவின் சுதந்திரநாளில் சிங்கள தேசத்துக்கு, தமிழர் தேசம் விடுக்கின்ற செய்தியாக இருக்கின்றது என நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அமைச்சு தெரிவித்துள்ளது.

AFFORDABLE REFRIGERATION SERVICES INC



Kapil: 647.515.8643
kapil.afr@gmail.com

With Best Wishes From

KENNEDY LAW OFFICE

உங்களது அனைத்து சட்டத் தேவைகளுக்கும்.....
கெனடி சட்ட அலுவலகம்

- ☑ REAL ESTATE LAW காணி, வீடுகள் – வாங்கல், விற்றல், அடமானம்
- ☑ BUSINESS LAW வணிகச் சட்டம்
- ☑ CRIMINAL LAW குற்றவியல் சட்டம்
- ☑ FAMILY LAW குடும்பச் சட்டம்
- ☑ IMMIGRATION LAW குடிவரவுச் சட்டம்
- ☑ ODSP APPEALS
- ☑ SMALL CLAIMS
- ☑ WILLS, POWER OF ATTORNEY & AFFIDAVITS
- ☑ NOTARIZING & COMMISSIONING





W.KENNEDY BERNADIUS, LL.B
BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC

Tel: 416 613 4900
Fax: 416 613 4904
E: williamkennedylaw@gmail.com

2390 Eglinton Ave., East, Suite# 250, Scarborough, ON M1K 2P5 (Kenndy & Eglinton)



தமிழின அழிப்பு நினைவுப் பகிர்வு

உடும்பன்குளம் படுகொலை 19.02.1986

ஒவ்வொரு வருடமும் மாசி மாதம் மக்கள் விவசாய நிலங்களில் அறுவடை செய்யும் காலமாகும். உடும்பன் குளத்தில் தங்களது வயல்களில் நூற்றுக்கணக்கான குடம்பங்கள் கொட்டகை அமைத்து வயல் வேலைகள் முடியுமட்டும் அங்கேயே தங்கியிருந்து தமது அறுவடையினை முடித்துகொண்டு நெல் மூட்டைகளுடனேயே திரும்புவது வழக்க மாகும். இவ்வாறே 1986ஆம் ஆண்டு மாசி மாதமும் வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது பிள்ளைகளுடன் தங்கி யிருந்து வயலில் அறுவடை செய்து கொண் டிருந்தார்கள். 1986.02.19 அன்று காலை 6.30 மணியளவில் கொண்டைவெட்டுவான் இராணுவ முகாமிலிருந்து கவச வாகனங் களில் வந்த இராணுவத்தினரால் உடும்பன் குள வயல்களில் அறுவடை செய்து கொண் டிருந்தவர்களும், அங்கு தங்கியிருந்தவர் களும் சுற்றி வளைக்கப்பட்டார்கள். இவர்கள் அனைவரும் இராணுவத்தினராற் கைது செய்யப்பட்டு கைகள், கண்கள் கட்டப்பட்டார் கள். இவ்வாறு கைது செய்தவர்களில் பெண்கள் இராணுவத்தினராற் பாலியல் வல்லுறவிற்குட்படுத் தப்பட்டார்கள். ஆண் களின் ஆண் உறுப்பு வயலில் நெல் வெட்டு வதற்கு பயன்படுத்தப்படும் அரிவாளினால் வெட்டப்பட்டது. இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட அனைவரும் மிகவும் மோசமான முறையில் துன்புறுத்தப்பட்டார்கள் பலர் இராணுவத் தினரின் துன்புறுத்தலினாலேயே தமது உயிரினை இழந்தார்கள். பின்னர் எஞ்சியிருந்தவர்களைச் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்ததுடன், அவர்களின் உட லினை அறுவடை செய்யப்பட்ட நெற்கூட்டினுள் ஒன்றாகப் போட்டு எரித்தார்கள். இவ்வாறு 1986.02.19 அன்று காலை இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வயலில் வேலை செய் துகாண் டிருந் தவர் கள், வாடியில் தங்கியிருந்தவர்கள் என நூறறு முப்பத்து மூன்று பேரிற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந் தார்கள். இவர்களில் ஒரு சிலர் பலத்த காயங் களுடன் உயிர் தப்பியிருந்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து 21.02.1986 அன்று மட்டக் களப்பு பிரசைகள் குழு வணபிதா சந்திரா பெர்ணான்டோ, நாளேட்டாளர்கள் ஆகியோர் சம் பவம் நடந் த இடத் திற் குச் சென் று



அரைகுறையாக எரிந்த நிலையிலிருந்த தொண்ணூற்றெட்டுப் பேரினது உடல்களை எடுத்து அடக்கம் செய்தார்கள். உடும்பன் குளத்தில் வயல்களில் அறுவடை செய்து கொண்டிருந்தவர்கள் மீதான தாக்குதலை நடத்திய இராணுவத்தினருக்குப் பொறுப்பாக லெப்டினன்ட் சந்திரபால தலைமை தாங் கினார். இச்சம்பவத்தில் இராணுவத்தினருடன் இணைந்து முசுலிம் குழுக்களும் தாக்குதல் களை நடத்தியிருந்தார்கள்.


இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது தொழில்)

01. இராசையா தவேந்திரன் 18
02. இராமசாமி கந்தையா 48
03. ந.கோபாலகிருஸ்ணன் -
04. ந.விநாயகமூர்த்தி –
05. க.பாக்கியராசா –
06. கதிரேசபிள்ளை வைரமுத்து –
07. குமரவேல் நாகராசா 27
08. கணேசமூஉத்தி பேரின்பன் 28
09. கணேசபிள்ளை மோகனராசா 22
10. கணபதி வடிவேல் 27
11. பத்மநாதன் –
12. மைலன் தியாகராசா 18
13. த.உமன் 22
14. தாசப்பு செபமாலை –
15. தாசப்பு செல்லையா –
16. துரை இராமலிங்கம் -
17. தம்பிப்பிள்ளை குமாரவேல் -
18. மயில்வாகனம் தியாகராசா. 13
19. மார்க்கண்டு ரவீந்திரன் -
20. முத்துப்போடி சுமனாவதி –
21. முத்துசாமி முத்துலிங்கம் -
22. மசன்னா ஜெயராஜ் -
23. ஆ.நல்லதம்பி –
24. ஆ.சோமசுந்தரம் -
25. பொன்னன் இராசதுரை –
26. பொன்னம்பலம் யோகராசா 18
27. சோமசுந்தரம் கருணாநிதி 21
28. வெங்கிட்டன் குழந்தை –
29. ஞானமுத்து புவனேந்திரன் -
30. சுந்தரம் சின்னவன் 20
31. சீனித்தம்பி –
32. சீனித்தம்பி தவநாகன் 30
33. சீனித்தம்பி அருள்செல்வன் 18
34. சில்வஸ்ரர் இன்னாச்சி 32
35. சுவாமி டேவிட் 29
36. வயிரமுத்து சுந்தரலிங்கம் -
37. வர்ணகுலசிங்கம் புண்ணியமூர்த்தி 21
38. விஸ்வகேது இராசா 23
39. ரங்கன் போல் -

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விரபங்களையும் பெறமுடியவில்லை.

வங்காலை படுகொலை 17.02.1991

வங்காலைக் கிராமமானது, மன்னார் மாவட்டத்தின் நானாட்டான் பிரதேசசெயலர் பிரிவில் வடக்குத் திசையாக கடற்கரையோரத்தில் அமைந்துள்ளது. 1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் மன்னார்த்தீவின் நுழைவாயிலிலுள்ள பாரிய சங்கிலிப் பாலமும் தொடருந்துப் பாலமும் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுப் போக்குவரத்துச் செய்யமுடியாத நிலை உண்டா கியதன் காரணமாக தாழ்வுப்பாட்டுக் கடற்கரையிலிருந்து கடல் வழியாக கற்பிட்டியூடாகக் கொழும்புக்கு மக்கள் பிரயாணம் செய்தனர். இந்நிலையில் வங்காலையைச் சேர்ந்த மக்கள் இராணுவத்தின் கெடுபிடிகளினால் வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர். வீடுகளிலிருந்து வெளியேறாதவர்களை இராணுவத்தினர் பலவந்தமாக வெளியேற்றிவிட்டு வீடு களிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்கள் அனைத்தையும் சூறையாடினார்கள். வங்காலை மகாவித்தியாலய அதிபராகக் கடமையாற்றிய செபமாலை அவர்களும் ஜஸ்டின் லம்பேட் என்ற வங்காலையைச் சேர்ந்த ஆசிரியரும் இன்னும் சிலரும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்குவதற்காகக் கற் பிட்டி வழியாக கொழும்பு சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு 16.02.1991 இல் படகில் தாழ்வுப்பாட்டுக்கு வந்து அன்றிரவு அங்கு தங்கியிருந்து மறுநாள் 17.02.1991ன்று காலை பத்து மணிக்கு துவிச்சக்கர வண்டியில் வங்காலை வழி யாக காத்தான்குளம் சென்றார்கள். இவர்கள் வங்காலைப் பாடசாலைச் சந்திக்கு வரும்போது இராணுவத்தினர் செப மாலை (அதிபர்), ஜஸ்டின் லம்பேட் (ஆசிரியர்), சூசையப்பு (ஆசிரியர்), நவரட்ணம் குருவிக்கந்தையா ஆகியோருடன் ஒரு சிறுவனையும் தடுத்து நிறுத்தி கயிற்றினால் கைகளையும் துணியினால் கண் களையும் கட்டிவிட்டு சூசையப்பு ஆசிரியரைக் கத்தியால் குத்தினார்கள். பின்னால் வந்தவர்கள் இந்த நிகழ்ச்சியை நேரிற் பார்த்துகொண்டு சென்று முருங்கன் பங்குத்தந்தையிடம் முறையிட்டனர். மறுநாளாகியும் கைது



செய்யப்பட்டவர்கள் வீடு திரும்பாததினால் உறவினர்களும் பங்குத்தந்தையும் தள்ளாடி இராணுவமுகாமிற்குச் சென்று உத்தரவுபெற்று அவர்களைத் தேடுவதற்கு வங்காலைக்கு வந்தபோது வங்காலைச் சந்தியிலிருந்து உள்ளே செல்லவிடாது இராணுவத்தினர் தடுத்தனர். அப்படியிருந்தும் உறவினர்களில் இருவர் மட்டும் சென்று, சந்திக்கு அருகிலிருந்த பூர்சியல் பீரிஸ் ஆசிரியரின் பூட்டியிருந்த வீடு திறந்திருந்ததைக் கண்டு அதனுள் சென்றபொழுது அந்த வீட்டு அறைகளெல்லாம் இரத்த வெள்ளமாகக் காணப்பட்டது. இரத்தத் தடயங்களின் வழியே சென்று பார்த் தபொழுது வீட்டின் பின்னாலிருந்த கிணற்றுக்குள் ஐந்து சடலங்களும் துண் டங்களாக்கப்பட்டுப் போடப்பட் டிருந்தது. எனினும் அப்போதைய சூழ்நிலையில் உடனடியாக சடலங்களை மீட்க முடியாதிருந்தது.

1993ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியமர்ந்தபோது பூர்சியன் ஆசிரியரின் வீட்டிற்குப் சென்று பார்த்தபொழுது கிணறு மட்ட மாக்கப்பட்டிருந்தது. பூர்சியன் ஆசிரியரின் வீட்டுக் கிணற்றில் முன்னர் ஐந்து சடலங்கள் போடப்பட்டிருந்தன என்பதைக் காவற்றுறையினருக்குத் தெரியப்படுத்தி, அவர்களின் உதவி யுடன் உயிரிழந்த ஐவரினதும் எலும்புக்கூடுகள் மீட் கப் பட் டு மன் னார் வைத் தியசாலையில் ஒப் படைக் கப் பட் டன. பின் னர் ஐவரின் எலும்புக்கூடுகளும் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டன. இனறு வரை இவை தொடர்பாக எந்த மேலதிக விசாரணைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இச் சம் பவத் தில் கொல் லப் பட் டோாகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. அந்தோனி கொபின்லெம்பேட் ஆசிரியர் 36
02. அந்தோனிப்பிள்ளை செபமாலை பாடசாலை அதிபர் 49
03. அப்புக்குட்டி கந்தையா கமம் 51
04. செபமாலை அந்தோனி விவசாயம் 30
05. சீமான் தற்குரூஸ் சூசையப்பு பாடசாலை உப அதிபர் 43

குறிப்பு: இச்சம்பவத்தில் பாதிப்படைந்த அனைவரது பெயர் விபரங்களையும் பெறமுடியவில்லை.

வட்டக்கச்சி அரசநெற்பண்ணை குண்டுவீச்சு - 28.02.1991

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சிப் பிரதேசசெயலர் பிரிவில் வட்டக்கச்சி என்னும் கிராமம் காணப்படுகிறது. இங்கு வாழ் கின்ற மக்களின் பிரதான தொழில் விவசாயமாகும். அத்தோடு சிலர் பகுதிநேர நன்னீர் மீன்பிடி மற்றும் கூலித்தொழிலிலும் ஈடுபட்டுள்ளார்கள். இப்பிரதேசத்தில் "அரச நெற்பண்ணை" என்னும் பெயரில் நெல்வயல்கள் காணப்பட்டன. இங்கு வேலை செய்பவர்கள் தங்கி வேலை செய்வதற்காக வட்டக்கச்சி மூன்றாம் வாய்க்காற் பகுதியில் அரச நெற்பண்ணை விடுதிகள் அமைக்கப்பட்டிருந்தன. இங்கு ஐந்து குடும்பத்தை சேர்ந்தவர் கள் தங்கியிருந்தனர்.

28.02.1991ன்று காலை 7.00 மணியளவில் வேலைக்குச் செல்வதற்காக விவசாயிகள் விடுதிகளில் காலை உணவு அருந்திக்கொண்டிருந்த வேளையில் விமானப்படையினரின் இரண்டு "பொம்பர்" விமானங்கள் வட்டக்கச்சிப் பிரதேசத்தைச் சுற்றிவந்து மூன்று குண்டுகளை வீசியது. இதில் ஒரு குண்டு விடுதிக்குள் வெடிக்க மற்றைய இரண்டும் வயற்பிரதேசங் களிலும் வீழ்ந்து வெடித்தன. இதில் ஒன்பது பேர் உயிரிழந்தனர். மூன்று பேர் காயமடைந்தனர். உயிரிழந்த ஒன்பது பேரில் ஆறு பேரின் உடல்கள் சிதறுண்டு உருக்குலைந்துபோக ஏனைய மூன்று பேரின் உடல்களையும் காயப்பட்ட மூவரையும் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றார்கள். இந்தச் சம்பவத்தை அடுத்து தம் உறவுகளை இழந்த நிலையில் அக்குடும்பங்கள் விடுதிகளை விட்டு வேறிடங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றன. இந்தச் சம்பவத்தின் போது சம்பவ இடத் திலிருந்த்த இராமையா பரமசுந்த்தரம் அவர்க்கள் தெரிவித் ததாவது,

"நான் நெற்பண்ணையில் இருந்த வேளை 28.02.1991ன்ற பொம்மர் விமானம் வந்து குண்டு போட்டது. இந்தச் சம்பவத்தில் சம்பவ இடத்திலேயே ஒன்பது பேர் கொல்லப்பட்டார்கள். மூன்று பேர் காயமடைந்தார்கள். காயமடைந்தவர்களை உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு போய் காப்பாற்றிவிட்டார்கள். இறந்தவர்கள் அனைவரையும் ஒரே குழியிற் போட்டு புதைத் தோம். இச்சம்பவத்தில் பண்ணையிலிருந்த கிட்டத்தட்ட நாற்பது ஆடுகள், இருபது கோழிகள் இறந்தன. அவற்றையும் மனித உடல்களுடன் ஒரே குழியிற் போட்டுப் புதைக்க வேண்டிய சூழல் இருந்தது. ஏனென்றால் திரும்பவும் புக்காரா வந்து குண்டு போடுமோ என்ற பயம் இருந்துகொண்டே இருந்தது. சம்பவம் நடந்த இடத்திற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வந்து பார்வையிட்டுச் சென்றது. மக்களை அழிக்கவேண்டும் என்ற எண்ணத்தோடுதான் இந்த இடத்தில் குண்டு போட்டதாக நான் கருதுகிறேன். ஏனென்றால் காலையில் தொழிலுக்குப் போகமுன் 7.30 மணியளவில் வந்து குண்டு போட்டால் எல்லோரும் இறப்பார்கள் என்ற திட்டம்தான். இன்று நேற்றல்ல, 1990ம் ஆண்டிலிருந்தே சிறீலங்கா இராணுவம் தமிழ் மக்களை கொலை செய்து கொண்டுதான் இருக்கிறது."

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம்

01. இராசேந்திரம் சித்திரம்மா
02. நாகமுத்து ஆறுமுகம்
03. முனியாண்டி செல்வம்
04. முருகையா சுமதி
05. முருகையா சித்திரா
06. ஆறுமுகம் இராசேந்திரன்
07. ஆறுமுகம் கமலாதேவி
08. ஆறுமுகம் விஜயலட்சுமி
09. சின்னத்தம்பி உமாதேவி

சுண்டிக்குளம் மீனவர் படுகொலை - 18.02.1994

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளைப் பிரதேசசெயலர் பிரிவில் அடங்கியுள்ள சுண்டிக்குளம் எனும் பிரசேத்திலுள்ள ஒரு மீனவர் குடியிருப்பு தொடுவை வாய்க்கால் ஆகும். இங்கு வாழ்பவர்களது சீவனோபாயத் தொழில் மீன்பிடி ஆகும். 18.02. 1994 அன்று அதிகாலை 5:15 மணியளவில் இப்பகுதி மீனவர்கள் மீன் பிடிப்பதற்காகக் கட்டு மரங்களில் கடலை நோக்கிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்தவேளை அங்கு வந்த கடற்படையின் "டோறாப்படகு" மீனவர்கள் மீது திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தவேளை அங்கிருந்த மீனவர்கள் சிலர் தப்பிச் செல்லும் நோக்கில் கட்டுமரங்களை விட்டு கடலில் குதித்து நீந்தியவண்ணமும் மற்றவர்கள் வலைகளை அறுத்து விட்டும் கரையை நோக்கிக் கட்டுமரங்களை நகர்த்திய வண் ணமும் இருந்தனர். கடற்படையினரோ மீனவர்களை நோக்கித் தொடர்ந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கரையோரக் குடியிருப்புக்களிலிருந்த அனைவருக்கும் தெளிவாகக் கேட்க தங்கள் உறவுகள் மீன் பிடிக்கச் சென்றதை எண்ணி ஏங்கிக் கரையை நோக்கி ஓடி வந்து அவர்கள் பார்த்தவேளை கடற்படையின் டோறாப்படகு கடற்கரையை மிகவும் அண்மித்து வந்து மீனவர்களைச் சுடுவதைக் கண்டனர். தாக்குதலுக்கு இலக்காகி மீனவர்கள் கடல் நீரில் சோர்ந்து விழுவதைக்கண்டு மக்கள் கதறியழுதனர். கடற்படையின் தாக்குதலில் பத்து மீனவர்கள் கடலில் உயிரிழந் தனர். தாக்குதல் நடந்தன்று மூன்று பேரின் உடல்களே கிடைக் கப்பெற்றன. ஏனைய ஏழு பேரது உடல்களும் மறுதினமே கரையொதுங்கியன. இந்த தாக்குதலினால் பீதியுற்ற மீனவர்கள் சிலமாதங்களாக மீன்பிடித் தொழிலில் ஈடுபடவில்லை. இதனால் அன்றைய காலகட்டத்தில் அப்பிரதேச மீனவர்கள் மிகவும் வறுமையான நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டோகளின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் தொழில் வயது)

01. இயக்கோ கபிரியேல்பிள்ளை 29
02. இயக்கோப்பிள்ளை நிக்சன் 20
03. கரியோப்பிள்ளை அருள்ஜெயசீலன் 25
04. மனுவேற்ப்பிள்ளை மரியசீலன் 26
05. அந்தோனிப்பிள்ளை இயக்கோப்பிள்ளை 46
06. அமிர்தநாயகம் யோன்பொன்னான்டோ 35
07. ஆசிர்வாதம் வினஞ்சேநிதிமரிசலின் 44
08. யேசுராசா அலோசியஸ் சாந்தகுமார் 22

கிராஞ்சி படுகொலை - 22.02.2008

கிராஞ்சி படுகொலை - 22 பெப்பிரவரி 2008

கிளிநொச்சி மாவட்டம் பூநகரி பிரதேசசெயலர் பிரிவிலுள்ள கிராஞ்சி சிவபுரம் என்னும் கிராமத்தின் முருகன் கோயிலுக்கு அருகாக உள்ள மக்கள் குடியிருப்புக்கள் மீது 2008 22ஆம் நாள் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணியளவில் சிறீலங்கா வான்படையினரின் குண்டுவீச்சு விமானங்கள் குண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டன. இதன்போது ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறு மாதக் குழந்தை, 04வயதுச் சிறுவன், அவர்களின் தாயார் மற்றும் ஆங்கில ஆசிரியர் ஒருவர் என எட்டுப் பொதுமக்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட டனர். மேலும் படுகாயமடைந்த நிலையில் 12 பொதுமக்கள் முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மிகவும் ஆபத்தான நிலையிலுள்ள 07 பேர் உடனடியாக நோயாளர் காவுவண்டி மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர். மறுநாள் பூமணி என்ற வயோதிபர் சிகிச்சை பலனளிக்காது மரணமானார்.

இச்சம்பவத்தின் போது கொல்லப்பட்டோரின் கிடைக்கப்பெற்ற விபரம் (பெயர் வயது)

01. சசிகரன் கௌரிநாயகி, 34
02. சசிகரன் தமிழ்வேந்தன், 06மாதம்
03. சசிகரன் கஜீவன், 04
04. கதிரவேலு திருநீலகண்டன், 79
05. கிருஸ்ணசாமி சிவாநந்தி, 27
06. விஜயகுமார் விதுஜா, 21
07. இந்திரன் லலிதா
08. சுதாகரன் சுமதி, 30
09. தர்மலிங்கம் பூமணி, 68

22.02.2008 அன்று கிராஞ்சியில் காணமடைந்தவர்களின் விரபம்

1. சசிகரன் காருன்னியன் (08)
2. சிறீபதி இராஜேஸ்வரி (33)
3. சத்தியநாதன் தேவநாயகி (43)
4.சதாசிவம் கமலாதேவி (60)
5. சுதாகரன் பானுசன் (06)
6. விஜயகுமார் சிவாநந்தினி (36)
7. விஜயகுமார் டினோசன் (21)
8. அருளாநந்தம் லீலாதேவி (68)
9. அருளாநந்தம் சத்தியவரதன் (43)
10. தேவநாயகி (43)
11. தர்மலிங்கம் பூமணி (68)
12. விஜயகுமார் கிநோசன் (02)













"இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துங்கள்"

ஐநாவுக்கான இலங்கை வதிவிடப்பிரதிநிதியிடம் யாழ் மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன்

பெப்ரவரி 03, 2022



யாழ்ப்பாணம் வருகை தந்துள்ள ஐநாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹானா சிங்கருக்கும் யாழ். மாநகர முதல்வர் வி மணிவண்ணனுக்கும் இடையில் கலந்துரை யாடல் ஒன்று நேற்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் ஐநாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மற்றும் உயர் அதிகாரிகளுடன் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் மற்றும் மாநகர ஆணை யாளர் இ.த.ஜெயசீலன் ஆகியோர் பங்குபற்றினர்.

இக்கலந்துரையாடலில் ஐநாவுக்கான வதிவிடப் பிரதிநிதி இடம் மாநகர முதல்வர் பின்வரும் கருத்துக்களை ஆணித் தரமாக தெரிவித்தார்.

கொடிய யுத்தம் நடைபெற்ற காலத்தில் ஐக்கிய நாடுகள் சபை போரை நிறுத்தும் எமது மக்களை காப்பாற்றும் என்று நாம் பெரும் நம்பிகை கொண்டிருந்தோம். ஆனால் அவ்வாறு நடைபெறவில்லை. 150,000க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டனர் அல்லது காணாமல் ஆக்கப்பட் டனர். இந் நிலையில் போருக்கும் பிற்பாடும் ஐநா தொடர்ந் தும் தவறு இழைத்து வருகின்றது.

யுத்ததத்தில் போர்குற்றம் புரிந்ததாகக் கூறப்படுகின்ற படை அதிகாரிகள் உயர் பதவிகளுக்கு நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் தமிழ் இனத்தின் மீது மேற்கொண்டதாக கூறப் படும் படுகொலைகள் தொடர்பில் நீதி விசாரணைகள் எது வும் நடைபெறவில்லை.

இனப்படுகொலை என்பது சர்வதேச குற்றம் அதை யாரும் ஒரு நாட்டின் உள்ளக ரீதியான பிரச்சனை என்று கை விட்டு விடமுடியாது. யுத்தம் முடிவடைந்த பின்னரும் எங் களுடைய பொருளாதார வளம், கல்வி பண்பாடுகள் கலாச் சாரம் போன்ற எங்களுடைய அடிப்படைகள் அழிக்கப் படுகின்றன.

2ஆம் உலக யுத்தத்திற்கு பின்னர் ஐக்கிய நாடுகள் சபை ஏன் உருவாக்கப்பட்டதெனில் நாடுகளைப் பாதுகாப்பதற்கு காக அபரிக்கப்படுகின்றன. அந்த காணி உரிமை யாளர்கள் இடைத்தங்கல் முகாங்களில் அகதி வாழ்க்கை வாழ்கின்றனர். எமது பொருளாதரம் என்பது இரண்டு விடயங்களில் தங்கியுள்ளன. ஒன்று விவசாயம் மற்றது மீன்படி. இன்று எமது விவசாய காணிகள் பலவற்றை இராணுவம் தமது தேவைகளுக்காக பயன்படுத்து கின்றது. இதனால் எமது பொருளாதாரம் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது. மீன்பிடி என்பது அரச இயந்திரத் தையும் தாண்டி தற்போது இந்திய மீனவர்களின் அத்து மீறலால் எங்களுடைய மீனவர்கள் பெரும் துன்பம் அடைகின்றார்கள். அவர்களது வலைகள் அறுக்கப்படுகின் றன படகுகள் அழிக்கப்படுகின்றன. இவ்வாறு பல விடயங் களில் திட்டமிட்டு எமது பொருளாதாரம் அழிக்கப்படுகின் றது என்றார்.

இந்திய அரசாங்கத்தினால் யாழ்ப்பாணத்தில் கலாச்சார மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ் மண்டபம் அமைப்பதற்கு முன்னர் இலங்கை அரசாங்கமும் இந்தியா அவர்களின் வரலாற்றில் இருந்து தான் சட்டங்கள் இயற்ப்பட வேண்டுமே ஒழிய பெரும்பான்மை இனத்தின் வரலாற்றைக் கொண்டு சட்டங்களை இயற்றிக் கொண்டு அதனை ஏனைய இனங்கள் மீது திணிக்கின்ற நிலைமை இங்கு காணப்படுகின்றது.

எமது அரசியில் அபிலாசைகளை நாம் பெற்றுக் கொள்வது தொடர்பில் நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன். ஆனால் நீங்கள் எடுக்கின்ற நடவடிக்கைகள் போதாது. அரசியல் கைதிகள் சிறைகளில் பல்லாண்டு காலமாக விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டு இருக்கின்றார்கள். காணாமல் போன உறவுகள் நீதி வேண்டி போராடுகின்றார்கள். அவ்வாறு இருக்கையில் நீங்கள் விடுகின்ற வெறும் அறிக் கைகள் அல்லது தீர்மானங்கள் எங்களுடைய அரசியல் அபிலாசைகளுக்கான தீர்வுகளைத் தராது. அறிக்கைகள் ஆறுதல் அளிக்காது. கூடிய விரைவில் சர்வதேச குற்ற வியல் நீதிமன்றம் அல்லது விசேட குற்றவியல் நீதிமன்



அல்ல அந்த நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காக. அந்த நியாயப்பாட்டை அதன் முக்கியத்துவத்தை ஐ.நா முன் னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

இறுதியுத்தம் தொடர்பான மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மட்டுமல்ல கடந்த காலங்களில் எமக்கு எதிராக இழைக்கப்பட்ட அனைத்து குற்றங்கள் தொடர்பிலும் கரி சனை செலுத்துவதோடு அதற்கான தீர்வையும் எமக்கு பெற்றுத் தரவேண்டும்.

தற்போதும் எங்களுடைய காணிகள் அபகரிக்கப் படுகின்றன. வலி வடக்கு பகுதியில் பல நூற்றுக்காணக் கான ஏக்கர் தனியார் காணிகள் இராணுவம் கடற்படை விமானப்படை என தங்களுடைய படைத் தேவைகளுக் அரசாங்கமும் கலாச்சார மண்டபத்தினை அமைத்து அதனை யாழ்.மாநகர சபையிடம் கையளிப்பது என்று ஒப்பந்தம் செய்தது. ஆனால் இக் கட்டிடம் அமைக்கப்பட்ட பின்னர் தற்போது இது யாழ்.மாநகர சபைக்குத் தரமுடி யாது மத்திய அரசாங்கத்திடம் தரவேண்டும் என்று அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இதன் காரணமாக கட்டி முடிக்கப்பட்டு ஒன்றரை வருடத்திற்கு மேல் அது திறக்கப் படாமல் உள்ளது என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்று கூறப்படுகின்றது. எப்படி அது சாத்தியம் இங்கு தமிழர்கள் சிங்களவர் முஸ்லீம் மலையகத் தமிழர் என்று பல இன மக்கள் வாழ்கின்றார்கள். அவர்களுக்கு என்று ஒரு வரலாறுப் பண்பாட்டு பாரம்பரியங்கள் உள்ளன. றத்தின் மூலமாகவே எமக்கான பிரச்சனைகளுக்கான நிரந்த தீர்வுகள் எட்டப்படும் என்பதில் எமது தமிழ் அரசியல் தலைவர்களும் மக்களும் விரும்புகின்றார்கள்.

நான் உங்களிடம் இரண்டு கோரிக்கைகளை முன்வைக் கின்றேன். ஒன்று எமது இனத்தின் மீது காலாகாலம் மேற்கொள்ளபட்ட இனவழிப்புகளுக்கு சர்வதே குற்ற வியல் நீதிமன்றத்தின் மூலம் நியாயம் கிடைக்கப்பெற வேண்டும். சுயநிர்ணய உரிமை அங்கீகிக்கப்பட்ட எமக் கான அரசியல் தீர்வை பெற ஐநா உதவ வேண்டும். இரண்டாவது திட்டமிட்டு அழிக்கப்படுகின்ற பொருளாதார கட்டமைப்புக்களை மேம்படுத்துவதற்கு எமது மக்களுக் கான வாழ்வியலை மேம்படுத்தவும் உதவ வேண்டும் என்றார்.

வட, கிழக்கு தமிழ் மக்கள் சார்பாக தலையிட இந்தியாவுக்கு சட்டரீதியான உரிமை உண்டு"இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது பாரதமே தவிர தமிழ் தலைவர்களோ, புலிகளோ அல்ல"

– முன்னாள் முதலமைச்சரும், யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமானசி.வி. விக்கினேஸ்வரன்–

01.02.2022

தமிழர்களின் பிரதிநிதிகளோ அல்லது புலிகளின் தலைவர் களோ இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வில்லை. இந்தியாவே தமிழர்கள் சார்பாக ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. எனவே, இலங்கை அரசாங்கம் நாடளாவிய ரீதியில் சிங்கள பௌத்த பெரும்பான்மை அரசாங்கத்தை உருவாக்க முயற்சிக்கும் போது வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் சார்பாக தலையிடுவதற்கு இந்தியாவுக்கு சட்டரீதி யான உரிமையும் தார்மீகக் கடப்பாடும் உள்ளதென வட மாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ் மாவட்ட எம். பி யுமான சி. வி. விக்கினேஸ்வரன் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற முழக்கத்தின் கீழ் சிறுபான்மை யினருக்கு பாதுகாப்பற்ற, சிங்கள பௌத்த அரசாங்கத்தை அமைப்பதற்காக புதிய அரசியலமைப்பைக் கொண்டு வருவதற் கான இலங்கை அரசாங்கத்தின் இரகசிய நோக்கங்களை சுட்டிக்காட்டும் வகையில் இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்புவதற்கு 7 தமிழ்க் கட்சிகளும் தீர் மானித்ததாக அவர் விபரித்திருக்கிறார்.

ஏழு தமிழ் கட்சிகளின் கடிதம் நரோந்திர மோடிக்கு அனுப்பப் பட்டதற்கும் உத்தேச புதிய அரசியலமைப்புக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதாவென அவரிடம் எழுப்பப்பட்டிருந்த கேள்வி யொன்றுக்கு பதிலளிக்கையில் இதனை தெரிவித்திருக்கும் அவர் மேலும் கூறியிருப்பதாவது,

பதில்: அநேகமாக ஆம்.
வடக்கு மற்றும் கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் தொடர்பாக புதிய அரசியலமைப்பில் பயனுள்ள மாற்றங்களை நாங்கள் எதிர் பார்க்கவில்லை. 1972 மற்றும் 1978 இன்இரண்டு முன்னைய அரசியலமைப்புகள் மீதான விவாதத்தை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களால் உத்தியோகபூர்வமாக எதிர்க்கவும் புறக் கணிக்கவும் மட்டுமே முடிந்தது. வடக்கு ,கிழக்கு தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத அர சியலமைப்பை பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதி லிருந்து தடுக்கக்கூடியதாக எதுவும் சாத்தியமற்றதாகவிருந்தது இம்முறையும் சிங்கள பெரும்பான்மை அரசாங்கம் வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காமல் அவர்களின் நலன்களுக்கு விரோதமான அரசியலமைப்பை கொண்டுவரும்.

1978 ஒற்றையாட்சி அரசியலமைப்பு இன்று தமிழ் பேசும் மக்களுக்கு வழங்கும் ஒரேயொரு வலுக் குறைந்த நன்மை பதின்மூன்றாவது திருத்தமாகும். 1987 ஆம் ஆண்டு மாகாண சபை முறையை அறிமுகப்படுத்தி வடக்கு, கிழக்கில் உள்ள தமிழ் பேசும் மக்களுக்கு அரசியல் நன்மைகளை வழங்கு வதற்கு இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையில் கலந்துரை யாடல்கள் இடம்பெற்ற போதிலும், அதனை அமுல்படுத்தும் போது ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனா நாடளாவிய ரீதியில் மாகாணசபை முறைமையை பிரயோகிப்பதை தேர்ந் தெடுத்தார் இப்போது அவர்கள் மாகாண சபைகளை வெள் ளை யானை என்று குறிப்பிடுகிறார்கள். சிங்களவர்கள் அதிகம் வசிக்கும் பகுதிகளில் அவ்வாறு இருக்ககூடும், ஆனால் இலங்கை பூராகவும் உள்ள வடக்கு, கிழக்கு தமிழர்கள், முஸ்லிம்கள் மற்றும் மலையகத் தமிழர்களின் பார்வையில் அவர்களின் தனித்துவத்தை பிரதிபலிக்கும் வகையில் மாகாண சபை மட்டுமே உறுதியான சட்டரீதியான நிறுவனமாக உள் ளது.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் பார்வையில் மாகாணசபை முறைமை எடுத்துவிட்டால் இந்த நாட்டில் நாம் மற்றொரு சிறு பான்மை இனமாக மாறிவிடுவோம். உண்மையில் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களே பெரும்பான்மையாக உள் ளனர். ஏழு மாகாணங்களிலுமுள்ள பெரும்பான்மையினர் இரண்டு மாகாணங்களிலுமுள்ள பெரும்பான்மையினரை முழு தீவு முழுவதும் சிறுபான்மையினராக மாற்ற முடிந்தது.

தமிழர்கள் 3000 ஆண்டுகளுக்கும் மேலான நீண்ட வர லாற்றைக் கொண்டுள்ளனர், ஒரு பழமையான மொழியைப் பேசுகிறார்கள், தீர்க்கமான தாயகங்களைக் கொண்டுள்ளனர், பெரும்பான்மையான சிங்களவர்களிடமிருந்து வேறுபட்ட மதங் களையும் கலாசாரங்களையும் பின்பற்றுகிறார்கள். சர்வதேச உடன்படிக்கைகளின் அடிப்படையில் தமிழர்களுக்கு சுய நிர்ணய உரிமை உண்டு. வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக் களுக்கு முழுமையான அதிகாரப்பகிர்வை வழங்காமல், ஒற்றையாட்சி அரசியலமைப்பிலிருந்து பதின்மூன்றாவது திருத் தத்தை நீக்கினால், எங்களுடையது என்று அழைக்கக்கூடிய எந்த வொரு உறுதியான சட்டரீதியான நிறுவனமும் இல்லாமல் நாங்கள் நிராதரவாகிவிடுவோம். நாங்கள் அறி முகப்படுத்த முயற்சித்திருந்த பிரயோசனமான பொருளாதாரத் திட்டங்களை அரசாங்கம் அதனது தரப்பில் தடுத்து ஊறு விளைவித்தபோதும் வடமாகாண முதலமைச்சர் என்ற ரீதியில்வடக்கில் மாசு படுத்தும் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கு விரும்பத்தகாத சக்திகள் மேற்கொண்ட முயற்சிகளை என்னால் தடுக்க முடிந்தது.

வடக்கு, கிழக்கு மக்களைப் பொறுத்த வரையில் மாகாணசபை வலுக்குறைந்ததாகவும் வினைத்திறனற்றதாகவும் இருந்த போதிலும், ஏனைய இடங்களில் பெரும்பான்மை சிங்களம் பேசும் இடங்கள் என்பதற்கு மாறாக தமிழ் பேசுபவர்கள் என்ற சட்டரீதியான அங்கீகாரத்தை வடக்கு கிழக்கு மக்களுக்கு இப்போதும் வழங்குகின்றது. மாகாணசபையை அகற்றினால் வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களை இலகுவில் சிறு பான்மையினராக முழு நாட்டிலும் கட்டுப்படுத்த முடியும். ஒரு நாடு ஒரே சட்டம் என்ற கருத்தீடானது புதிய அரசியலமைப்பில் மாகாண சபைகளை கைவிடுவதை கற்பனை செய்து பார்க் கக்கூடியதொரு முன்னோடியாக இருக்கின்றது.

மாகாண சபை முறைமையை நீக்குவதை புதிய அரசியலமைப்பு வரைவின் உள்ளடக்கம் கொண்டிருக்கின்றது என்று சிங்கள பத்திரிகையில் வெளிவந்திருந்ததை அமைச்சர்கள் இப்போது மறுத்து வருகின்ற போதிலும், நாங்கள் நரோந்திர மோடிக்கு எமது கடிதத்தை அனுப்பிய போது இதனை முன்னரேயே எதிர்வு கூறியிருந்தோம். புதிய அரசியலமைப்பின் முழு நோக்கமும் பதின்மூன்றாவது திருத்தத்தை நீக்கி, இலங்கை விவகாரங்களில் இந்தியா குரல் கொடுப்பதைத் தடுப்பதாகும். இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் போது இந்தியா இலங்கைக்கு உதவவில்லை என்றால், கொழும்பில் அரசுக்கு பாதகமான எதுவும் நடந்திருக்கும். அந்த நேரத்தில் இலங்கைக்கு இந்தியா விடம் உதவி கேட்பதைத் தவிர வேறு வழியில்லை (இப்போது சீனாவின் நோக்கத்தைப் புரிந்து கொண்டது போல). இந்தியா தனது பங்கிற்கு தமிழர்கள் சார்பாக ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டது. தமிழர்களின் பிரதிநிதிகளோ அல்லது புலிகளின் தலைவர்களோ இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. எனவே, இலங்கை அரசாங்கம் நாடளாவிய ரீதியில் சிங்கள பௌத்த பெரும்பான்மை அரசாங்கத்தை உருவாக்க முயற்சிக் கும் போது வடக்கு, கிழக்கில் தமிழ் பேசும் மக்களின் சார்பாக தலையிடுவதற்கு இந்தியாவுக்கு சட்டரீதியான உரிமையும் தார்மீகக் கடப்பாடும் உள்ளது.

பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல் படுத்துமாறு கோரி யமை, அது தமிழர்களாகிய எமக்கு போதுமான அதிகாரங் களை வழங்கியதற்காக அல்ல, மாறாக அது அகற்றப்பட்டால் நாம் முற்றிலும் சக்தியற்றவர்களாகிவிடுவோம் என்பதற் காகவே. வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களுக்கு பாதகமாக இடம்பெறும் எந்தவொரு விடயத்தையும் கேள்விக்குட்படுத்தும் வகையில் மாகாண சபை முறைமையை அறிமுகப்படுத்திய பூர்வாங்க கலந்துரையாடல்களில் பங்கேற்றவராக இப்போது இந்தியாவை நாம் கொண்டிருக்கிறோம். வடக்கு , கிழக்கைப் பொறுத்த வரையில் இலங்கை அரசாங்கம் ஒருதலைப்பட்சமாக மாகாண சபைகளை நீக்க முடியாது. பதின்மூன்றாவது திருத்தத்தை அமுல்படுத்துமாறு கோருவதன் மூலம் எமது இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை நாங்கள் தேடவில்லை. நிரந்தர தீர்வு கிடைக்கும் வரை மாகாண சபைகளை வைத்திருக்க முயல்கிறோம். நாங்கள் கருதும் நிரந்தரத் தீர்வு கூட்டு சம்மேளனமேதவிர, குறைவானத்து அல்ல.



இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேச சமூகத்திற்கும் தார்மீகக் கடமை உள்ளது. இலங்கையின் பழங்குடி மக்கள் அடக்கு முறைக்குட் படுத்தப் படுத்தப்படும்போதும், பாரபட்சம் காட்டப்படும் போதும் அலட்சியமாக இருக்க முடியாது. பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்ந்திருப்பது அரசாங்கத்தின் திட்டங்களை குறிக்கின்றது.

இத்தகைய சூழ்நிலையில், ஒரே நாடு ஒரே சட்டம் என்ற முழக் கத்தின் கீழ் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பற்றதான சிங்கள பௌத்த அரசாங்கத்தை அமைப்பதற்காக புதிய அரசியலமைப் பைக் கொண்டுவருவதற்கான இலங்கை அரசாங்கத்தின் இரகசிய நோக்கங்களை சுட்டிக்காட்டும் வகையில் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பத் தீர்மானித்தோம்

இலங்கையின் சுதந்திர நாளன்று ஆரம்பிக்கப்பட்ட இலங்கை போர்க்குற்றவாளிகள் மீதான பகிரங்க தடை பிரச்சாரத்தில் இணையுமாறு பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டுகோள்

பெப்ரவரி 03, 2022

இலங்கையின் சுதந்திர நாளன்று ஆரம்பிக்கப்பட்ட இலங்கை போர்க்குற்றவாளிகள் மீதான பகிரங்க தடை பிரச்சாரத்தில் இணையுமாறு பிரித்தானிய தமிழர் பேரவை வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து பிரித்தானிய தமிழர் பேரவை அறிக்கையில் தெரி வித்துள்ளதாவது,

இலங்கையின் 74வது சுதந்திர தினம் தமிழ் மக்களின் ஒரு துக்க தினமாகும். இலங்கையில் மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக 04 பெப்ரவரி 2022, அன்று உலகளாவிய புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் மனித குலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று நம்பத் தகுந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இனம் காணப்பட்ட நபர்கள் மீது பகிரங்க தடை விதிக்க கோரி பிரச் சாரத்தை தொடங்குகின்றனர்.

பிரச்சாரம் பற்றி:

இலங்கை அரச இயந்திரத்தினால் தமிழ் மக்கள் மீது நடத்தப் பட்ட மனிதகுலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களினால் இலங் கையிலிருந்து வெளியேறிய பத்து லட்சத்துக்கும் அதிகமான தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உலகளாவிய புலம் பெயர் தமிழ் அமைப்புக்கள் இணைந்து இந்த மனுவில் கை யொப்பமிட்டு, தங்கள் நாடுகளின் அரசாங்கங்களை நம்பத் தகுந்த சாட்சியங்களை ஆதரமாகக் கொண்டு 16 செப்டம்பர் 2015 அன்று வெளியிடப்பட்ட இலங்கை மீதான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலக (OHCHR) விசா ரணையின் (OISL) அறிக்கையின்படி அதில் பெயர் குறிப் பிடப்பட்ட நபர்களை பகிரங்க தடை செய்ய கோரும் நட வடிக்கை. இந்த அறிக்கை (OISL) குறிப்பாக 2008-2009 போரின் முடிவில் பாரிய மனிதகுலத்திற்கு எதிரான குற்றங் களைச் செய்ததற்காக கட்டளைப் பொறுப்பைக் கொண்டிருந்த பதினெட்டு இலங்கை அதிகாரிகளையும் தலைவர்களையும் அடையாளம் கண்டுள்ளது.

பிரச்சார நோக்கம்:

இந்த அறிக்கையில் (OISL) ஆதாரபூர்வமாக சுட்டிக்காட்டப்பட்ட உண்மையின் அடிப்படையிலும், UNHRC தீர்மானம் 46/1 வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டமை கொடுத்த ஊக்கத்தின் அடிப்படையிலும், அந்தந்த நாடுகளை பின்வரும் விடயங்களை நடைமுறைப்படுத்த வலியுறுத்துவதை நோக்கமாகக் கொண்டு இப் பிரச்சாரம் அமைந்துள்ளது.

☞ 16 செப்டம்பர் 2015ல் இடம்பெற்ற இலங்கை மீதான OHCHR விசாரணை அறிக்கையில் (OISL) பட்டியலிடப் பட்டுள்ள நம்பத் தகுந்ததாகக் கூறப்படும் 18 போர்க் குற்ற வாளிகளுக்கு பகிரங்கத் தடை விதித்தல்.

☞ இந்த 18 நபர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் மீது பயணத் தடை மற்றும் சொத்து முடக்கம் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துதல்.

☞ உலகளாவிய நியாயாதிக்கம் (Universal Jurisdiction) வழிகளைப் பயன்படுத்தி இந்தப் போர்க் குற்றவாளிகளுக்கு தக்க தண்டனையை உறுப்பு நாடுகளின் நீதித்துறை செயல்முறை யின் மூலம் பெற்றுத்தரல்.

எதிர்பார்க்கின்ற பெறுபேறுகள்:

பிரேசில், கனடா, அமெரிக்கா (U.S.A), பிரித்தானியா (U.K) மற்றும் ஐரோப்பாவில் உள்ள சில நாடுகள், மனிதகுலத்திற்கு எதிரான பாரிய குற்றங்களில் ஈடுபட்டதாக நம்பத் தகுந்த வகையில் குற்றம் சாட்டப்பட்ட சில தேர்ந்தெடுக்கப்பட்ட இலங்கை போர்க் குற்றவாளிகளை அந்தந்த நாடுகளுக்குள் நுழைவதை தடுத்தும் மற்றும் வெளியேற்றியும் வருகின்றன. அண்மையில் அமெரிக்க இராஜாங்க திணைக்களம் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும் பத்தினர் அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு பகிரங்கமாக தடை விதித்துள்ளது. அதேபோன்று, 2020ஆம் ஆண்டு அமெரிக்க இராஜாங்கச் செயலர் மைக் பொம்பியோ தீவிரமான மற்றும் நம்பகமான ஆதாரங்களை மேற்கோள் காட்டி, தற்போதைய பாதுகாப்புப் படைத் தளபதியும், இலங்கை இராணுவத் தளபதியுமான சவேந்திர சில்வா, சட்டத்திற்குப் புறம்பான கொலைகள் மற்றும் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதன் காரணமாக, அமெரிக்காவுக்குள் நுழைவதற்குத் தகுதியற்றவர் என அறிவித்தார்.

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகளை மதிக்கும் நாடுகள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள பிரச்சார நோக்கங்களை அடைய உதவ முன்வர வேண்டும் என்று இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் எதிர்பார்க் கின்றனர்.


பிரச்சார மனு:

1948 இல் பிரித்தானியர்களிடம் இருந்து சுதந்திரம் பெற்றதில் இருந்து அடுத்தடுத்து வந்த இலங்கை அரசாங்கங்களால் இனப் படுகொலை நோக்கத்துடன் கொடூரமான ஒடுக்குமுறையால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பரிகார நீதி கிடைப்பதற்கு, புலம்பெயர் தமிழ் மக்கள் வாழும் நாடுகள், ஐ.நா, ஐ.நாவின் உறுப்பு நாடுகள், சர்வதேச அரசு சாரா நிறுவனங்கள், பொதுமக்கள் மற்றும் ஊடகங்கள் ஆகிய அனைவரையும் ஆதர வளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இலங்கையின் 74வது சுதந்திர தினமான 04 பெப்ரவரி 2022 அன்று உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட "இலங்கைப் போர்க் குற்றவாளிகள் மீதான பகிரங்க தடை" பிரச்சாரத்தில் இணையுமாறு உலகத் தமிழ் அமைப்புகளையும், உண்மை, மனித உரிமைகள் மற்றும் நீதியை நிலைநாட்டும் பிற நிறு வனங்களையும் இருகரம் நீட்டி அழைக்கிறோம்.

இலங்கை மீதான OHCHR விசாரணை அறிக்கையில் (OISL) பட்டியலிடப்பட்டுள்ள நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகளின் அடிப் படையில் போர்க் குற்றவாளிகள் என பட்டியல் இடப்பட்ட பெயர் விபரம்.

1. மஹிந்த ராஜபக்ஷ - பிரதமர், அப்போதைய ஜனாதிபதி மற்றும் ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதி



2. கோட்டாபய ராஜபக்ச - ஜனாதிபதி, முன்னாள் பாதுகாப்பு செயலாளர்



3. ஜெனரல் சரத் பொன்சேகா




4. லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா



5. மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகே



6. மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன



7. மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க



8. மேஜர் ஜெனரல் நந்த மல்லவாராச்சி



9. மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ்



10. மேஜர் ஜெனரல் ஜகத் ஜயசூரிய



11. பிரிகேடியர் பிரசன்ன சில்வா



12. பிரிகேடியர் நந்தன உடவத்த



13. பிரிகேடியர் சாகி கல்லகே



14. கேணல் ஜி.வி. ரவிப்ரியா



15. அட்மிரல் வசந்த குமார் ஜயதேவ கரன்னாகொட



16. அட்மிரல் திசர எஸ்.ஜி. சமரசிங்க



17. அட்மிரல் திஸாநாயக்க விஜேசிங்க ஆராச்சிலாகே சோமதிலகே திஸாநாயக்க



18. சி.என்.வகிஷ்டா



தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களை விசாரணை எனும் பெயரில் அச்சுறுத்தும் சிறீலங்கா பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினர்

– தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை கண்டனம் –

பெப்ரவரி 10, 2022

தமிழ் தேசிய பண்பாட் டுப் பேரவையின் தீவிர தமிழ்த்



தேசிய செயற் பாட்டாளர்களை குறி வைத்து தாக்கும் சிறீ லங்காவின் பயங் கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரி வினரின் செயற்பாடு களை வன்மையாக கண்டிக்கின் றதாக தமிழ் தேசிய பண் பாட்டுப் பேரவை தலைமை ஒருங்கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் தெரிவித்தார்.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமை ஒருங் கிணைப்பாளர் சுவீகரன் நிஷாந்தன் இன்று வியாழக் கிழமை (10) கண்டன ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட் டுள்ளார்.

சிறீலங்காவின் அரசியலமைப்பில் தனியொரு நபருக்கு இழைக்கப்படும் அநீதிகள், விசாரணைகள், தடை உத்தர வுகள் என்பவற்றை நோக்கும் போது நாட்டின் ஜனநாயகத் தின் மீது பெரும் கேள்விகளும், சந்தேகங்களும் எழு கின்றது.

இந்த நாட்டின் முக்கிய சட்டமான பயங்கரவாத தடைச் சட்டம் தமிழர்களை இல்லாது ஒழிப்பதற்கும், தமிழர்களை அடக்கி,ஒடுக்குவதற்குமே பயன்படுத்தப்பட்டுக் கொண் டிருக்கின்றது என்பதை இவர்களின் செயற்பாடுகள் மூல மாக அறிந்துகொள்ள முடிகின்றது.

இவ் பயங்கரவாத தடைச் சட்டம் என்பது நாட்டின் அரசிய லமைப்புச் சட்டத்திற்கு முரணானது என்பதை ஆட்சியாளர் களும், பௌத்த பேரினவாதிகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழ் இனத்திற்கான சுய நிர்ணய உரிமையை வலியுறுத்தி போராடும் அனைத்து தமிழ் அமைப்புக்கள் மீதும் சிங்கள பேரினவாதம் பாசிசக் கரம் கொண்டு கடுமையான சட்டங்களை பாய்ச்சி இந்த அமைப்புக்களை இல்லாது ஒழிக்கின்ற செயற்பாடுகளை தொடர்ச்சியாக செய்து வருகின்றது.

இதன் நீட்சியியாகவே வடகிழக்கில் உள்ள தமிழ் அமைப் புக்களை சேர்ந்த தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் மீதும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் மூலம் பொய் வழக் குகளை புனைந்து விசாரணை என்கின்ற பெயரில் பெரும் அச்சுறுத்தலை மேற்கொண்டு வருகின்றார்கள்.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை என்கின்ற எமது அமைப்பு கடந்த ஒரு தசாப்தமாக தமிழர்களின் சுயநிர் ணய உரிமையை வலியுறுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் அறவழியில் போராடி வருகின்றது.

மக்கள் சக்தியை திரட்டி போராடும் வேளைகளில் எல்லாம் இவ் அமைப்பின் மீது சிறிலங்கா அரசு பெரும் நெருக் கடிகளை நேரடியாகவும், மறைமுகமாகவும் உண்டாக் குகின்றது.

தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் முக்கிய செயற் பாட்டாளர்கள் மீது தொடர்ச்சியாக பயங்கரவாத குற்றத் தடுப்பு விசாரணைப் பிரிவினரால் கடுமையான விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது. அதுமட்டு மின்றி பொய்யான குற்றச்சாட்டுகளும் சுமத்தப்படுகின்றது.

இலங்கையின் சுதந்திர தினம் அன்று காலை முதல் மாலை வரை பல மணி நேரம் தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் யாழ் மாவட்ட அமைப்பாளரான கஜேந்திரன் ஜெனனன் மீது சிறீலங்காவின் பயங்கரவாத குற்றத் தடுப்பபு விசாரணைப் பிரிவு, தேசிய புலனாய்வுப் பிரிவு, பொலீஸ் குற்றத்தடுப்பு பிரிவு என பல பிரிவினரால் யாழ் மாவட்ட அவர்களது அலுவலகங்களில் தடுத்து வைத்து அச்சுறுத்தும் வகையில் பல கோணங்களில் விசாரணை கள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு முன்னர் பல முறை சுவீகரன் நிஷாந்தன், நடராஜா ரவிவர்மா போன்றவர்களும் சிறீலங்கா பயங்கரவாத குற் றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் விசாரணை எனும் பெயரில் இடம்பெற்ற அச்சுறுத்தல்களுக்கும் முகம் கொடுத் திருந்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா புலனாய்வுத் துறையினரால் தமிழ்த் தேசிய தீவிர செயற்பாட்டாளர்கள், தமிழ்த் தேசிய ஊடகவிய லாளர்கள் போன்றவர்களை அச்சுறுத்தும் வகையில் திட்டமிட்டு அரங்கேற்றும் விசாரணைகளை தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை வன்மையாக கண்டிப்பதுடன் இது போன்ற செயற்பாடுகளை தமிழர் தாயகப் பகுதிகளில் சிறீலங்கா அரசு நிறுத்திக்கொள்ள வேண்டும் எனவும் எம் இளைஞர்களுக்காக தொடர்ந்தும் நாம் குரல் கொடுப் போம் என்று இந்த சிறிலங்கா அரசுக்கு குறிக்கொள்ள விரும்புகின்றோம். என அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Chapel Ridge
FUNERAL HOME & CREMATION CENTRE

Serving the Tamil Community
OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



At Need Funeral Arrangements
We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:
• Vistation • Funeral & Memorial Service • Reception • Burial • Cremation
நகரங்களில் எமது சேவை மார்க்கம், மற்றும் மிசிசாகா





Christeen Seevaratnam
Licensed Funeral Pre-Planner
416-258-6759

Vilosanan Sivatharman
Licensed Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?
Pre-Arranging: A Wise Choice...

FINANCIAL BENEFITS
• Lock in the cost a today's prices
• Convenient time payment
• Insured against early death

EMOTIONAL BENEFITS
• Letting your family know your wishes
• Peace of mind to you & your family
• Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham ON L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

A caring part of our community


JATHU RENOVATION



உங்கள் இல்லத்தை புதுப்பிக்க அழையுங்கள்

★ Basement ★Carpet ★Flooring
★ Hardware ★ Kitchen Cabinets
★Painting ★Tiles★ Stairs
★Moulding ★Window ★Garage Door
★Spotlight★ Plumping ★Electrical

RASAN
Cell: 647.532.4162
Off: 647.821.0356
rassan311@gmail.com www:jathurenovation.com



ARASAN RAJADURAI
REAL ESTATE & DEVELOPMENTS
SALES REPRESENTATIVE



C 416.500.9550
B 416.298.8383
F 416.298.8303
realtorarasan@gmail.com
www.century21.ca/arasan.rajadurai

Century 21 INNOVATIVE REALTY
CENTURY 21
Innovative Realty Inc. Brokerage
2855 Markham Rd
Toronto ON M1X 1C4

WEXFORD
WELLNESS CARE INC.



We treat all car accident injuries!

* Massage Therapy
* Physiotherapy
* Orthopaedic
* Acupuncture
* Chiropractic
* Orthotic

We deal directly with Insurance Companies, Extended health Care Corporate Insurance, ODSP WSIB, Motor Vihicle Accident (MVA)

Tel: 647-349-5120
Fax: 647-349-5121
Serve Two Location

Unit 301-240 Alton Towers Cir, Scarborough ON M1V 3Z3
2900 Markham Rd Unit F11, Scarborough ON M1X 1E6
(Majestic City, Colombo Rd)



நம் தாயகம்

வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைப் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

முள்ளிவாய்க்காலில் இருந்து...



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



Tel: 416-558-2111
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)

வெல்லும்வரை வேகம் குறைந்தால் செல்லும்வழி திசை மாறிவிடும்

வருங்காலம் வசந்தம்.
காற்றுக்கு இனிக் கொண்டாட்டம்.
சுகந்த வாசம் சுமந்து.
மந்த மாருதம் ஊர்கோலம் போகும்.
சந்ததிப் பெருக்கத்திற்காக...
மரங்களெல்லாம் தாய்மையடையும்.
மாசிப் பனியின் மூட்டம் கலையும்.
வெள்ளை முகிற் கூட்டம் கையசைத்துப் போகும்.
சந்தனமும், பன்னீரும் மணக்க
கிராமத்துக் கோவில்களில் கொடியேறும்.
மேளகாரரின் கழுத்தில் சங்கிலி குடியேறும்.
காஞ்சிபுரமும், கைசூரும் சலவைக்குப் போய் தயாராகும்.
இளசுகளுக்கு முளைத்த மீசை முறுக்கேறும்.
வசந்தம் வந்தால் எல்லாமும் வடிவுதான்.
எங்கள் மண் மட்டும் தானே
இளவேனில் தழுவாத நிலமாகிப் போச்சு.
இப்போது குயிற்பாட்டுக்கு எதிர்ப்பாட்டு
ஏன் கேட்பதில்லை?
சிறுவர்களெல்லாம் எங்கே தொலைந்தனர்?
வானத்தைப் பார்த்தபடி கோவிலுக்குப் பயணம்.
உள்வீதிக்குள்ளே சாமிஉலா.
இருட்டுக்குள்ளே முகம் தேடும் இளசுகள்.
விளக்கற்ற வீதியில் கடலை வியாபாரம்.
மேற்கு வீதியின் மேளச்சமாவை
எங்கள் தாயகம் இழந்து விட்டது.
எட:டுமூலைப்பட்டம் கட்டி ஏற்றியவானம்
குண்ட வீச்சு விமானங்களுக்காகவா காத்திருப்பது?
அருவி வெட்டிச் சூடடுக்கியவுடன்
அந்த வயல்களில் ஒரு வாசம் வீசுமே.
அதையினி மூக்கு எப்போது முத்தமிடும்?
தாமரை படர்ந்த கிராமத்துக் குளங்களில்
கொடிவிலத்திக் குளிப்பது எப்போது?
இந்த வருடத்து வசந்தத்தையும் இல்லாதழிக்க
எதிரி விஷக்காற்றை வீசுவான்.
எறிகணைப் புகை கொடிகளில் படிவதா?
விடக்கூடாது.
வில்லை வளைத்து நாணேற்று.
மீண்டும் "சமாதானப் பேச்சு"
தலைப்புச் செய்தியாகிவிட்டது.
விவாகரத்துத் தம்பதிகளுக்கு பஞ்சனை விரிக்கப்படுகிறது.
கழுத்தை நெரித்தவன் கையும்.
துடித்துப் புரண்டவன் கையும்.
குலுக்கிக்கொள்ள எப்படித் தேதி குறிக்க முடியும்?
வேண்டாமென்று வெட்டிய வேர்களை
கட்டுப் போட்டுக் காப்பாற்ற முடியுமா?
இனங்களுக்கிடையே
இழந்துபோன உறவை ஏற்படுத்துவதென்பது
உடைந்து போன கதிரைக்கு
ஓட்டுப்போடுவது போன்றதல்ல...
முறிந்த மரத்துக்கு முட்டுக் கொடுத்து நிறுத்துவதல்ல...
உறவென்பது புரிந்துணர்விலிருந்து புலரவேண்டும்.
தன்னைப் போல மற்றவனையும் நேசிப்பவனே
உறவுக்கு உரம்போட முடியும்.
கெழுனுவின் கதையைச் சொல்லிக்கொண்டு
மகாவலி கங்கையை வடக்கே திருப்ப முடியாது.
சிங்கள அரசுக்கு...
தமிழர் கொடுத்த அவகாசங்களெல்லாம்
அர்த்தமின்றி அழிந்துபோனதே வரலாறு.
தமிழன் நெஞ்சை நிமிர்த்தி நிமிர்ந்தபோதெல்லாம்
பேச்சுவார்த்தையென்று குனியச் செய்ததே
இதுவரை தொடரும் சரித்திரமாகி விட்டது.
எல்லோரும் குறித்துக் கொள்ளுங்கள்
இது தொடர்கதையாக இனியும் நீளக்கூடாது.
போராட்டமென்பதை
வெறும் துப்பாக்கிகள் மட்டும் தீர்மானிக்க முடியாது.
ஒத்துக்கொள்ளலாம்.
விடுதலையை பேச்சுவார்த்தை மூலமும் பெறமுடியாது.
இதையும் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.
சலுகைகளும், எலும்புத் துண்டுகளுமே
பேச்சுவார்த்தை மேசையில் பெறமுடியும்.
விடுதலையை இரத்தம் சிந்தியே வெற்றிகொள்ள முடியும்.
உலகம் இதையே உணரச் செய்துள்ளது.
ஒரு வியட்னாமியனைக் கேளுங்கள்.
ஒரு சீனத்துக் குடிமகனைக் கேளுங்கள்.
ஒரு கியூபா நாட்டவனைக் கேட்டுப் பாருங்கள்.
ஏன் பேச்சுவார்த்தை மூலம்
விடுதலையைப் பெறவில்லையென்று.
தக்கபதில் தருவதற்கு அவர்களுக்கே தகுதியுண்ட.
குருதிக் குளத்தில் குளித்தெழுந்து
எஞ்சியுள்ளவர்களையும் அங்கவீனர்கள் ஆக்கிவிட்டு
சுடுகாட்டு மண்ணில் கிடைக்கும்
சுதந்திரம் யாருக்கு வேண்டும்?
விடுதலை வாழ்வதற்காக அன்றி சாவதற்காக அல்ல...
இப்படிக் காதோடும் குசுகுசுப்போர்
கனபேருண்டு.
பேச்சுவார்த்தைகள் முறிந்த பின்னர்தானே
இந்த மண் போராடத் தொடங்கியது.
சுதந்திரப்போரென்பது;
சுற்றிச் சுற்றிவரும் சூத்திரக்கிணறு மாடுகளல்ல...
போராட்டமென்பது,
இலக்கைச் சென்றடையாமல்
தொடங்கிய இடத்துக்கே செல்வதல்ல...
குருதி வழிவதைப் பார்க்கும் ஆசை எவருக்கும் கிடையாது.
பிணங்களுக்கிடையில் நிற்கும் வக்ரபுத்தியும் எமக்கில்லை.
வேண்டுவதெல்லாம் விடுதலை ஒன்றே.
அது பேச்சுவார்த்தை மூலமும் கிடைக்குமென்றால்
மேசையின் விரிப்பை நாங்களே விரிப்போம்.
கதிரைகளில் அமரக் காத்திருக்கின்றோம்.
அகலச் சிறகு விரித்து ஆனந்தம் பாடும் பறவைபோல
தளையற்ற வாழ்வே தமிழருக்கு வேண்டும்.
வானுயர்ந்த மாடிமனைகள் மண்மேடாகி விட்டன.
கல்வியிற் சிறந்தவர்கள் "கைநாட்டு" ஆகிவிட்டனர்.
ஈழத்தமிழன் எலும்புக்கூடாக
ஓட்டியுலர்ந்து விட்டான்.
வீட்டுக்கு உள்ளும், வெளியும்
உயிருக்கு உத்தவாதமில்லை
உண்மைதான்.
அதற்காக...
போராட்டத்தை பேச்சுவார்த்தையாக மாற்றமுடியாது.
பருத்தித்துறையிலிருந்து குமணவரை
தமிழீழத்தின் கடல் தழுவிச்செல்லும் நெடுஞ்சோலை வேண்டும்.
அந்த வீதியெங்கும் அழகான கிராமங்கள்
ஊரெங்கும் தமிழர் உழைக்கும் ஓசைகள்.
பூரித்த முகத்தோடு புன்னகைக்கும் மனிதர்கள்.
இல்லானும் இல்லை... இருப்பானும் இல்லை...
இதுதான் தமிழீழம்.
இதற்காகவே போராட்டம்.
வெல்லும்வரை வேகம் குறைந்தால்
செல்லும்வழி திசைமாறிவிடும்.

புதவை இரத்தினதுரை
மாசி 1994

தமிழ் தேசிய இனம் என்ற கௌரவத்துடன் தமிழர்கள் வாழ வழி செய்யப்படவேண்டும்!

வடகிழக்க காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம்

பெப்ரவரி 04.2022

தமிழ் தேசிய இனம் என்ற கௌரவத்துடன் தமிழர்கள் வாழ வழி செய்யப்படவேண்டும் எனவும், இது வெறுமனே எமது உறவுகளைத் தேடும் போராட்டம் அன்று, எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டத்திற்கான தொடக்கப் புள்ளியே இது என்றும் வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கம் தெரிவித்துள்ளது.

வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் மற்றும் வடக்கு கிழக்கு சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் இருந்து செல்வபுரம் பகுதி வரை இடம்பெற்ற கவனயீர்ப்பு போராட்ட முடிவில் இவ் அறிக்கை வாசிக்கப்பட்டது.

இவ் அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,
இன்றைய தினம் பெப்ரவரி 4 ஆம் நாள். ஆங்கிலேயர் 74 வருடங்களுக்கு முன்பு இலங்கைக்கு சுதந்திரம் அளித்துச் சென்ற நாள். ஆனால், அந்த நாளை சிங்கள தேசம் தனக்கு மட்டுமே சுதந்திர நாளாக்கி, தமிழ் இனத்தை அடிப்படுத்தி, அதை தமிழருக்கான கரிநாள் ஆக்கியது.

காலங்காலமாக இது தொடர்கின்றது. அதற்கு எதிராகக் கதைப்பவர்களும், செயற்பட்டவர்களும் குண்டாந் தடியால் அடிக்கப்பட்டனர்.

அடக்கு முறைகளின் ஒரு கட்டமாக 1956 தனிச் சிங்களச் சட்டத்தை அரசு பிரகடனப்படுத்தியது.

சிங்களம் படிக்காத அரச உத்தியோகத்தர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இந்த அநீதிகள் அரங்கேறிய அதேநேரம், தலைநகர் கொழும்பில் தமிழர்கள் மீது இனஅழிப்பு கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழர்கள் முதுகில் சிங்கள ஸ்ரீ சூடுவைக்கப்பட்டது.

பச்சைக் குழந்தைகள், வயோதிபர்கள் என்ற வித்தியாசம் இன்றி, கொதிக்கும் தார்ப் பீப்பாய்க்கள், தோசைக்கல் என்பவற்றில் அவர்கள் போடப்பட்டனர்.

இந்த அவலம் போல காலத்துக்கு காலம் எங்காவது ஒரு மூலையில், தமிழர்கள் உரிமைக்காக குரல் கொடுக்கும் போதெல்லாம் இன அழிப்பு என்னும் பயங்கரத்தை மேற்கொண்டு தமிழர்கள் உணர்வு அழிக்கப்பட்டது.

மேற்படி எல்லாத் தடைகளையும் தாண்டி, மக்களின் பேராதரவுடன் மேற்கொள்ளப்பட்ட தாயக விடுதலைப் போராட்டம் கூட 2009 மே 18 இல் இதே முள்ளிவாய்க்காலில் மௌனிக்கச் செய்யப்பட்டது.

பயங்கரவாதம் என்ற பூச்சாண்டியைக் காட்டி, சர்வ தேசத்தின் உதவிகளைப் பெற்று, தமிழர்களின் உரிமைப் போராட்டம் இந்த மண்ணிலே மௌனிக்கச் செய்யப்பட்டது.

இதே இடத்தில் தான் எமது உறவுகளை அரச படைகளிடம் கையளித்துவிட்டு, எம் உறவுகளைத் தேடி வயோதிபர்கள் ஆகிய நாம் போராடி வருகின்றோம்.

எமது உறவுகளைத் தேடும் எமது போராட்டமானது, வெறுமனே உறவுகளைத் தேடும் போராட்டம் அன்று, எமக்கான உரிமைகளைப் பெறுவதற்கான போராடத்திற்கான தொடக்கப் புள்ளியே இது.

எமது உறவுகளுடன் வாழும் உரிமைக்காக, அவர்களுக்கு என்ன நடந்தது என்று உண்மையை அறியும் உரிமைக்காக, அவர்களை காணாமல் ஆக்கியவர்களை நீதியின் முன் நிறுத்தியே தீர வேண்டும் என்ற எம் உணர்விற்கான போராட்டமே இது.

இப் போராட்ட நெருப் பானது, தமிழ் உணர் வாளர்கள், பற்றுள்ளவர்கள் அனைவராலும் வளர்ப் பிக்கப்பட்டு, எமது உரிமையைப் பெறும் சாத்வீக போராட்டம் என்னும் பெரும் நெருப்பாக தமிழர்கள் நெஞ்சிலே ஏற்றப்பட வேண்டும்.

தமிழ் தேசிய இனம் என்ற கௌரவத்துடன் தமிழர்கள் வாழ வழி செய்யப்படவேண்டும். அற்பசொற்ப சலுகைகளுக்காகவும், தம் சொந்த ஆசாபாசங்களுக்காகவும், சிங்கள அரசுக்கு துணை போனவர்களும், அவர்களுடன் சேர்ந்து இருப்பவர்களும் தம் இனத்திற்கு துரோகம் செய்வதை உணர்ந்து திருந்த வேண்டும் அல்லது, மக்கள் போராட்டம் அவர்களைத் திருத்த வேண்டும்.

இலட்சக்கணக்கானவர்களை இனஅழிப்புச் செய்த இந்த அரசாங்கம், அதற்கான நீதியை மறுதழிக்கும் அதேநேரம், திட்டமிட்ட சிங்கள குடியேற்றம், தமிழர்களின் காணிகள் ஆக்கிரமிப்பு, புத்த விகாரைகள் அமைப்பு, இந்துக் கோவில்களை விகாரையாக்கும் முயற்சி, புனித பூமித் திட்டம் ஆகியவற்றை வேகமாக மேற்கொண்டு வருகின்றது.

போதைவஸ்துப் பாவனை தமிழர்களிடையே திட்டமிட்டுப் புகுத்தப்பட்டு கலாசாரப் பிறழ்வுகள் ஊக்கிவிக்கப்படுகின்றன. இவற்றை கண்டும் காணாமல்போல எமது அரசியல் தலைமைகள், இதை நாமும் பாரத்துக் கொண்டு வாழவிருக்கப் போகிறோமா?


இந்தப் புனிதமான இடத்திலே நாம் அனைவரும் சாதி, மத பேதங்களை மறந்து தமிழராய் ஒன்றிணைவோம், தமிழர் உரிமைக்காய் ஒன்றாய் பயணிப்போம் என உறுதி எடுத்துக் கொள்வோமாக.

கட்சிபேதமின்றி அனைத்துத் தமிழ் அரசியல் வாதிகளும் எமது உரிமைக்காய் உழைப்போம். தமது நலனுக்கான எமது உரிமைகளை விட்டுக் கொடுப் பவர்களை, தேர்தலிலே தகுந்த பாடம் புகட்டி ஓரங் கட்டுவோம்.

தமிழனாய் வாழ்வோம். தமிழ் உணர்வுடன் வாழ்வோம்.- என்றுள்ளது



LIST YOUR BUSINESS
ON OUR BUSINESS DIRECTORY
உலக வணிகம் ULAGA VANIKAM
விளம்பரம் ஒர் அன்பளிப்போ அல்லது செலவோ அல்ல அது ஒர் முதலீடு. விளம்பரங்களிற்கு நீங்கள் செலுத்தும் கட்டணம் உங்கள் உலக வணிகத்திற்கு நீங்கள் செய்யும் முதலீடு. உங்கள் வணிகத்தை பெருகச் செய்யும். அது உங்கள் வணிக முன்னேற்றத்துக்கு இன்றியமையாதது. இந்த முதலீட்டை தரம், பயன் அறிந்து செய்வது உங்கள் வணிகத்தின் வளர்ச்சிக்கு படி கற்கள்.
தொலைபேசி எண்: 437.345.4203



சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள் Children's homes, a few nursing homes

இலங்கையில் யுத்தம் ஓய்ந்து ஒரு சாகாப்தகாலம் கடந்து விட்டது. ஆனாலும் வடக்கு, கிழக்கில் பல பராமரிப்பு இல்லங்கள் இன்னமும் இயங்கிவருகின்றன. இவை சிறுவர், மூத்தோர், சிறப்புத் தேவையுள்ளோர் இல்லங்கள் என வகைப்படும். இவை அனைத்தும் பொது மக்களின், பொது அமைப்புக்களின் நன்கொடைகளிலேயே தங்கியுள்ளன. தற்போதைய கோவிட்19 காலத்தில் நன்கொடைகள் குறைந்துள்ள இவ்வேளையில் எம்மாலான சிறு உதவிகளையேனும் இவ்வில்லங்களுக்கு வழங்கி இந்த இக்கட்டான காலத்தை கடக்க அனைவரும் உதவவேண்டுகின்றோம்

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

"இந்தக் குழந்தைகள் யாருமற்றவர்களல்லர். தமிழன்னையின் புதல்வர்கள். வரலாற்றுப் பெருமை மிக்க சுதந்திரப் பெருமைமிக்க சுதந்திரப் போராட்ட சூழலில் இந்த இளம் விதைகளைப் பயிரிடுகின்றோம். இவை வேர்விட்டு வளர்ந்து விழுதுகள் பரப்பி விருட்சங்களாக மாறி ஒருகாலம் தமிழீழ தேசத்தின் சிந்தனைச் சோலையாகச் சிறப்புற வேண்டும் என்பதே எனது ஆவல்."



Amman Women & Child Development Center
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai 4 67 490 4955

Hermans Girls Home
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai 97 76 058 5344

Jesus Lives Girls Home
Main St., Kalmuanai - Amparai 01 94 67 492 1161

Methodist Girls Home
Wesly School Rd, Kalmuanai - Amparai 94 67 222 9182

RKM Sharatha Girls Home
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai 05 94 67 222 3600

Seephe Divi Child Delelopment Centre
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai 94 67 226 1144

Sri Indasara Child Development Centre
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai 94 27 562 2919

St. Maryís Boys Home
Yard Rd, Kalmunai - Amparai 01 94 71 354 5782

Swami Vipuilanantha Boys Children Development Centre
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai 94 67 227 7514

Canaan Harvest Childrenís Home
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla 94 77 229 2022

Up Country Children Home
19/6, Badulupitiya Rd - Badulla 94 55 222 3335

Arutpani Girls Home
Beach Rd, Navakkuda - Batticaloa 94 77 6849

Assisi Boys Home
Main Rd, Kurukulmadam - Batticaloa 94 65 225 0313

Benthel Boys Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Benthel Girlís Children Home
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa 94 77 632 8577

Bethel Girls Children Home
Vipulanada Rd, Valichenai - Batticaloa 94 77 515 3078

Eravur Children Care Home
Meerakerny Rd, Eravur - Batticaloa 94 77 996 6345

Good Shepherd Children Home
Post Office Rd, Valaichenai - Batticaloa 94 65 225 7400

Hari Boys Home
New Kalmuani Rd - Batticaloa 94 65 222 3653

Jeevananthan Girls Home
Main Rd, Pudukuduirippu - Batticaloa 94 65 365 0438

Kattankudy Boys Home
Kattankudy 01 - Batticaloa 94 65 224 5308

London Sivan Kovil Girls Home
Main Rd, Settipalayam - Batticaloa 94 65 205 6336

Managayarkarasi Girls Home
Maruthadi Rd - Batticaloa 94 65 205 7310

Manikkavasagar Boys Home
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa 94 77 191 3037

Methodist Girls Home
Bar Rd, Kotamunai - Batticaloa 94 65 222 5402

Miyani Boys Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 459 0298

Miyani Girls Home
Miyani nagar, Thannamunai - Batticaloa 94 77 792 6410

Pariyowan Boys Home
Trinco Rd, Santhurukondan - Batticaloa 94 05 222 2524

Ramakrishana Boys Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Ramakrirushana Girls Home
New Kalmunai Rd, Kalladi - Batticaloa 94 65 222 2752

Sakthi Girls Home
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa 94 65 225 0745

Shakthi Girls Home
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa 94 65 364 2290

Shanthi Bawan Girls Home
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa 94 65 222 2524

Spaks Girls Home
Main Rd, Periya Kallaru - Batticaloa 94 67 222 1875

Thilahawathiyar Girls.Children Home
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa 94 77 629 8461

Thilahawathiyar Girls Home
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa 94 65 225 1166

Thiruniyanasampathar Gurukulam
Main Rd, Kaluthavalai - Batticaloa 94 65 225 0277

Trust Village Womens Development Center
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573

Vidhyajothi Boys Home
Central Rd - Batticaloa 94 77 481 6576

Vipulanantha Children Home

Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101

Vivehanada Children Home
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442

Yoga Suwami Saiva Girls Children Home
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420

St.Joseph Elders Home
Trinco Rd- Batticaloa 94 71 851 1951

Swami Vipulananthar Elder Home
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202

Ozanam Centre
Sathurukondan - Batticaloa 94 65 365 8636

Uthayam Association of Visually Handicapped
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707

Elim Boys Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824

Elim Girls Child Development Center
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962

Forth Sq Girls Child Development Center
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109

Hindu Board Boys Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304

Hindu Board Girls Child Development Center
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082

Holy Family Girls Child Development Center
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270

Karunai Girls Child Development Center
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334

Karunalayam Annai Krishnabai Girls C. D. C.
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873

Karunalayam Boys Children Development Center
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002

Salvation Army Girls Child Development Center
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696

SOS Village Child Development Center
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711

Sri Pramanatha Girls Child Development Center
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004

Thurkkapuram Girl Child Development Center
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894

Valluvar Girlsí Child Development Center
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513

Mother Teresa Elder Home Amithi Illam
Kondavil - Jaffna 94 21 223 0302

Sivapoomi Elders Home
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230

Sivapoomi School ForChildren with Special Needs
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894

Vaalvagham-Home for the Vissually Handicapped
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331

Aruvucholai Boys Child Development Center
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313

Aropanam Boys Child Development Center
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088

Gandhi Nilaya Chidren Home & Training Centre - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461

Holy Family Girls Child Development Center
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115

Karuna Nilayam Girls Child Development Center
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836

Mahadeva Saiva Boy Child Development Center
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121

Mahadeva Saiva Girls Child Development Center (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119

Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118

Sencholai Boysí Child Development Center
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308

Sencholai Girlí Child Development Center
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504

Thangamma Elders Home -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619

Trist Children Home
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162

Association. to Empowerthe Special Needs Children
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776

Killinochchi Special Needs Newtwork
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536

Annai Girlsí Child Development Center
Uppukulam - Mannar 94 23 222 2483

Anpu Sakotharar Boys Child Development Center
Keeri - Mannar 94 77 534 4427

Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center
Pesalai - Mannar 94 23 205 0095

Sivanarul Boys Child Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998

Sivanarul Girls Children Development Center
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804

Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545

Saradha Mission Child Development Center
Kirigalpotta - Matale 94 66 205 1721

St. Francis Child Development Center
Vihaara Rd - Matale 94 77 438 4851

Anpu Boysí Child Development Center
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502

Barathy GirlChild Development Center
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234

Ladani Girls Child Development Center
Silawaththai - Mullaitivu 94 77 422 8853

Nallayan Girls Child Development Center
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034

Pari Girlsí Child Development Center
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034

Iniya Vazhvu Illam
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949

Happy Home Child Development Center
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174

Maranatha Child Development Center
Hatton - Nuwara Eliya 94 51 222 2489

Rainbow Child Development Center
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680

Shalom Child Development Center
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222

Annai Saratha Children Home
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506

Anpu Illam
167, Central Rd - Trincomalee 94 26 222 1214

Four Square
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170

Grace Girls
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644

Hasanath Boys
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

Hasanath Girls
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135

My Fatherís House Boys Children Homes
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861

Rawlathul Athfal
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438

Rewathe Child Development Center
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328

Sivayogasamayam Swami Gangadaranatha Children Home
64 Main St. - Trincomalee 94 26 222 2049

Sri Sanmuga Boys 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234

Sri Sanmuga Girls 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521

Thapovanam Boys
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Thapovanam Girls Thirukadaloor - Trincomalee 94 26 222 1469

Deva Anpu Children Home
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859

Hindu Anpakam Children Home
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683

Salvatorian Girls Home
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577

Sri Ahilandeswary Children Home Kovilkulam - Vavuniya 94 24 222 1685

Mother Teresa Elder Home Pampaimadu -Vavuniya 94 24 205 4494

Sivan Elders Home
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827

Thanagamma Eleders
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

கிட்டுபூங்கா பிரகடனமும் அதன் பின்னும்



அரசியல் ஆய்வாளர் நிலாந்தன்

பெப்ரவரி 06, 2022

இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை அனுப்பும் நோக்கத்தோடு ஆறு கட்சிகள் ஒன்றாக உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போட வேண்டியதன் அவசியம் குறித்து நான் எழுதியும் பேசியும் வந்தேன். ஆனால் அக் கொழுக்கி 13 ஆக இருக்க வேண்டுமா என்ற கேள்வி யையும் கேட்டிருந்தேன். அந்நாட்களில் எனது நண்பர் ஒருவர் - அவர் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர், அதோடு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதர வாளர் - என்னிடம் கேட்டார் இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போடும் பலம் இந்த ஆறு கட்சிகளிடமும் இருக்கிறதா? என்று. நான் அவருக்குச் சொன்னேன் "இல்லை. இப்போதுள்ள நிலைமைகளின்படி அவர் களுக்கு அந்தப் பலம் இல்லை. ஆனால் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணிக்கும் அந்தப்பலம் இல்லை" என்று. ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ்ப் பரப்பில் செயலுக்கு போகாத பிரகடனங்களும். தீர்மானங் களும். வாக்குறுதிகளும், மக்களாணைகளும் தான் உண்டு. எந்த ஒரு தமிழ் தேசியக் கட்சியும் தனது இறுதி இலட்சியத்தை முன்வைத்து தொடர்ச்சியாக போராட வில்லை, ரிஸ்க் எடுக்கவில்லை. தெட்டந் தெட்டமான மக் கள் எழுச்சிகள், சிறிய கவனயீர்ப்பு போராட்டங்கள், போன்றவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக இதுவரையிலும் எந்த ஒரு தமிழ் கட்சியும் நிரூபித்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பானது இந்தியாவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் இரண்டுபட்டு நிற்கிறது. பெரும் பான்மையான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி வைத்திருக் கின்றன. அதேசமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணி யானது அந்த ஒருங்கிணைப்புக்குள் இணைய மறுத்த தோடு மேற்படி ஆறு கட்சிகளுக்கும் எதிராக ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கிட்டு பூங்காவில் நிகழ்த்தியிருக் கிறது.

கிட்டு பூங்காவில் நடந்த ஆர்ப்பாட்டமானது, இந்தியாவுக் கும் ஆறு கட்சிகளுக்கும் உள்ள பொறுப்பை அதிகப்படுத்தி யிருக்கிறது எனலாம். அவ்வாறான ஆர்ப்பாட்டமொன்றை ஒழுங்குபடுத்தும் சக்தி தனக்கு உண்டு என்பதனை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நிரூபித்திருக்கிறது. அதை அவர்கள் இப்பொழுதுதான் நிரூபிக்க வேண்டும் என்று இல்லை. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளில் நடந்த எழுக தமிழ் போன்ற போராட்டங்களில் மக்களை தெரு வுக்கு கொண்டு வந்ததில் அக்கட்சிக்கும் முக்கிய பங்கு உண்டு. ஆனால் ஒரு நாள் எழுச்சி மட்டும் போதாது. டெல் லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக மாதக்கணக்கில் விவசாயிகள் போராடியதைப்போல தொடர்ச்சியாகப் போரா டினால் தான் இந்தியாவும் திரும்பிப் பார்க்கும் இலங்கை யும் திரும்பிப் பார்க்கும் ஏன் மக்கள் மத்தியிலும் கூட ஒரு விழிப்பு ஏற்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்பொழுது பதின்மூன் றாவது திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்பதல்ல பிரச்சினை. எரிவாயு கிடைக்குமா கிடைக்குமா? யோக் கெட் இல்லாமல் பால்மா கிடைக்குமா? பொருட்களின் விலை குறையுமா? என்பதே அவர்களுடைய பிரச்சனை. இந்த பிரச்சினைகளுக்குள் அவர்களுடைய கவனத்தை ஓர் அரசியல் இலக்கின் மீது குவிப்பது என்பது கட்சிகளின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது. கடந்த 12 ஆண் டுகளாக எந்த ஒரு கட்சியும் அவ்வாறு தொடர்ச்சியாக உழைக்கவில்லை.

எனது கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல, பொங்கலுக்கு முதல் நாள் முற்றவெளியில் நடந்த ஒரு கவனயீர்ப்பு பொங்கலில் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப் பினரையும் காணமுடியவில்லை. திரளான மக்களையும் காணவில்லை. நேற்று முன்தினம் சுதந்திர தினத்தன்று நடந்த எழுச்சிகளும் ஒரு நாள் போராட்டங்களே. ஒருநாள் மக்கள் எழுச்சிகளை தொடர்ச்சியான போராட்டங்களாக மாற்றும் போதுதான் ஓர் அரசியல் இயக்கம் அல்லது கட்சி அதன் இறுதி வெற்றியை பெறமுடியும். இது எல்லா தமிழ் தேசிய கட்சிகளுக்கும் பொருந்தும்.

கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்தேசியப் பரப்பில் அதிகம் புவிசார் அரசியல் குறித்தும் பூகோள அரசியலை குறித்தும் பேசி வந்த கட்சி முன்னணிதான். எனக்கு ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை. 2013 என்று நினைக்கிறேன். யாழ். மறைக்கல்வி நிலையத்தில் நடந்த ஒரு சந்திப்புக்குப் பின் கஜேந்திரகுமாரிடம் நான் கேட்டேன்" புவிசார் அரசியல் எப்படி கையாளப் போகிறீர்கள் அதற்கான வழி வரைபடம் என்ன" என்று. அவர் சொன்னார் அதற்குரிய மக்கள் ஆணையைப் பெற்று வெளிநாடுகளை அணுக வேண்டும் இருந்துதான் தொடங்குகிறது. ஆனால் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுவதில் தமிழ் தேசிய மக்கள் முன் னணியானது கடந்த 10 ஆண்டுகளில் போதிய வெற்றி களைப் பெறத்தவறியிருக்கிறது. இப்பொழுதும் கூட பெரும் பான்மை கட்சிகள் இந்தியாவை நோக்கி திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில் முன்னணி மட்டும் தனித்து நிற்கின் றது. தனது வெளியுறவு இலக்குகளை முன்வைத்து விடாது உழைப்பதன் மூலம் தனது இலட்சியம் சரியானது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அக் கட்சிக்கு இப்பொழுது உண்டு. 13 க்கு எதிராக போரா டியதைப் போன்று சமஸ்டியை கேட்டும் ரிஸ்க் எடுத்துப் போராட வேண்டும்.



என்று. கூட்டமைப்பிலிருந்து விலகி வந்தபின் கடந்த பத் தாண்டுகளில் அக்கட்சி இரண்டு நாடாளுமன்ற ஆசனங் கள் வரையிலும் முன்னேறி இருக்கிறது. எனினும் அந்த வெற்றியைக் கூட கொண்டாட முடியாதபடி மணிவண் ணனின் பிரிவு அக்கட்சிக்கு சேதத்தை ஏற்படுத்தி யிருக்கிறது.

அந்த இரண்டு ஆச னங்கள் அக்கட்சி முன் வைக்கும் வெளியுறவு இலக்குகளை நோக்கி பேரம் பேசுவதற்கு போதுமானவை அல்ல. அண்மையில் நடந்த ஒரு கிளப் ஹவுஸ் சந்திப்பில் கஜேந்திரகுமாரிடம் அதுபற்றி கேட்கப் பட்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக புவிசார் அரசியல் குறித்து அதிகம் பேசி வந்த நீங்கள் இதுவிடயத்தில் எதை சாதித்திருக்கிறீர்கள் என்ற தொனிப்பட்ட கேட்கப்பட்ட பொழுது அவ்வாறு புவிசார் மற்றும் பூகோள அரசியலை கையாள்வதற்கு இப்போதுள்ள இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் போதாது என்ற தொனிப்பட பதில் கூறியிருக் கிறார்.

அதில் உண்மை உண்டு. அதைத்தான் நான் தொடர்ச் சியாக கூறி வருகிறேன். வெளி விவகாரத்தை கையாள் வது என்பது முதலில் ஒரு குறிப்பிட்ட அமைப்பு அல்லது கட்சி தன் மக்கள் மத்தியில் ஒரு "பவர் சோர்ஸ்" ஆக பல மையமாக தன்னை ஸ்தாபிப்பதில் இருந்தே தொடங் குகிறது. வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு பல மையம் ஏனைய பல மையங்களோடு வைத்துக்கொள்ளும் இடை யூடாட்டம் தான். இந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய மக் கள் முன்னணியானது தனது வெளியுறவு இலக்குகளை நோக்கி உழைப்பதற்கு முதலில் தனது பலத்தை அதிகப் படுத்த வேண்டியிருக்கிறது. ஒருநாள் எழுச்சிப் போராட் டங்கள் அந்தப் பாதையில் அவர்களுக்கு பலம் சேர்க் கலாம். ஆனால் அவை மட்டும் போதாது. அதற்கும் அப்பால் தாங்கள் கடந்த 10 ஆண்டுகளாக செய்யத் தவறிய வற்றை இனிமேலாவது நிரூபித்துக் காட்ட வேண்டி யிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் அரசியலானது வழமையான ஒரு மிதவாத அரசியல் அல்ல. ஆயுத மோதல்களுக்கு பின் னரான அரசியல் அது. இனப்படுகொலை ஒன்றின் மூலம் சிதைக்கப்பட்ட ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் அரசியல். ஒரு தேசத்தை நிர்மாணிப்பதற்கான வெளியுறவுக் கொள்கை எனப்படுவது முதலாவதாகவும் அடிப்படை யாகவும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன் வைப்பதில் தமக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்று அக்கட்சியின் செயலாளர் கிட்டு பூங்கா எழுச்சிக்கு முதல் நாள் எனக்கு தனிப்பட்ட முறையில் சொன்னார். ஆனால் கிட்டு பூங்கா பிரகடனமும் உட்பட அக்கட்சியின் நடவடிக் கைகளை தொகுத்துப் பார்த்தால் அது நடைமுறையில் இந்தியாவை அணுகத் தேவையான சாத்திய வெளி களைத் திறக்கும் ஒர் அரசியல் அல்ல. அப்படியென்றால், அக்கட்சியின் பூகோள அரசியல் வழிவரைபடத்தின்படி வேறு எந்த நாடுகளை அணுக வேண்டும் என்று அக்கட்சி நம்புகின்றது? தனது வெளியுறவு அணுகுமுறைக்கு வேண்டிய அமைப்புக்களை அக்கட்சி கொண்டிருக்கிறதா? ஆகிய கேள்விகளுக்கு அவர் கள் பதில் கூற வேண்டும்.

இதே கேள்விகளை இந்தியா வுக்கு கூட்டு கோரிக்கை களை வைத்த கட்சிகளிடமும் கேட்கலாம். வெளிவிவகார அணுகுமுறை என்பது ஒரு கடிதத்தோடு முடிகிற விவ காரம் அல்ல. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள அரசுக்கும்-அரசுக்கும் இடையிலான கட்டமைப் புசார் உறவை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டு இந்தியா தமிழ் மக்களை நோக்கி வரக் கூடிய நிலைமைகள் இன் னமும் ஏற்படவில்லை. கொழும்பில் இருக்கும் அரசாங் கத்தை பகைக்காத ஒரு தீர்வைத்தான் இந்தியா தமிழ் மக்களுக்கு தரலாம் என்றால் அது நிச்சயமாக 13 தாண் டாது. தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய எந்த ஒரு தீர்வின் பருமனும் புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான நட்பின் பருமனுக்கு நேர் விகித சமனானது.

எனவே புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போதுதான் ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கக்கூடிய தீர்வின் பருமனும் அதி கரிக்கும். இது விடயத்தில் இந்தியாவை தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கும் சக்தி மேற்படி ஆறு கட்சி களுக்கும் உண்டா? அதற்காக உழைக்கத் தேவையான வழிவரைபடத்தையும் அமைப்புக்களையும் அக்கட்சிகள் கொண்டிருக்கின்றனவா? அதற்காக ரிஸ்க் எடுக்க, அர்ப் பணிக்க அக்கட்சிகள் தயாரா?

கடந்த 12 ஆண்டுகளாக ஜெனிவாவை கையாள்வதற்கும் அமெரிக்காவை கையாள்வதற்கும் இந்தியாவை கையாள் வதற்கும் தாயகத்தில் தமிழ் மக்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனைகள் எவையும் இருக்கவில்லை. ஒரு பொருத்த

கிட்டுபூங்கா பிரகடனமும் அதன் பின்னும்

மான வெளியுறவுக் கொள்கையோ வெளியுறவு கட்ட மைப்போ இருப்பதாக தெரியவில்லை. வெளியுறவுக் கொள்கைகள் ராணுவ ரகசியங்கள் அல்ல. கொள்கை களை நடைமுறைப் படுத்தும் உத்திகள்தான் ரகசியமாக இருக்க முடியும். தமிழ்க் கட்சிகள் எவரிடமும் அவ்வாறு வெளியுறவு கட்டமைப்புக்கள் இருப்பதாக தெரியவில்லை.

இவ்வாறான ஒரு வெற்றிடத்தில்தான் டெலோ இயக்கத் தின் முன் முயற்சியால் இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கடிதம் அனுப்பப்பட்டது. இங்கு மறுபடியும் அழுத்திக் கூற வேண் டும் ஒரு வெளியுறவு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில் தான் அவ்வாறு 6 கட்சிகள் இணைந்து ஒரு முயற்சியை முன்னெடுத்திருக்கின்றன. இதுதான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிலையும்.

இப்படிப்பட்டதோர் வெற்றிடத்தில், கிட்டு பூங்கா பிரகடனத் திற்கு பின் தமிழ் அரசியலில் இது வேறு வெளியுறவு அணு குமுறைகள் துலக்கமாக மேலெழத் தொடங்கிவிட்டன. ஆனால் இந்த இரு வேறு வெளியுறவுப் போக்குகளும் பிரகடனங்களாகவும், கூட்டுக் கோரிக்கைகளாகவும் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றன. வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது ஒரு கூட்டுக் கோரிக்கையோ அல்லது பிரகடனமோ அல்ல. அது ஒரு நடைமுறைற் அது ஒரு செயல் வழி. ஓர் அரசற்ற மக்கள் கூட்டமாகிய ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை வெளியுறவு அணுகுமுறை எனப்படுவது தேசத்தைக் கட்டியெழுப்புவதில் ஒரு பகுதி. இனப்பிரச்சினை எனப்படுவது சாராம்சத்தில் ஓர் அனைத் துலக பிரச்சினைதான். அதற்கு அனைத்துலகத் தீர்வுதான் உண்டு. எனவே அனைத்துலகத் தரப்புகளை கையாள் வதற்கு வெளியுறவுக் கொள்கை மிக முக்கியம். அந்தக் கொள்கையை செயல்படுத்த உரிய கட்டமைப்புகள் அவ சியம். கட்டமைப்புக்களுக்கூடாக உழைக்க வேண்டும், ரிஸ்க் எடுக்க வேண்டும்.

எனவே ஆறு கட்சிகளும் தமிழ் தேசிய மக்கள் முன் ணணியும் தனித்தனியே தமது இறுதி இலக்குகளை நோக்கி உழைக்கட்டும். யாருடைய வெளிவிவகார அணுகுமுறை தீர்க்கதரிசனம் மிக்கது என்பதனை வரலாறு நிரூபிக்கும். அந்தனியோ குரொம்சி கூறுவது போல புரட்சிகரமான அரசியல் என்பது, வரலாற்றில் செயலூக்கமிக்க வகையில் தலையீடு செய்வதுதானே யன்றி, 'சரியான' நிலைப்பாடுளை மேற்கொள்வதும் அவை சரியானவைதான் என நிரூபிக்கப்படப்போகும் நாளுக்காக காத்திருப்பதுமல்ல.

நன்றி: நிலாந்தன்



விளம்பரம் என்பது உங்கள் வணிகத்தின் ஒரு முதலீடு தொடர்புகளுக்கு

437.345.4203

முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும், மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றது. தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று. எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com



அரசியல் கைதிகளின் விடுதலை பொய்த்துவிட்டது!

அருட்தந்தை மா.சக்திவேல்

பெப்ரவரி 12, 2022



பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த் துவிட்டது என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற் கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் இன்று (12) வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கை யிலே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, பயங்கரவாத திருத்த சட்டத்தை தொடர்ந்து அரசியல் கைதிகள் விடுதலையாவார்கள் எனும் எதிர்பார்ப்பு பொய்த் துவிட்டது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதற்கோ அதனால் மீறப்படும் மனித உரிமைகளை பாதுகாப்ப தற்கும் எந்த ஆட்சியாளர்களும் ஆயத்தமில்லை என் பதையே பயங்கரவாத தடைச் சட்டத்தில் திருத்தமென முன் வைக்கப்பட்டுள்ள முன் மொழிவுகள் சுட்டிக்காட்டு கின்றன.

தமிழ் மக்களின் அரசியல் ரீதியான பிரச்சனையை சிங்கள பௌத்த தேசியவாத அரசியல் தலைவர்கள் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு தவறியது மட்டுமல்ல அரசியல் போராட்ட எழுச்சியை அடக்குவதற்கு பயங்கரவாத சட்டம் உருவாக்கப்பட்டதோடு அச்சட்டம் நான்கு தசாப்தங்கள் கடந்தும் இன்றும் பாதுகாக்கப் படுகின்றது.

ஆயுதம் மௌனிக்கப்பட்டு ஒரு தசாப்தம் கடந்த போதும் அரசியல் தீர்வு 13+ என்பதை நீக்கி தமிழர்களுக்கு அரசியல் பிரச்சினை இல்லை என்பதே இன்றைய ஆட்சியாளர்களின் நிலைப்பாடு. இதற்கு மத்தியிலேயே பயங்கரவாத தடை சட்டம் திருத்தமென போலி முன் பொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன.

பயங்கரவாத தடைச்சட்டம் பிரிவினைவாதத்திற்கு எதி ரானது என சிங்கள மக்கள் மத்தியில் கருத்துருவாக்கம் செய்யப்பட்டு அடித்தட்டு பௌத்த சிங்கள மக்கள் பேரின வாத போதை யூட்டி வளர்க்கப்பட்டனர்.

இச்சட்டத்தை பாவித்து 1983ம் ஆண்டு காலப்பகுதியில் சிங்களத் தலைவர்களும் சிறைக்குள் தள்ளப்பட்டுள்ளார். மேலும் 1988/89 ஆம் காலப்பகுதியில் தெற்கில் மக்கள் விடுதலை முன்னணியினர் கிளர்ச்சியில் ஈடுபட்டபோது அவர்களும் சிறைகளில் அடைக்கப்பட்டனர். காணாம லாக்கப்பட்டனர். நூற்றுக்கணக்கானோர் கொல்லப் பட்டனர்.

இச்சட்டத்தின் மனிதாபிமானமற்ற மனித உரிமைகள் மீறும் சரத்துக்கள் உள்ளடங்கி இருக்கின்றன என்பதை அறிந்தும் சட்டத்தை இல்லாமல் செய்வதற்கு மக்களை திரட்டி அரசுக்கு அழுத்தம் கொடுக்கவோ அல்லது வேறு வகையில் எதிர்ப்பு காட்டவோ மக்கள் விடுதலை முன் னணியினர் முன்வரவில்லை.

காரணம் சிங்கள பௌத்த மக்கள் மத்தியிலுமிருந்தும் இராணுவத் தரப்பிடமிருந்தும் தமது கட்சியினருக்கு எதிர்ப்பு கிளம்பி விடும் எனும் குறுகிய அரசியல் நோக் கமும் தமிழர்களின் தனி நாட்டு அரசியலை முற்று முழு தாக அழிக்கவேண்டும் எனும் உள் நோக்கமுமாகும்.

இக்கொடிய சட்டத்துக்கு எதிராக முஸ்லிம்களும் குரல் கொடுக்காது இருந்தனர் என்றே கூறலாம். இந்நிலையில் 2019ஆம் ஆண்டு உயிர்ப்பு ஞாயிறு குண்டுத் தாக்கு தலைத் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராகவும் அதே சட்டம் பாய்ந்து தற்போது 300க்கும் அதிகமானோர் சிறை களில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் பலர் விசாரணை என தடுத்து வைக்கப்பட் டுள்ளனர். முஸ்லிம் தலைவர்களும் சிறையில் அடைக்கப் பட்டனர். தற்போதும் இச்சட்டத்துக்கு எதிராக முஸ்லிம்கள் மத்தியில் ஒரு சிலர் குரல் கொடுத்தாலும் பெரும் பான்மை யானோர் அமைதி காக்கின்றனர். காரணம் தங்களையும் பயங்கர வாதிகளாக்கி விடுவர் எனும் பயமாகும்.

தற்போது இச்சட்டம் இருந்தாலே தமிழ் ,முஸ்லிம் அரசியல் எழுச்சியை, பிரிவினைவாதத்தை, பயங்கரவாதத்தை, அரச எதிர்ப்பு நடவடிக்கைகளை அடக்க முடியும் எனும் கோட்பாட்டின் அடிப்படையில் பயங்கரவாத தடைச்சட்டம் திருத்த முன்மொழிவுகள் வைக்கப்பட்டுள்ளன. ஆதலால் மனித உரிமை மீறும் அடிப்படைத் தன்மைகள் திருத்தம் செய்யப்படவில்லை. இத்திருத்தத்தை ஏற்றுக் கொள் வோரும் உண்டு.

இச்சட்டத்தை பாதுகாப்பாகக் கொண்டே ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் தமிழ் மக்களுடைய நிலங்களை ஆக்கிரமிப்பு செய்வதோடு இன அழிப்பினை பல்வேறு வகைகளில் தொடர்கின்றனர்.

சர்வதேச மனித உரிமை அமைப்புகள் இக்கொடிய சட்டம் நீக்கப்பட வேண்டும் எனக் கூறினாலும் உள்நாட்டு மனித உரிமை ஆணைக்குழு இச்சட்டம் அகற்றப்படுவதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்கவில்லை. இவர்களும் ஆட்சியாளர்களின் கருவியாக செயல்படுவதே இதற்கான காரணமாகும்.

இந்நிலையில் வடக்கில் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராக மக்களின் கையெழுத்து திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது வெறுமனே கட்சியை கட்டி யெழுப்புவதற்கான வேலைத்திட்டமாக மட்டும் அமைந்து விடக்கூடாது. அடுத்த தேர்தலுக்கு முகம் கொடுப்பதற்கான மறைமுக உள்நோக்கம் கொண்டதாகவும் அமைந்து விடக்கூடாது.

தமிழ் மற்றும் முஸ்லீம் மக்களுக்கு எதிராக பாவிக்கப்படும் பயங்கரவாத சட்டம் இனிவரும் காலங்களில் முதலாளித் துவத்திற்கு எதிராக, இயற்கை வள கொள்ளையர்களுக்கு எதிராக, வெளியக சக்திகளுக்கு எதிராக செயற்படு வோர்க்கு எதிராக பாவிக்கப்பட்ட உள்ளது என்பதே உண் மை. இது இருப்பதையே பல சக்திகள் விரும்புகின்றன. அதற்காகவே சட்டத்திருத்தம் என போலியான முன் மொழிவு நாடகமாடப்பட்டுள்ளது.

பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிரான மக்கள் சக்தியை வடகிழக்கிலும், வட கிழக்கிற்கு வெளியிலும் கட்டியெழுப் புவதற்கான தேவை எழுந்துள்ளது. இத்தகைய சூழ் நிலையில் குறுகிய கட்சி அரசியல் நோக்கங்களுக்கு அப் பால் மக்கள் வாழ்வை காக்க மக்கள் சக்தியை கட்டி யெழுப்பி அதன் மூலம் பயங்கரவாத தடைச் சட்டத்தை இல் லாதொழிக்க செயற் படவேண் டும். அதற் கான முனைப்பு காட்ட வேண்டும் இதுவே காலத்தின் தேவை யாகும் என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பறிபோகும் தமிழர் தாயகத்தின் இதயபூமி

ஆரம்பமானது கொக்கிளாய் மக்களின் போராட்டம்



கனியமணல் அகழ்வு எனும் போர்வையில் இடம் பெறும் நில அபகரிப்புக்கு எதிராக, கொக்கிளாய் கிராம மக்கள் போராட்டமொன்றை முன் னெடுத்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொக்கிளாய் தொடக்கம் நாயாறு வரையான கிராமங்களில் 12 கிலோ மீற்றர் நீளமான கடற்கரையுடன் இணைந்த கிராம மக்களின் சுமார் 1000 ஏக்கர் பூர்வீக நிலங்கள் கனிய மணல் அகழ்வு என்ற பெயரில் அபகரிக்க நடவடிக்கைகள் மும்முரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனை உடனடியாக தடுத்து நிறுத்துமாறு கோரிய கவனயீர்ப்பு போராட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

ஏற்கனவே சிங்கள குடியேற்றங்களாலும், இராணுவ ஆக்கிரமிப்பாலும் மகாவலி எல் வலயத்தாலும், வன ஜீவராசிகள் திணைக்களம், வளவள திணைக்களம், தொல்லியல் திணைக்களம், போன்ற அரச இயந்திரங் களின் திட்டமிட்ட ஆக்கிரமிப்பால் இருப்பு கேள்விக் குள்ளாகி வரும் தமிழ் மக்களின் எல்லை கிராமங்களில் மேலதிகமாக கனிய மணல் கூட்டுதாபனத்துக்கு என மிகுதி நிலங்களையும் அபகரிக்கும் வேலையை அரசு மிக திட்டமிட்டு முன்னெடுத்து வருகின்றது.


எனவே தமிழ் மக்களுக்கு சொந்தமான இந்த நிலங் ளை அபகரிப்பதை கண்டித்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தும் கொக்கிளாய் கிராம மக்களால் (12) இன்று சனிக்கிழமை சற்று முன்னர் கொக்கிளாய் பாடசாலை முன்பாக எதிர்ப்பு போராட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது

கொக்கிளாய் கிராம மக்கள் முன்னெடுக்கும் குறித்த போராட்டத்தில் மக்களுடன் இணைந்து மத தலைவர்கள் அரசியல் பிரமுகர்கள் சமூக ஆர்வலர்கள் பொதுமக்கள் என பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

GTA CHIROPRACTIC CENTRE

We are specialized in

- Motor Vehicle Accidents
- Slip & Fall
- WSIB
- Extended Health Care
- Sports Injuries
- Physiotherapy
- Chiropractic
- Orthotics Shoes
- Massage Therapy
- Acupuncture



Health is Wealth

Pathmaraj (Pat) Pathman

Tel: 416-321-0482 Cell: 416-528-5318

Fax: 416-321-0486

GTA Square Mall 5215 Finch Ave, E#206

Scarborough, ON, M1S 0C2

www.gtachiro.ca | Email: gtaphysio@gmail.com

ஓம் விரைட் விஸ்வப் பிரம்மமே நமஹ

R.S தங்கப் பட்டறை

நவீன டிசைன்களில் நகைகள் செய்துகொள்ளவும்
உங்கள் பழைய நகைகளை மெருகூட்டவும்
எல்லவிதமான திருத்த வேலைகளையும் லேசர்
மூலம் செய்து கொள்ளவும்

குறித்த திகதியில் ஓடர்களை பெற்றுக்கொள்ளவும்
பிறந்த திகதி எண் ராசிக்கேற்ப பொருத்தமான
மாணிக்க கற்களை அவற்றின் இயற்கைத்
தன்மைக்கான சான்றிதழுடன் பெற்றுக்கொள்ளவும்

திருமணத்திற்கு பொன் உருக்குதல் காது குத்துதல்
பல விதமான டிசைன்களில் தாலி செய்து கொள்ளவும்



பழைய நகைகளை மாற்றி
இன்றய காலத்துக்கேற்ப
புதிய வடிவங்களில்
செய்துகொள்ளவும்

தொடர்புகளுக்கு: 416.292.9816 / 416.822.7171

S.மூர்த்தி

Majestic City (Markham & McNicoll)
2900 Markham Rd, Unit A16, Scarborough

சங்கத்தமிழ்

ஒவ்வொரு தனி நபரினதும் வளர்ச்சியில் தான்
ஒரு நாட்டின் வளர்சி தங்கி நிற்கின்றது...!

உங்கள் அறிவித்தல்கள் - விளம்பரங்கள்
சங்கத்தமிழ் மின் இதழில் வெளியிட வேண்டுமா?

விளம்பரம் இன்றி வியாபரம் இல்லை

உங்கள்
விளம்பரங்கள்
அறிவித்தல்கள்
துயர்பகிர்வுகள்
விற்பனை
வாடகை
மற்றும்
வரி விளம்பரங்களுக்கும்

437.345.4203

Nickon Photo & Video

நிக்கோன் போட்டோ & வீடியோ

Digital Album

டிஜிட்டல் அல்பம்



உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...



Call: Vijay

416.554.8899

Facebook ID:
Nickon Studio

“இறைமை” இனப்படுகொலைக்கான அனுமதியும் அல்ல;

இனப்படுகொலை நடந்தேறி பத்தாண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் அதனை நியாயப்படுத்துவதற்கு இறைமை, அரசியல் யாப்பு உரிமை என்ற சோடனையான வாதங்களை முன் னிறுத்துகிறார்கள். அதேவேளை இனப்படுகொலையால் கிடைத்த ஆதிக்க நலனைப்பேண “நல்லிணக்கம்” என்ற அடிமைத்தனத்தை அழகிய வடிவில் முன்னிறுத்துகிறார்கள்.

“போர்க்குற்ற விசாரணையைக் கோரினாலும் மீண்டும் கறுப்பு யூலையைத் தமிழர்கள் சந்திக்க வேண்டிவரும்” என்று நல் லிணக்கம் பேசும் சிங்கள அரசியல் தலைவர்கள் தமிழ் மக் களை அச்சுறுத்துகிறார்கள். இந்த அச்சுறுத்தலும், அவர்களது இனஅழிப்பிற்கான அடிமன அபிலாசை யும் கடந்த பத்தாண் டுகளாய் அவர்கள் கூறும் நல்லிணக் கத்திற்கு அவர்கள் இன்னும் தகுதியாக வில் லை என் பதைக் காட்டுகிறது.

மேற்படி இறைமை, புனித அரசியல் யாப்பு, நல்லிணக் கம் என் பற்றி அதிகம் தத்துவார்த் த உண் மைக் கு ஊடாகவும், கோட் பாட்டு வகைக் கு ஊடாகவும் புரிந்து கொள் ள வேண் டும் . இவற் றை மேலெழுந்த வாரி யான அழகிய சொற் சோடனைகளுக் கு உள்ளாலும், வார்த் தை ஜாலங் களுக்கு உள்ளாலும் புரிந்து கொள்ளக் கூடாது.

ஈழத் தமிழர் கள் தொன் மையான வரலாற் றைக் கொண்ட செழுமை யான பண்பாடுமிக்க அறிவார்த்த தேசிய இனம் என்ற வகை யில் இவ்விடயங் களை அவற்றிற் கான முழுமை யான பரிமாணத்தில் புரித்துகொள்வதற்கான தகுதியையும், ஆளு மையையும் தன்னகத்தே கொண்டவர்கள் என்பதை இந்த உலகிற்கு நிரூபித்துக் காட்ட வேண்டிய தருணமிது.

தான்தோன்றித்தனமாகவும், எழுமாத்திரமாகவும், போகின்ற போக்கில் அடிபட்டுப் போகின்றவர்களாகவும் ஈழத் தமிழ்த் தலைவர்கள் செயற்பட இடமிருக்கக் கூடாது.

சிங்கள ஆட்சியாளர்களும் மற்றும் சமூகத் தலைவர்களும், பௌத்த மதத் தலைவர்களும், சிங்கள அறிவியலாளர்களும், மற்றும் ஊடகவியளார் களும் இனப் படுகொலையை என்ன வேண்டுமென்பதை தன் சுயநிலையிலிருந்து தீர் மானிக்க முற்படுகிறது. அப்போதே அதற்கான “இறைமை” முதல் நிலையில் பிறப்பெடுக்கிறது. தனக்கு வேண்டியதைப் பெறுவதற்காக அது தன் தாயுடன் தன் இறைமைக்கான உரிமையை முன்னிறுத்துகிறது. “வேண்டும்”,

“வேண்டாம்” என்ற தன் “சுயத்தை” தாயிடம் வெளிப்படுத் துவதன் மூலம் தன் “இறைமையை” அது முன்னிறுத்துகிறது.

அங்கு தாயின் பொறுப்பு குழந்தைக்கான தேவையை மறுப்பதல்ல மாறாக அதற்குப் பொருத்தமான வகையில் அந்தத் தேவையைப் பூர்த்தி செய்வதாகும். இந்த இடத்தில் தாயின் தெரிவு குழந்தையின் “சுயம்”, அதற்கான “நல்லது”, அதற்குரிய “நீதி” என்ற பரிமாணங்களுடன் இணைந்து குழந்தையின் நலன்கருதிய செயற்பாடு “இறைமை” என்ற முழுவடித்தைப் பெறுகிறது.

தாய்ப்பால் வேண்டிய குழந்தைக்கு, கள்ளிப்பால் கொடுத்துக் கொல்வது “இறைமை” ஆகாது. தமிழ் மக்களை இனப்படு கொலை செய்வதற்கான அதிகாரமாக “இறைமையை” சிங்களத் தலைவர்கள் முன்னிறுத்துகின்றனர்.

தமிழ் மக்களின் “சுயம்”, அவர்களுக்கான “நல்லது”, அவர்களுக்கான தெரிவையும், தீர்மானத்தையும் எடுக்கக் கூடியவர்களாவர்.

ஆனால் இவற்றிற்கு மாறாக குழந்தைக்குக் கள்ளிப்பால் கொடுக் கும் பாணியில் பௌத்த – சிங்கள மேலாதிக்கவாதிகள் இனப்படு கொலைக்கான அதிகாரத்தை “இறைமை” என்று சித்தரிக் கிறார்கள்.

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலை செய்துவிட்டு அவ்வாறு செய்தமையை “இறைமை” என்று வர்ணிக்கிறார்கள். இனப் படுகொலைக்கு எதிராக சர்வதேச நீதியைக் கோரி நிற்கும்போது “இலங் கையின் இறை மையில் யாரும் தலை யிடக் கூடாது” என்று கூக்குர லிடுகிறார்கள். நீதி விசாரணை என் பது சிங்கள இறை மையை மீறும் செயல் என்று வர் ணிக்கிறார்கள்.



இத்தகைய அடிப் படையான கருத் தியல் உண்மைக் கும் அடுத்த கட் டமாக நடை முறையில் வர லாற் றில் “இறைமை” பற் றிய உண் மை யை பரிசீலிப்பதும் அவசியம். உதா ரணமாக மிலோச விக் தலைமை யிலான யூகோஸ் லாவிய அரசு இனப்படுகொலை புரிந் த போது அங்கு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணி இராணுவ ரீதியில் தலை யிட் டது. இனப்படு கொலை செய்யும் “இறை மை யை” அது நிராகரித் தது. இறு தி யி ல் யூகோஸ்லாவியா தனித்தனியோ “இறைமை” கொண்ட ஏழு அரசுகளாக மாறியது.

இங்கு செர்பிய இராணுத்தினரால் 13,500 பேர் இனப்படு கொலைக்கு உள்ளானதுடன் செர்பிய இனக் குழந்தை கருத் தரிக்கச் செய்யும் திட்டத்தின் கீழ் 3000 கொசோவோ பெண்கள் செர்பிய இராணுத்தினரால் பலாத்காரமாக கர்ப்பிணித் தாய் களாக ஆக்கப்பட்ட பின்னணியில் மேற்படி நேட்டோவின் இராணுவத் தலையீடு ஏற்பட்டது.

ஓர் இனத்தின் மீதான படுகொலைக்காக ஓர் அரசு கூறும்

“அரசியல் யாப்பு” இன அழிப்பிற்கான புனித வேதமும் அல்ல

“இறைமை” என்ற வார்த்தையினால் முலாம்பூசி மறைக்கவும், நியாயப்படுத்தவும் முனைகிறார்கள்.

“இறைமை” ஒருவரின் பிறப்புரிமை. இனப்படுகொலைக்கான அனுமதியும், அதிகாரமும் “இறைமை” ஆகாது. “இறைமை” என்ற பதத்தை புரியாத புதிர் நிறைந்த அதேவேளை ஒரு “புனித” பதமாக ஆளும்குழாம் மக்கள் மத்தியில் காட்சிப் படுத்துகிறது.

“இறைமை” என்ற பதத்தை பரந்துபட்ட மக்கள் தளத்தில் நின்று மிக எளிமையான வகையில் முதலில் புரிந்துகொள் ள வேண்டும். “சுயம்”, “நல்லது”, “நீதி” என்னும் உட்பொருட்களை உள்ளடக்கிய செயலுக்கான அதிகாரமே “இறைமை” என் பதாகும்.

இதற்கான உண்மையை ஒரு குழந்தை தொடர்பான செயற் பாட்டிலிருந்து ஆரம்பிக்கலாம். முதலில் குழந்தை தனக்கு அவர்களுக்குரிய “நீதி” இந்த மூன்றின் அடிப்படையிலும் “இறைமை” இணைந்த செயற்பாட்டைக் கொள்கிறது.

குழந்தையின் கண்களுக்கு நெருப்பு அழகாகத் தோன்றும். ஆனால் பெரியவர்களுக்கு அப்படியல்ல. இந்நிலையில் குழந் தையின் தொடக்க நிலையில் அதற்குரிய “சுயம்” நன்மையின் அடிப்படையில் புரிந்துகொள்ளப்பட்டு பெற்றோரால் அதற்கேற்ப பூர்த்தி செய்யப்படுகிறது. அதேவேளை வளர்ந்த மனிதர்கள் குழந்தையின் அறிவிலிருந்து மேன்மைப்பட்டு விடுவார்கள். அத்தகைய மேன்மைப்பட்டவர்களின் “சுயம்” நன்மையை நோக்கி அவர்களாலேயே எது வேண்டுமென்பது தீர்மானிக் கப்பட முடியும். ஆனால் இங்கு குழந்தைக்கும், பெரியவர் களுக்கும் சுயத்தைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற அடிப்படை ஒன்றுதான்.

ஈழத் தமிழர்களின் “சுயத்தை” அடுத்த கட்டத்திற்குரியதாக வளர்ந்தோர் நிலையில் நின்று பார்க்கும் போது அவர்களே “இறைமை” நிராகரிக்கப்பட்டு “இறைமை” கொண்ட ஏழு அரசுகள் தோன்றின. இங்கு “இறைமை” என்பது ஒவ்வொரு தேசிய இனத்தினதும் “சுயத்தையும், நன்மையையும், நீதியையும்” நிலைநாட்டுவதில் நிறைவடைந்தது.

இந்தவகையில் இப்படி “இறைமை”க்கான உதாரணங்களை அடுக்கிச் செல்ல முடியும். மேற்படி இந்த ஓர் உதாரணமே போதுமானது.

ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் முள்ளிவாய்க்காலில் இனப்படு கொலை செய்யப்பட்டது தொடர்பாக சர்வதேச விசாரணை வேண்டும் என்பதை நிராகரிப்பதற்கான காரணமாக இலங் கையின் அரசியல் யாப்பில் வெளிநாட்டு நீதி விசாரணைக்கு இடமில்லை என்பதால் அப்படியொரு நீதி விசாரணை செய்ய முடியாது என்று சிங்களத் தலைவர்கள் உறுதிபடக் கூறுகின் றனர்.

ஹிரோஷிமா, நாஹசாகி நகரங்கள் மீதான இரு அணுகுண்டு வீச்சுக்களினாலும் கொல்லப்பட்ட மொத்த மக்கள் தொகை 1,40,000. ஆனால் அதனையும்விட முள்ளிவாய்க்காலில் படுகொலைக்கு உள்ளனான மக்களின் தொகை அதிகமானது. இத்தகைய ஒரு பாரிய இனப்படுகொலையைச் செய்துவிட்டு இலங்கையின் அரசியல் யாப்பில் சர்வதேச நீதி விசாரணைக்கு இடமில்லை என்று கூறுகிறார்கள்.

யூகோஸ்லாவியாவின் அரசியல் யாப்பிலும் சர்வதேச விசாரணைக்கு இடமில்லைதான். ஆனாலும் சர்வதேச நீதி விசாரணை நடந்தது. இனப்படுகொலை அநீதிக்கு எதிராக ஒரு நாடு ஏழு துண்டுகளாகப் பிளந்தது. அப்படியே ஹிட்லரின் காலத்தில் ஜெர்மனி கொண்டிருந்த யாப்பிற்கும், இறைமைக்கும் பதிலாக ஜெர்மனியை இரண்டு துண்டுகளாக அமெரிக்காவும், ரஷ்யாவும் பிரித்தன.

தாமே எழுதி வைத்திருக்கும் இன ஒடுக்குமுறைப் புனிதயாப்பிற்கு தமிழர்கள் பாத்திரவாளிகள் அல்லர். அதேவேளை அவர்கள் எழுதி வைத்திருக்கும் யாப்பையே பல தடவைகள் அவர்கள் மீறி வருகிறார்கள். உதாரணத்திற்கு தற்போதைய நடைமுறையில் பார்க்கும் போது 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் மாகாணசபைக்கு பொலீஸ் அதிகாரமும், காணி அதிகாரமும் உண்டு. ஆனால் அவை நடைமுறையில் இன்றுவரை மீறப்பட்டு வருகிறது. அவர்களின் புனித யாப்பை அவர்களே பாதுகாக்க முடியாதவர்களாக உள்ளார்கள்.

இலங்கை யாப்பை புனிதமான ஒன்று என்று தமிழர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. 1972ஆம் ஆண்டு யாப்பு அவ்வாண்டே யாழ்ப்பாண நாவலர் மண்டபத்தில் பல்லாயிரக் கணக்கான மக்கள் முன்னிலையில் தந்தை செல்வாவால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. அப்போது கொளுத்தியவர்கள் கைது செய்யப்படவுமில்லை. தமிழ் மக்கள் இலங்கை யாப்பை ஒருபோதும் புனித வேதமாகக் கருதுவதுமில்லை.

"நல்லிணக்கம்" என்று கூறுபவர்கள் அதற்கு எதிரான மனவுறுதியையும், அரசியல் நடவடிக்கைகளையும் கொண்டுள்ளார்களே தவிர உண்மையான இன நல்லிணக்கத்திற்கான அரசியல் மனவுறுதியைக் (Political will) கொண்டிருக்கவில்லை.

இனப்படுகொலையால் உருவான வெற்றியை நிலைநாட்டுவதைத்தான் அவர்கள் இன நல்லிணக்கம் என்று சொல்கிறார்கள். தமிழ்ப் பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சிங்களக் குடியேற்றங்களும், சிங்கள மயமாக்கல்களுமே தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினையாக அமைந்தது. அவற்றிற்கு எதிராகவே சாத்வீகப் போராட்டங்களும் பின்பு ஆயுதப் போராட்டங்களும் எழுந்தன.

ஆனால் இனப்படுகொலை வாயிலான இராணுவ வெற்றியின் பின்பு அந்த இராணுவப் படைகளின் பின்னணியில் இருந்து கொண்டு தமிழ்ப் பிரதேசங்கள் பரவலாக தொடர்ந்து சிங்களக் குடியேற்றங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்ப் பகுதிகளில் தெருக்கள், மூலை முடுக்குகள் எல்லாம் படை உதவியுடன் பௌத்த ஆலயங்கள் பரவலாக கட்டப்பட்டு சிங்கள - பௌத்த மயமாக்கல் நிகழ்ந்து வருகிறது. இங்கு நல்லிணக்கம் என்பது இத்தகைய சிங்களக் குடியேற்றங்களையும், பௌத்த விகாரை வடிவிலான ஆக்கிரமிப்புக்களையும் மேற்கொள்ளாது நிறுத்துவதில் வெளிப்பட வேண்டுமே தவிர சிங்களக் குடியேற்றத்தைச் செய்வதற்கும், சிங்கள மயமாக்கல்களை மேற்கொள்ளவதற்குமான நடவடிக்கைகள் "நல்லிணக்கம்" ஆகாது. இது "நல்லிணக்கம்" என்ற பெயரிலான பாரிய ஆக்கிரமிப்பாகும்.

நன்மையளிக்கும் ஒன்றிலிருந்து ஒரு மனிதனோ அன்றி ஒரு பிராணியோ கூட விலகிச் செல்லமாட்டாது. சிங்கள மக்களுடன் இணைந்து வாழ்வது நன்மையானதாக காணப்படுமிடத்து அதிலிருந்து தமிழ் மக்கள் ஒருபோதும் பிரிந்துசெல்ல விரும்பமாட்டார்கள். நடைமுறையிலும் ஆரம்பத்தில் சிங்கள மக்களுடன் இணைந்து சுபிட்சமான இலங்கையை கட்டியெழுப்பவே விரும்பினார்கள். ஆனால் இனப்படுகொலைகளும், இன அழிப்பு நடவடிக்கைகளும் மற்றும் இன ஒடுக்குமுறைகளும் அவர்களை பிரிந்து செல்லுமாறு நிர்ப்பந்தித்தன.

ஆதலால் தமிழ் மக்களின் போராட்டம் ஒரு குறுகிய பிரிவினைவாதமல்ல. மாறாக தற்பாதுகாப்பிற்கானதும், தமது "சுயத்தையும்", "ஆளுமையையும்", "ஆக்கத்திறனையும்" தாமே விருத்தி செய்வதற்கான விடுதலைப் போராட்டமாகும். வளரும் பயிர் வேர்விட பாறை தடையாக இருக்கும் போது அந்த வேர் பாறையைத் தகர்த்து தன் வளர்ச்சிக்காக முன்னேறுகிறது. ஒரு தாவரத்திற்கு சூரிய ஒளி தடைப்படும் போது அது சூரியனை நோக்கி சரிந்து வளைந்து வளர்கிறது.

வாழ்விற்குப் பாதகமாக இனப்படுகொலையும் மற்றும் இன ஒடுக்குமுறைகளும் அமையும் போது தாவரம் இயற்கையாக மேற்படி செயற்படுவதுபோல தமிழ் மக்களும் செயற்படும் நிலைதான் தமிழ் மக்களின் போராட்டமாகும்.

தமிழ் மக்களின் "இறைமையை" அங்கீகரிப்பதும், தமிழ் மக்களுக்கான அரசியல் யாப்பை அங்கீகரிப்பதும், தமிழ் மக்களின் வளர்ச்சிக்கான நல்லிணக்கமும்தான் வரலாற்றை முன்னேற்றவும், சமாதானத்தை ஏற்படுத்தவும் உதவுமேதவிர மேற்படி சிங்களத் தலைவர்கள் கூறும் இனப்படுகொலைக்கு அங்கீகாரமான அவர்களின் "இறைமை" அல்ல.

தமிழ் மக்களுக்கான "இறைமை" நிலைநாட்டப்படாமல் இலங்கைத் தீவிற்கும் சமாதானம் கிடையாது. இந்து மாகடல் பிராந்தியத்திற்கும் அமைதி கிடையாது. தமிழ் மக்களின் உரிமைகளை மீறிய இடத்திலிருந்துதான் இலங்கையும், இப்பிராந்தியமும் பெருவல்லரசுகளின் ஆதிக்கத்திற்கான களமாய் மாறிய நடைமுறை மேலும் உக்கிரமடைந்து வருகிறது. எனவே தமிழ் மக்களுக்கான "சுயம்", அவர்களுக்குரிய "நன்மை", மற்றும் "நீதி" என்பதிலிருந்துதான் இப்பிராந்தியத்திற்கான அமைதியும், சமாதானமும், சுபிட்சமும் பிறப்பெடுக்க முடியும்.

நன்றி: மு. திருநாவுக்கரசு (18.04.2019)






பேராசிரியர் ப.புஸ்பரட்ணம், யாழ். பல்கலைக்கழகம்


ஈழத்தமிழர் வரலாறு -02

ஆங்கிலேயர் ஆட்சியில் வரலாறு

19 ஆம் நூற்றாண்டில் சிறப்பாக ஆங்கிலேயர் ஆட்சியில் இலக்கியங்களோடு தொல்பொருட்சான்றுகளையும் பயன்படுத்தி வரலாறு எழுதும் மரபு ஆசியாவில் தோற்றம் பெறத்தொடங்கியது. இந்தியாவில் வரலாற்றுப்பழமை வாய்ந்த கல்வெட்டுக்கள், கட்டிட அழிபாடுகள் என்பவற்றை அவதானித்த ஆங்கில நாட்டு அறிஞர்கள், அதன் பெருமைகளை ஆராய்வதில் அக்கறை காட்டத்தொடங்கினர். இவ்வறிஞர்களில் பலர் ஐரோப்பிய மொழிகளுக்கு வட இந்திய மொழிகளுக்கும் இடையிலான ஒற்றுமையை ஆராய்வதில் புலமைபெற்றிருந்தனர். இது இந்திய வரலாற்றை ஆராய்வதற்கு உதவியபோதும் அதனால் பக்கச்சார்பான வரலாறே தோன்றியது. இதற்கு காரணம் வடமொழி கல்வெட்டுகளை ஆராய்ந்து வரலாற்றை எழுதிய அளவிற்கு ஆங்கில அறிஞர்கள் தென்னிந்திய மொழிக் கல்வெட்டுக்களை, இலக்கியங்களை வாசித்து அவற்றை ஆராயும் புலமையைப் பெற்றிருக்கவில்லை. இதனால் ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் வெளியான இந்தியவரலாற்று நூல்களில் இன்று இந்திய நாகரீகத்தின் தொட்டில் என அழைக்கப்படும் தென்னிந்தியா, குறிப்பாக தமிழ்நாடு சிறு அத்தியாயத்தில் ஒரு முன்னரையாக இடம்பெற்றது. இத்தகைய ஒரு அணுகுமுறை இலங்கை வரலாற்றிலும் காணப்பட்டது.

இதற்கு வட இந்திய மொழிகளுக்கும் இலங்கையில் தோன்றிய பாளி சிங்கள இலக்கியங்கள், கல்வெட்டுகள் என்பவற்றிற்கும் இடையே மொழிரீதியான ஒற்றுமை காணப்பட்டது ஒரு காரணமாகும். இந்த ஒற்றுமையை ஆராய்ந்த அறிஞர்கள் பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றுக் விளக்கம் கொடுப்பதில் கூடிய கவனமெடுத்தனர். இதனால் மகாவம்சம் கூறும் வரலாறு மீண்டும் புத்துயிர் பெறத்தொடங்கியது. இவர்கள் ஆட்சியில் சில தொல்லியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு கல்வெட்டுக்கள், புராதன கட்டிட அழிபாடுகள் என்பன கண்டு பிடிக்கப்பட்டன. ஆனால் இந்த ஆய்வுகளில் பெரும்பாலானவை மகாவம்சம் கூறும் புராதன சிங்கள இராசதானிகள் அமைந்த அநுராதபுரம், பொலநறுவை போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்டன. அங்கும் கூட பௌத்த கலாசாரங்களை ஆராய்வதில் அக்கறை காட்டிய அளவிற்கு பிற கலாசாரச் சின்னங்களை ஆராய்வதில் அக்கறை காட்டவில்லை.







இத்தகைய ஒரு குறைபாடு ஆங்கிலேயர் ஆட்சிக்கால வரலாற்றாய்வில் காணப்பட்டாலும் முற்பட்டகாலங்களை விட ஓரளவுக்கு தமிழர் பிராந்தியம் பொறுத்து கவனம் செலுத்தப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. இவற்றுள் வன்னி (1909, 1917) மன்னார் (1888) கந்தரோடை (1885, 1917) ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வாய்வுகள் சிலவற்றை அடிப்படையாக் கொண்டு "புராதன இலங்கை" என்ற நூலை எழுதிய பாக்கர், மகாவம்சத்தில் மறைக்கப்பட்டுள்ள எல்லாள மன்னனின் சாதனைகளுக்குரிய தொல்லியற்சான்றுகள் வன்னியில் இருப்பதாகக் குறிப்பிட்டார். மகாவம்சத்தில் வரும் பெலிவாவியை தற்போதைய வவுனிக்குளம் என அடையாளம் கண்ட இவர் இது எல்லாளனுக்குரிய சாதனைகளில் ஒன்று என்றார். இதற்கு மேலும் ஆதாரமாக இங்கு கண்டு பிடிக்கப்பட்ட தமிழர் தொடர்பான தொல்பொருட்சின்னங்களைச்சுட்டிக்காட்டினார். இவரின் சமகாலத்தவரான லூயிஸ் என்பவர் தமிழில் உள்ள இடம்பெயர்கள் பல வன்னியில் இருப்பதாகசுட்டிக்காட்டி, இங்கு கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுகள், விக்கிரகங்கள், கட்டிட அழிபாடுகள் என்பன புராதன தமிழ் இராசாதானியின் எச்சங்களாக இருக்கலாம் என ஊகம் தெரிவித்தார். 1917 இல் கந்தரோடையில் ஆய்வினை மேற்கொண்ட போல்பீரிஸ் என்பவர் தொல்லியல் ஆயிவில் தமிழர் பிராந்தியங்கள் புறக்கணிக்கப்பட்க் கூடாதென வலியுறுத்தினார். இதற்கு பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றுக்கு முரணான சான்றுகள் பல அங்கு கண்டுபிடிக்கப்பட்டமை ஒரு காரணமாகும். இக்கண்டுபிடிப்புகளும், ஆங்கிலேய அறிஞர்களது கருத்துக்களும் ஈழத்தமிழர் வரலாற்றுக்கு ஓரளவு புதிய வெளிச்சம் ஊட்டுபவையாக அமைகின்றது. ஆயினும் இவை சிங்கள மக்களது இரண்டாயிரம் ஆண்டுகால பாராம்பரிய வரலாற்று நம்பிக்கையில் மாற்றத்தை ஏற்படுத்தியதாகத் தெரியவில்லை. அத்துடன் பிற்காலத்தில் எழுந்த வரலாற்று நூல்களிலும் இவை முக்கியத்துவப்பட்டதாகவும் தெரியவில்லை.

சுதந்திரப் போராட்ட காலமும் வரலாறும்

உலகில் அன்னியரது ஆதிக்கத்திற்கு எதிரான சுதந்திரப் போராட்ட இயக்கங்கள் தோன்றி வளர சுதேச மக்களுக்கிருந்த வரலாற்றுப் பாரம்பரியமும், வரலாற்று உணர்வும் ஒரு காரணமாக கூறப்படுகிறது. இக்காலப் பாகுதியில் தான் பல நாடுகளில் வரலாற்று ஆய்வுகள் தீவிரமடைந்தன. இதற்கு இஸ்ரேவேல். இந்தியா போன்ற நாடுகள் சிறந்த உதாரணங்களாகும். இந்திய மக்களின் சுதந்திர உணர்வை மதிக்கத் தவறிய பிரித்தானியர் பரந்த நிலப்பரப்பை கொண்ட இந்தியாவை ஜனநாயக முறையில் ஆளும் தகுதி இந்தியருக்கு இல்லையெனக் கொச்சைப் படுத்தினர். இது இந்திய வரலாற்றறிஞர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்தின. இதை மனதிற் கொண்டு இந்திய மக்


FRAGMENT OF THE LARGE BUDDHA AT KANTARÓDAI.
(See page 27.)


Fig. 1. Gold Plate Grant (from Vallipuram) by King Vasabha (67–111 A.D.). The surface measures 3.5 in. by 1 in.; weight: 69.5 grains.




களின் பழைமையையும், பெருமையையும் வெளிப்படுத்தும் வகையில் பல நூல்களை எழுதினர். இதன் மூலம் பிரித்தானியருக்கு முன்னரே ஜனநாயக மரபில் பரந்த இந்தியாவை ஒரு குடையின் கீழ் ஆண்ட அனுபவம் மட்டுமன்றி, இந்தியாவின் இயற்கையெல்லையைத் தாண்டி தென்கிழக்காசிய வரை தமது ஆதிக்கம் நிலைத்திருந்ததை உறுதிப்படுத்தினர். இதை உறுதிப்படுத்தும் வகையில் பரந்த இந்தியா, விசால இந்தியா என்ற பெயரில் பல நூல்கள் வெளிவந்தன. இந்த ஆய்வுகள் இந்தியாவின் ஒவ்வொரு இனத்தினதும் மொழியினதும் தனித்துவத்தை வெளிப்படுத்திய அதேவேளை, இந்தியர் என்ற ஐக்கியத்தையும் ஏற்படுத்தின. இவை வேற்றுமையில் ஒற்றுமை என்ற கோட்பாட்டை இந்தியாவில் வலுப்படுத்தியது.

இந்தியாவில் ஏற்பட்ட இவ்வரலாற்றுணர்வு சமகாலத்தில் இலங்கையில் ஏற்பட்டாக கூறமுடியாது. மாறாக 19 ஆம் நூற்றாண்டில் சிங்கள மக்களிடையே இருந்த பௌத்த சிங்கள கலாச்சார விழிப்புணர்வு 20 ஆம் நூற்றாண்டில் இனவாதமாக மாறி ஏனைய மக்களுக்குரிய கலாச்சார தனித்துவத்தை ஏற்கமறுத்தது. இதன் காரணமாக 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலகட்டங்களில் ஏற்பட்ட வரலாறு, தொல்லியல் ஆய்வுகள் தமிழருக்கு எதிரான இன உணர்வோடு, சிங்கள மக்களின் முன்னுரிமையும், நாட்டுரிமையும் நிலைநிறுத்தும் நோக்கில் நெறிப்படுத்தப்பட்டது. அந்த நோக்கோடு வரலாற்று ஆய்வை மேற்கொண்டவர்களில் பேராசிரியர் பரணவிதான சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவர். இவர் பௌத்தமதம் சார்ந்த எச்சங்களை ஒரு மதத்தின் பண்பாட்டு எச்சமாக கருதாது சிங்கள இனத்தின் பண்பாட்டு எச்சமாக கருதினார். இதன் மூலம் பௌத்த எச்சங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் சிங்கள மக்களே வாழ்ந்தனர் என வலியுறுத்தினார். இதற்கு கந்தரோடை, வல்லிபுரம், குச்சவெளி ஆகிய இடங்களில் கிடைத்த பௌத்தமத எச்சங்கள் தொடர்பாக இவர் கூறிய கருத்துக்கள் சிறந்த எடுத்துக்காட்டாகும். பௌத்த, சிங்கள மக்களுக்கு சாதகமாக மகாவம்சம் கூறிய கருத்துக்களை தனது தொல்லியற் கண்டு பிடிப்புக்களுக்கு பயன் படுத்திய பேராசிரியர் பரணவிதான தமிழர்களால் இலங்கையில் மகாயான பௌத்தமதம் வளர்ந்ததாக மகாவம்சம் கூறுவதை ஏற்றுக்கொள்ள முன்வரலில்லை. இந்த வரலாற்று உண்மையை மறைப்பதன் மூலம் "ஈழத்தமிழர்கள் வரலாறு இல்லாத தமிழர்கள்", "பாரம்பரியம் இல்லாத தமிழர்கள்" என்ற கருத்து தொடர்ந்து நிலைத்துநிற்க இவர் வழிவகுத்தார். இத்தகைய ஒரு மனோபாவம் ஏனைய நாடுகளைப் போலல்லாது இலங்கையின் சுதந்திரப் போராட்ட காலத்தில் கூட வளர்ந்தமை ஈழத்தமிழர் வரலாறு மறைக்கப்படக் காரணமாகியது. இதன் வெளிப்பாடாகவே சுதந்திர இலங்கையில் வெளிவந்த வரலாற்று நூல்கள் அமைந்தன.

அரசம் வரலாறும்

காலத்திற்கு காலம் இலங்கை அரச வெளியீடாக வந்த வரலாற்றுப் பாடநூல்களில் எல்லாம், மொழி, மதம் என்பவற்றினால் வேறுபட்ட தமிழ், சிங்கள, முஸ்லீம், பறங்கிய மக்கள் தமது வரலாற்றுப் பழமையையும், பெருமையையும் தெரிந்து இந்த நாட்டில் இன ஐக்கியமாக வாழ்வதாகநூலின் முன்னுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் இவ்வுண்மை நூலின் முன்னுரையோடு மறைந்து விடுகிறது. நூலின் உள்ளடக்கம் இலங்கை வரலாறு என்பது பௌத்த சிங்கள மக்களின் வரலாறாகவே சித்தரிக்கப்பட்டுள்ளது. இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டத்தில் வெளிவந்த வரலாற்று நூல்களில் ஒப்பீட்டளவில் ஈழத்தமிழர் வரலாறு இடம்பெறாது போனதற்கும் சிலகாரணங்கள் இருக்காலம். ஆனால் கடந்த மூன்று சகாப்தங்களிலும் நாட்டின் பல்வேறு பகுதிகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியற்சான்றுகள், அவை தொடர்பான கருந்துக்கள் தமிழரின் வரலாற்று பழமையை வெளிப்படுத்தி நிற்கின்றன. இக்கண்டுபிடிப்புகள், கருத்துக்கள் இன வேறுபாட்டிற்கு மேலாக இன ஐக்கியத்தை, பௌத்த இந்து கலாச்சார ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன. ஆனால் இவற்றில் எவையுமே இன ஐக்கியத்தை உருவாக்க போதிக்கப்படுவதாக கூறும் வரலாற்று நூல்களில் சேர்ந்து கொள்ளப்பட்டதாக தெரியவில்லை. மாறாக 2200 வருடங்களாக கூறப்பட்டு வந்த எல்லாளன் சமாதியில் உள்ள மனிதச்சாம்பல் துட்டகாமினிக்குரியதாக கூறி அச்சமாதியை துட்டகாமினியின் சமாதியென திரிபுபடுத்தும் முயற்சிக்கு அரசு சாதகமாக நடந்து கொள்கிறது.


எல்லாளனின் சமாதி (துக்கின தூபி)



மந்திரிமனை



மந்திரிமனை நுழைவாயில்



சங்கிலித் தோப்பு வளைவு



யமுனா ஏரி

புராதன இராசதானிகள் அமைந்த இடங்கள், கலாசார மையங்கள், வரலாற்றுப் பழமைவாய்ந்த தொல் பொருட் சின்னங்கள் இலங்கை அரசின் பாதுகாப்புக்குரிய தென வரையறை செய்யப்பட்டுள்ளது. இது இற்றைக்கு 1000 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்டு கவனிப்பார் அற்ற நிலையில் இருந்த அநுராதபுர, பொலநறுவை இராசதானிகள் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு இலங்கையின் வரலாற்றுப்பழமையை புனிதச் சின்னங்களாக பாதுகாக்க உதவியது. ஆனால் இவைகளைப் பாதுகாக்கும் சிங்கள அரசுகள் இற்றைக்கு 350 வருடங்களுக்கு முன்னர் கைவிடப்பட்ட தமிழரின் இராசதானி அமைந்த நல்லூரைப் பாதுகாப்பதில் எதுவித அக்கறையும் காட்டவில்லை. தமிழர் தரப்பில் இருந்து இவ்விராஜதானியைப் பாதுகாக்கும் கோரிக்கைகள் காலத்திற்கு காலம் முன்வைக்கப்பட்ட போதிலும் அரசம், அரச தொல்பொருட் திணைக்களகமும் இதற்கு மௌனமே செலுத்தின. மாறாக வரலாற்று மையங்களுக்கான இலங்கை வரைபடத்தில் நல்லூரின் முக்கியத்துவம் மறைக்கப்பட்டு, தமிழர் பிராந்தியத்தில் உள்ள பௌத்த மையங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. இச்செயல்கள் 2000 ஆண்டுகால வரலாற்றுத்திரிபுகளுக்கு அரசம் துணைபோவதையே காட்டுகின்றன. இதனால் ஈழத்தமிழரின் தொன்மையான தொடர்ச்சியான வரலாறுபற்றிய ஆய்வு தமிழர் தரப்பில், தமிழர் பிராந்தியத்தில் இருந்து வெளிக்கிளம்புவது அவசியமாகும்.

மேலே சுட்டிக்காட்டப்பட்ட குறைபாடுகளால் இலங்கை தொடர்பான வரலாற்று நூல்களில் ஈழத்தமிழர் வரலாறு தெளிவற்ற பாத்திரமாக இருந்து வருகின்றது என்பது உண்மைதான. ஆனால் இதையிட்டு தமிழ் மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. இன்று இந்திய நாகரிகத்தின் தொட்டில் எனக்கூறப்படும் தமிழ்நாட்டிற்கு 14 ஆம் நூற்றாண்டுவரை ஈழத்தமிழரைப் போல ஒரு வரலாற்று மரவு இருக்கவில்லை. இந்தியா சுதந்திரம் அடையும் வரை வெளிவந்த இந்திய வரலாற்று நூல்களில் தமிழ்நாடு புறக்கணிக்கப்பட்ட பிராந்தியமாகவே இருந்துள்ளது. ஆனால் காலப்போக்கில் தமிழ்நாட்டில் மேற் கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும், தமிழ் நாட்டு அறிஞர் களிடையே வெளிக்கிளம்பிய வரலாற்று உணர்வும் தமிழ்நாட்டு மக்களுக்குத் தொடர்ச்சியான வரலாற்றுப் பெருமை உண்டு என்பதை உலகறியச் செய்தன. இந்த மாற்றம் ஈழத்தமிழர் வரலாற்றைப் பொறுத்தவரை பல ஆண்டுகளுக்கு பின்னர் மிக அண்மைக் காலத்திலேயே அரும்பத் தொடங்கியுள்ளது. 1960 க்கு முன்னர் இரண்டாயிரம் ஆண்டுகால வரலாற்று மரபை முன்னெடுத்துச் சென்ற பல்கலைக்கழக அறிஞர்கள், ஈழத் தமிழர் வரலாறு பற்றி ஆராயமுற்பட்ட தமிழ் அறிஞர்கள் சில ரிடம் அப்படியான வரலாறு உண்டா? எனக் கேலி செய்தனர். இன்று அவ்வறிஞர்களில் சிலர் தமது முன்னைய கருத்துக் களை மாற்றி சிங்கள மக்களைப் போல் தமிழர்களுக்கும் தொன்மையான வரலாறு இந்த நாட்டில் உண்டு என்பதை நாசுக்காகத் தெரிவிக்கத் தொடங்கியுள்ளனர். இது அறிஞர் களிடையே ஏற்பட்ட அறிவு மாற்றமல்ல, மாறாக வரலாற்றுப் பெறுபேறுகளின் நிர்ப்பந்தம்.

உலகில் ஏற்பட்ட விஞ்ஞான வளர்ச்சி ஏனைய துறைகளைப் பாதித்ததைப்போல் வரலாற்று ஆய்விலும் செல்வாக்குச் செலுத்தியது. இதன் காரணமாக வரலாற்று ஆய்வு தனியொரு துறையில் தங்கியிராது பல்வேறு துறைகளுடன் இணைந்து வளர்ச்சியடைய நேரிட்டது. இதில் தொல்லியல், மானிடவியல், சமூகவியல் போன்ற துறைகள் சிறப்பாக குறிப்பிடத்தக்கன. இவற்றின் மூலம் வெளிக்கிளம்பிய வரலாறு பெரும்பாலான நாடுகளின் பாரம்பரிய வரலாற்று நம்பிக்கைகளை மாற்றியமைத்தன. இதில் இலங்கை, தென்கிழக்காசியா போன்ற நாடுகள் சிறப்பாக குறிப்பிடத் தக்கன. இலங்கையில் கடந்த இரு சகாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல், சமூகவியல், மானிடவயில் போன்ற ஆய்வுகளின் முடிவுகள் பெருமளவுக்கு பாளி, சிங்கள இலக்கியங்கள் கூறும் வரலாற்றை நிராகரிப்பவையாகவே அமைந்துள்ளன. இன்று இலங்கை நாகரிகத்தின் தோற்றம் சிங்கள இனத்தின் உருவாக்கம் என்பனவற்றை அண்மைக் காலக் கண்டுபிடிப்புக்கள் மூலம் கட்டியெழுப்ப பல அறிஞர்கள் முன்வந்துள்ளனர். இவர்கள் மகாவம்சம் போன்ற பாளி இலக்கியங்கள் கூறும் வரலாற்றை வெறும் கட்டுக்கதையெனக் கூறும் அதேவேளை, மகாவம்சத்தில் மறைக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கும் சிங்கள மக்களைப்போல தொன்மையான வரலாற்றுச் சான்றுகள் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். அவர்களுள் சுசந்தா குணதிலகா, சத்தமங்கலம் கருணாரத்தின, இ.பி. பெர்ணாண்டோ, சுதர்சன் செனிவரட்ன போன்ற அறிஞர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இந்நிலையில் ஈழத்தமிழர்களிடையே ஏற்பட்டுள்ள வரலாற்று உணர்வும், தமிழர் பிராந்தியங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தொல்லியல் ஆய்வுகளும் நீண்டகாலமாக மறைக்கப்பட்டு வந்த ஈழத் தமிழர் வரலாற்றிக்கு புதிய வெளிச்சம் ஊட்டுபவையாக உள்ளன. (வளரும்)

வெளிச்சம் 1995.02

சிங்களப்பேரினவாதம் உருவாக்கிய பொய்யே "மகாவம்சம்"

மகாவம்சம் இன்றும் எழுதப்படுகிறது



இந்தக் கடல் ஈழத்தமிழரின் சொந்தக் - கடல்

இங்கு ரத்தம் சிந்திச் சிவந்திடும் தந்தைக் - கடல்

பொங்கிப் பகை வெல்லக்கடற்புலி - போகுங்கடல்

பிரபாகரன் தோன்றிய ஊரைத் தழுவிடும் - வீரக்கடல்

இந்தியா இலங்கையின் வடபகுதி மீனவர்களை புறக்கணிப்பதால் அது மூலோபாயரீதியில் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்படும் நியுஸ் இன் ஏசியா

05.02.2022

இந்தியா இலங்கையின் வடபகுதி மீனவர்களை புறக்கணிப் பதால் அது மூலோபாயரீதியில் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டிய நிலையேற்படும் என நியுஸ் இன் ஏசியா தெரிவித் துள்ளது.

நியுஸ் இன் ஏசியா மேலும் தெரிவித்துள்ளதாவது.

இந்தியாவின் போட்டியாளரான சீனா அபிவிருத்திதிட்டங்களின் உதவியுடன் வடபகுதி மீனவர்களை கவர்ந்துவருகின்ற சூழ் நிலையில் இந்தியா வடபகுதி மீனவர்களின் துயரங்களை புறக்கணிப்பது அதற்கு மூலோபாய ரீதியில் பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

வட இலங்கையை தனது மூலோபாய கொல்லைப்புறமாக கருதும் இந்தியா அங்கு சீனாவின் பிரசன்னத்தை வெறுக் ககூடும்.

தமிழ்நாடு மீனவர்களின் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கை காரணமாக இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் உள்ள குறுகிய கடற்பாதையில் தங்களிற்கு உள்ள உரிமைகளை

சமஸ்டி ஆட்சியை பெற்றுக்கொள்வதிலேயே ஆர்வமாக உள் ளனர் தமிழ்நாடு மீனவர்களின் உரிமைகளை பெற்றுக்கொள் வதில் அவர்களிற்கு ஆர்வம் இல்லை, தமிழர்களிற்கு சுயாட்சி வழங்குமாறு இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுப் பதற்கு தமிழக அரசியல்வாதிகளின் ஆதரவு அவசியம் என் பதால் இலங்கை தமிழ் அரசியல்வாதிகள் தமிழக இந்திய அரசியல் தலைவர்களுடன் முரண்பட விரும்பமாட்டார்கள்.

வேறு வழியின்றி சில வேளைகளில் உதவியற்ற வடபகுதி மீனவர்கள் இந்திய மீனவர்களை தாக்குவதுண்டு, சமீபத்தில் நடுக்கடலில் இடம்பெற்ற மோதலில் இரு மீனவர்கள் கொல் லப்பட்டனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வடமராட்சி கிழக்கு மீனவர்கள் 30 ம் திகதி முதல் வீதியில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆனால் தமிழ் அரசியல் வாதிகளிடமிருந்துமாறாக அவர்களில் ஒருவரான சுரேஸ்பிரேமசந்திரன் தமிழ்நாட்டில் உள்ள தங்கள் சகாக்களிற்கு எதிராக வடபகுதி மீனவர்கள் மோதலில் ஈடு படுவது உகந்தவிடயமல்ல என தெரிவித்துள்ளார்.

பிரேமசந்திரனும் அவரது சகாக்களும் இந்த விடயத்தை தங்கள் எதிரி மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை தாக்குவதற்

பகுதிக்குள் காலடி எடுத்துவைப்பதற்காக முயற்சிகள் மேற் கொள்வதை தடுத்துநிறுத்தப்போவதில்லை.குறிப்பாக அங் குள்ள மீன்பிடித்துறைக்குள் ஊடுருவுவதை சீனா கைவிடப் போவதில்லை.

இலங்கைகடற்பரப்பில் தனது மீனவர்கள் சட்டவிரோத மீன் பிடியில் ஈடுபடுவதை இந்தியாவால் தடுத்து நிறுத்த முடியாவிட்டால் (அரசியல் காரணங்களிற்காக அதனால் செய்ய முடியாது) இந்தியா ஏனைய வருமானம் ஈட்டித்தரும் அபி விருத்தி திட்டங்களை இலங்கை மீன்பிடித்துறை அமைச்சுடன் இணைந்து முன்னெடுப்பதன் மூலம் இலங்கை தமிழ் மீனவர் களை கவர முயலவேண்டும்.

இந்தியாவால் அதனை செய்ய முடியாவிட்டால் கைது செய்யப் பட்ட மீனவர்களை விடுதலை செய்வதை மாத்திரம் அது செய்தால் கூடிய விரைவில் இலங்கையின் வடபகுதி மீனவர்கள் மத்தியில் சீனாகாலடி பதிக்கும் – இலங்கை மூலோபாய ரீதியில் பெறுமதியான விடயத்தை சீனாவிடம் இழக்கும்.

மீனவர் விவகாரத்தை ஐநாவிற்கு கொண்டு செல்வது குறித்த தனது எச்சரிக்கையை தமிழ்தேசியமக்கள் முன்னணியின் தலைவர் முன்னெடுத்தால் மீனவர் விவகாரம் மேலும் சிக்க



வடபகுதி மீனவர்கள் இழந்துள்ளனர்.

தமிழ்நாடு மீனவர்கள் ஆழமற்ற கடலின் அடியை துழாவிச் செல்லும் உள்ளூர் மீனவர்களின் வலைகளை அழிக்கும் டிரோலர்களை பயன்படுத்துகின்றனர்.

இந்திய மீனவர்கள் சட்டவிரோத மீன்பிடி முறைகளை பயன் படுத்துவது குறித்தும் அவர்களின் சட்டவிரோத நடவடிக்கைகள் குறித்து பல வருடங்களாக முறையிட்டும் நடவடிக்கைகள் எடுத் தும் அதனால் எந்த பலனும் ஏற்படவில்லை.

தமிழ்நாட்டின் வாக்குகளை இழக்ககூடும் என்ற அச்சம் காரண மாக தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் இந்திய மீனவர்களை கட்டுப்படுத்துவதில் தோல்வியடைந்துள்ளனர்.

தென் இந்திய மாநிலத்தில் மீனவர்கள் வாக்குபலம் மிக் கவர்கள்.

தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப் படும் போதெல்லாம் தமிழக அரசியல்வாதிகள் பெரும் போர்க் கொடி தூக்குவார்கள்

கூச்சலிடுவார்கள், அதன் பின்னர் புதுடில்லி அவர்களை மனிதா பிமானத்துடன் நடத்திவிடுதலை செய்யுமாறு கொழும்பை கேட்டுக்கொள்ளும்.

வடபகுதி மீனவர்களின் நலன்களை காப்பாற்றுவதை விட இந்தியாவுடனான உறவுகள் முக்கியமானவை என்பதால் கொழும்பு அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளும்.

வடபகுதி வெள்ளாளர்களின் ஆதிக்கத்தில் உள்ளதால் இலங்கை தமிழ்கட்சிகள் மீனவர்களின் விவகாரத்தை உயர்த்தி பிடிப்பதில்லை, மேலும் வடபகுதி அரசியல்வாதிகள்

காகவே பயன்படுத்துகின்றனர்.

இந்த விவகாரத்திற்கு தீர்வைகாண வேண்டிய முழுப்பொறுப் பையும் அமைச்சர் மீது அவர்கள் சுமத்துகின்றனர்.

எனினும் இந்தியஇலங்கை அரசாங்கங்களின் உதவியில்லாத நிலையில் இந்த விவகாரத்தில் எதனையும் செய்ய முடியாத நிலையில் தேவானந்தா காணப்படுகின்றார்.

பாதிக்கப்பட்டமீனவர்களிற்கு வேறு தொழிலில் ஈடுபடுவதற்கான நிதியை வழங்குவதை மாத்திரம் அவரால் செய்யமுடியும்.

இலங்கைக்கான சீனதூதுவர் உதவமுன்வந்துள்ள நிலையில் கடலட்டை பண்ணையையும் மீன்பதப்படுத்தும் தொழிற் சாலையும் கடந்த டிசம்பரில் ஏற்படுத்தப்பட்டன.

சீன தூதுவர் இங்கு விஜயம் செய்து இந்த துறையில் மேலும் உதவிகளை வழங்க தயார் என தெரிவித்திருந்தார்.

தமிழ்நாட்டிற்கு செல்லும் வழியில் உள்ள சில தீவுகளிற்கும் அவர் விஜயம் மேற்கொண்டிருந்தார்.

ஆனால் இந்தியா வடபகுதி குறித்த சீனாவின் ஆர்வத்தை தனது பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலான விடயமாக கருதுகின்றது.

வடஇலங்கையின் தீவுப்பகுதிகளில் மின்நிலையங்களை ஏற் படுத்தும் திட்டத்திறகு தனது பாதுகாப்பை காரணம் காட்டி இந்தியா எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. கேள்விப்பத்திர முறை மூலம்சீன நிறுவனம் இந்த திட்டத்திற்கான அனுமதியை பெற் றிருந்தபோதிலும் இலங்கை இந்த திட்டத்தை இடைநிறுத் தியுள்ளது.

ஆனால் இந்த திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளமை சீனா வட

லானதாக மாறும்.

இலங்கை மீனவர்களிற்கு மீன்பிடி உபகரணங்களையும் பயிற் சியையும் வழங்குவதன் மூலம் அவர்கள் ஆழ்கடல் மீன்பிடித் தொழில் ஈடுபடுவதை இந்தியா ஊக்குவிக்கவேண்டும் என்ற யோசனையை டெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன்முன்வைத்துள்ளார்.

எனினும் முன்னாள் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஏற்கனவே முயற்சி செய்து தோல்வியடைந்த விடயம் இதுவென்பதால் இது சாத்தியமாகபோவதில்லை.




வடக்கு கரையோரப் பிரதேசங்களை சிங்கள, பௌத்தமயமாக்க அரசு திட்டம்!

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன்

பெப்ரவரி 11, 2022

வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களைக் கடற் றொழிலில் இருந்து வெளியேறச் செய்து அந்தக் கரை யோரப் பிரதேசங்களை சிங்கள, பௌத்த பிரதேசங்களாக மாற்ற அரசு திட்டமிட்டு செயற்படுகின்றது என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.



நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற நீதி அமைச்சின் கீழான குற்றவியல் நடவடிக்கை முறை சட்டக்கோவை, ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடி களைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலங்கள் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த சில வாரங்களாக வடபகுதி கடலில் எல்லை தாண்டி வந்த படகுகளாலும் மற்றும் தென்பகுதியில் இருந்து வருகின்றவர்களாலும் எங்களின் மீனவர்கள் மீது மேற் கொள்ளப்படுகின்ற தாக்குதல்கள் காரணமாக மீனவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

எல்லை தாண்டி வந்த ரோலர் படகு மோதியதில் காணாமல்போன இரண்டு மீனவர்கள் கொல்லப்பட்டுள் ளனர். இலங்கைக் கடற்படையினர் பார்த்துக்கொண்டிருக் கத்தக்கதாகவே நடந்துள்ளன. இது இன்று நேற்று அல்ல கடந்த 13 வருடங்களாக எங்களின் மீனவர்கள் பாதிக் கப்படுகின்றனர்.

வட பகுதியில் இருக்கும் எங்களின் மீனவர்களை கடற் றொழிலில் இருந்து வெளியேறச் செய்து கரையோரத்தை சிங்கள - பௌத்த பிரதேசங்களாக மாற்ற இலங்கை அரசு திட்டமிட்டு செய்யும் நடவடிக்கையே இது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் உறுதுணையாக இருந்து இந்த அழிவுகளுக்குத் துணைபோகின்றார்.

இவ்வாறான செயற்பாடுகள் காரணமாக யாழ். மாவட் டத்தில் 23 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வாழ்வாதாரம் இழந்து பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் வடபகுதியில் 50 ஆயிரம் மீனவ குடும்பங்கள் வாழ்வாதரம் இழந்து தவிக் கின்றனர்.

கடந்த 31 ஆம் திகதி இரண்டு மீனவர்கள் கொல்லப் பட்டத்தைத் தொடர்ந்து மீனவர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்தி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அந்த மீனவர்கள் தொழிலுக்குச் செல்லாது விட்டபோதும் அவர் களின் குடும்பங்கள் பசியில் வாடியபோது கடற்றொழில் அமைச்சர் அவர்களைத் திரும் பியும் பார்க் கவில்லை. வாக்குகளுக்காக வாக்குறுதிகளை வழங்கி மக்களை ஏமாற்றி இந்த அரசுக்கும் கடற் படைக்கும் வெள்ளை யடிக்கும் செயற்பாடுகளையே அவர் செய்கின்றார்.

மீனவர்கள் தமது போராட்டத்தை உயர்தரப் பரீட்சை காரணமாக தற்காலிகமாக நிறுத்தியுள்ளனர். தீர்வு கிடைக்காவிட்டால் தொடர்ந்தும் போராடுவதற்கு அவர்கள் திட்டமிட்டுள்ளனர். இதற்கு நாங்கள் எங்களின் ஒத்து ழைப்புகளை வழங்குவோம்.

இதேவேளை, இந்தப் பிரச்சினை தொடர்பில் இந்தச் சபை யில் ஒத்திவைப்பு வேளை பிரேரணையொன்றை கொண்டு வருவதற்கு நாங்கள் தீர்மானித்திருந்தோம். இந் நிலையில் எங்களுடன் தொடர்பு கொண்ட இந்தியத் தூத ரக அதிகாரிகள், தங்களின் பக்கத்தில் இருந்து வரும் மீனவர்களை கட்டுப்படுத்தத் தீர்மானித்துள்ளோம் என் றும், இதனால் இதற்கு ஒத்துழைக்குமாறும் கேட்டுக் கொண்டதற்கமைய அந்த ஒத்திவைப்பு வேளை பிரே ரணையை நிறுத்தியுள்ளோம்.

இவ்வாறாக வெளிநாட்டு அரசு தங்களின் பக்கத்தில் பிரச் சினைக்குத் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ள போதும், இன்று வரையில் இந்த அரசில் முதுகெலும் பில்லாத அமைச்சர் மட்டுமே பேசிக் கொண்டிருக்கின்றார். ஆனால், ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோர் எமது மீனவர்கள் பற்றி கதைப்பதில்லை.

இதேவேளை, மயிலிட்டித் துறைமுகம் 250 மில்லியன் ரூபா செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பின்னர் தமிழர்களிடம் இருந்து பறிக்கப்பட்டு சிங்களவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைப் பார்க்கும்போது அரசு வட பகுதியிலுள்ள மீனவர்களைத் தொழிலில் இருந்து அப்புறப் படுத்தி அவர்களை வெளியேற்றி இந்தப் பகுதியை சிங்கள மயமாக்கும் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் இந்த வேலைத்திட்டம் நடைபெறுகின்றது.

இதனால்தான் ஒற்றையாட்சிக்கு உட்பட்ட எந்தத் தீர் மானமும் எங்களைப் பாதுகாக்காது என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றோம். ஆகவே, எங்களின் மீனவர்களை, எங்களின் விவசாயிகளை, எங்களின் வர்த்தகர்கள் மற் றும் மக்களின் வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கக் கூடிய அதிகாரத்தை வழங்கக் கூடிய சமஷ்டி தீர்வை வலியுறுத்தி குரல் கொடுத்துக்கொண்டிருக்கின்றோம். இதனை சிங்கள தேசம், மூத்த அரசியல் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்" - என்றார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன்

பெப்ரவரி 11, 2022

"இலங்கையில் 300 - 400 பேர் தற்போதும் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள் ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒரு சிலரது வழக்குகளே எப்போதும் பிரபல்யமாகப் பேசப் பட்டுள்ளன. எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நட வடிக்கை எடுக்க வேண்டும்." - இவ்வாறு தமிழ்த் தேசியக்



கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

"இதற்கு முன்னர் ஒருபோதும் ஏற்படாத பொருளாதார நெருக்கடி நிலையொன்று இன்று நாட்டில் ஏற்பட்டுள்ளது. இது குறித்து நாம் கேள்வி கேட்கையில் எந்தப் பதிலும் இது வரை அரசிடமிருந்து கிடைக்கவில்லை. அரசியல் அமைப் பின் 148 ஆம் உறுப்புரைக்கு அமைய பொது நிதி அதி காரம் முழுமையாக நாடாளுமன்றத்துக்கே உள்ளது. எனவே, நாடாளுமன்றத்துக்கு முழுமையான தகவல் களைப் பெற்றுக்கொடுக்க வேண்டும். இல்லையேல் அது எமது கடமையில் இருந்து விலகுவதாகிவிடும்.

தற்போது வெளிவிவகாரத்துறை அமைச்சர் பயங்கர வாதத் தடுப்புச் சட்டத்தில் திருத்தங்களை முன்வைக்கும் சட்டமூலத்தை சபையில் முன்வைத்துள்ளார். இந்தச் சட்டம் 1979 ஆம் ஆண்டு தற்காலிக சட்டமாக ஆறு மாதங் களுக்கு நடைமுறைப்படுத்துவதாகக் கூறியே அரசு கொண்டுவந்ததாக பத்திரிகைகளில் வாசித்தோம். இது வொரு தற்காலிக சட்டம் எனவும், ஆறுமாத காலத்திற்கே இது நடைமுறையில் இருக்கும் எனவும் கூறினாலும் இன்று வரை 42 ஆண்டுகளாக இந்தச் சட்டத்துடன் வாழ வேண்டியுள்ளது.

சர்வதேச சமூகத்தின் வலியுறுத்தல்களுக்கு அமையவும், புதிய சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் என வலியுறுத் தியதற்கு அமையவுமே இப்போது வெளிவிவகார அமைச் சர் பீரிஸ் திருத்தச் சட்டமூலத்தை முன்வைத்துள்ளார். இதற்கு மறுசீரமைப்பு எனப் பெயரும் குறிப்பிடப்பட்டுள் ளது. கடந்த பத்து நாட்களுக்கு முன்னர் அமைச்சரை நான் யாழ்ப்பாணத்தில் சந்தித்த வேளையிலும், மறுசீரமைப்பு என்ற வார்த்தைக்குப் புதிய அர்த்தம் தேடவேண்டியுள்ளது என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தேன். அதனை அவர் மறுக்கவும் இல்லை.

இந்தத் திருத்தச் சட்டமூலத்தில்புதிதாக எதுவுமே மறு சீரமைக்கப்படவில்லை. இங்கு திருத்தங்கள் எனக் கூறப் பட்டுள்ள சகல விடயங்களும் ஏற்கனவே அவ்வாறே உள் ளன. 18 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட முடியும் என் பதை 12 மாதங்களாகக் குறைக்க நடவடிக்கை எடுத் ததாகக் கூறுகின்றனர். எமக்குத் தெரிய 18 ஆண்டு களுக்கு மேலாக சிலர் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் இன்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

ஒரு சிலரைப் பிணையில் விடுவிக்க நடவடிக்கை எடுத் துள்ளீர்கள். சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லா பிணை யில் விடுவிக்கப்பட்டுள்ளார். அவர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளமை மகிழ்ச்சியளிக்கின்றது. கவிஞர் அஹ்னாபும் விடுவிக்கப்பட்டுள்ளார். ஆனால், இந்த விடுதலைகளும், ஜக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை மற்றும் ஏனைய அமைப்புகள் மூலமாக பிரேரணைகள் நிறைவேற் றப்பட்டு இவர்களின் பெயர்கள் சுட்டிக்காட்டப்பட்டதன் காரணமாகவே இடம்பெற்றுள்ளன . ஆனால், மேலும் பலர் இவ்வாறு தடுப்பில் உள்ளனர். இருபது, இருபத் தைந்து, முப்பது ஆண்டுகளாக உள்ளனர். குறைந்த பட்சம் 300 - 400 பேர் இன்றைய சூழ்நிலையிலும் பயங் கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட் டுள்ளனர். அவர்கள் குறித்து எவரும் பேசுவதில்லை. ஒரு சிலரது வழக்குகளே எப்போதும் பிரபல்யமாக பேசப் பட்டுள்ளன. எனவே, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க அல்லது முழுமையாக மாற்ற நட வடிக்கை எடுக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை .

மேலும், தற்போது நீதி அமைச்சர் சில சட்டங்களைத் திருத்த நடவடிக்கை எடுத்துள்ளார். அதனை வரவேற் கின்றோம். அதேபோல் சட்ட தாமதங்கள் ஏற்படுவதில் சட்டத்தரணிகள் பக்கமும் குறைகள் உள்ளன என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால், அவர்கள் மட்டுமல்ல இந்தப் பொறிமுறையிலும் தவறு உள்ளது. அதனை மாற் றியமைக்க வேண்டும். நாட்டின் சட்டத்துறை, நீதி சுயா தீனமே ஜனநாயகத்தின் அத்திபாரம். இங்கேதான் சாதா ரண மக்கள் தமக்கான நியாயத்தைப் பெற்றுக்கொள்ள முடியும். அதுமட்டுமல்ல நாட்டின் நீதிமன்ற சுயாதீனத்தில் தலையிடுவதாக இரண்டு அரசியல் தப்பும் ஒருவருக்கு ஒருவர் குற்றம் சுமத்திக்கொண்டுள்ளனர். நாங்கள் நீதி மன்ற சுயாதீனதில் தலையிடவில்லை நீங்களே தலையிடு கின்றீர்கள் என மாறி மாறி குற்றம் சுமத்திக்கொள்கின் றார்கள். ஆனால், உண்மை என்னவென்றால் இரண்டு தரப்புமே இந்தத் தவறைச் செய்துள்ளீர்கள். இரண்டு தரப்புமே சுயாதீன நீதித்துறையில் தலையிட்டுள்ளீர்கள். இசை நாற்காலி போன்று இரண்டு தரப்பினரும் மாறி மாறி அமர்ந்து நாட்டின் சுயாதீன நீதித்துறையில் அரசியல் தலையீட்டை செய்துள்ளீர்கள் என்பதே உண்மை. ஆகவே, இரண்டு தர்பினரும் மாறி மாறி ஒருவருக்கு ஒருவர் கூறும் குற்றச்சாட்டுக்கள் உண்மையே. இதுவே நாட்டின் இந்த நிலைமைக்குக் காரணம்.


நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது. நீதித் துறையும் அதே நிலைக்கு வந்துள்ள இந்த நேரத்திலாவது நாம் அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதம் மறந்து சரியான மாற்றத்தை உருவாக்குவோம். நாம் இதனைச் செய்யாது போனால் நாட்டு மக்களே அதனைச் செய்வார் கள். இதுவே புரட்சிகளின் வரலாறுகள்" - என்றார்.

'இந்தியாவை இலங்கை தொடர்ந்து ஏமாற்றுகிறது'

வடமாகாண முன்னாள் முதல்மைச்சரும், யாழ்மாவட்ட எம்.பி.சி.வி. விக்னேஸ்வரன்

பெப்ரவரி 08, 2022

தமிழ் மக்களுக்கான அதிகாரப் பகிர்வு உட்பட இந்தியா விற்கு கடந்த காலத்தில் வழங்கிய வாக்குறுதிகள் எதனையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை இந்திரா காந்திக்குப் பிறகு இலங்கை தொடர்பான இந் தியாவின் வெளியுறவுக் கொள்கை தோல்வியடைந்து, அதன் விளைவாக இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது. என்று வடமாகாண முன்னாள் முதலமைச்சரும் யாழ் மாவட்ட எம்.பி .யுமான சி.வி விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.



வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் இரண்டு நாள் பயணமாக திங்கட்கிழமை புது டில்லிக்கு வருவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பு வடமாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் டைம்ஸ் ஒவ் இன்டியா பத்திரிகையுடன் பிரத்தியேகமாக கதைத்துள்ளார்.

சிறீலங்காவின் பொருளாதாரம் சீர்குலைந்துள்ளது, அது சீனாவின் கடன் வலையில் சிக்கியுள்ளது, இலங்கை தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்காகஜ. நா. மனித உரிமைகள் பேரவையில் பெப்ரவரி 28 அன்று மீண்டும் கண்டனம் செய்யப்படவுள்ளது . இவை உட்பட மற்றும் ஏனைய பிரச்சினைகளில் இந்தியாவின் ஆதரவை பீரிஸ் நாடவுள்ளார்.

டைம்ஸ் ஒவ் இன்டியா விக்கின்ஸ்வரனிடம் எழுப்பிய கேள்விகளும் அவர் அளித்த பதில்களும் வருமாறு:

✉ உங்களது வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸின் முதலாவது உத்தியோகபூர்வ விஜயத்திலிருந்து நீங்கள் எதனை எதிர்பார்க்கிறீர்கள்?

எமது வெளிவிவகார அமைச்சரின் விஜயமானது இந் தியாவை ஏமாற்றும் இலங்கை அரசாங்கத்தின் மற்று மொரு நடவடிக்கையாகும். இந்தியாதான் தங்களின் நட்பு நாடு என்பது போல் காட்டிக்கொள்வதற்கும் இலங்கைத் தமிழ் மக்களுடனான அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையில் இந்தியா தலையிடாது என்பதை உறுதிப்படுத்துவதற்காக, பொய்யான வாக்குறுதிகளை வழங்குவதற்கும், இலங் கையில் சீனாவின் விருப்பத்தைப் பின்பற்றும் கொழும்பின் நடவடிக்கைகளால் இந்தியா கோபப்படாமல் இருப்பதற்கு மாகும். தமிழ் மக்களாகிய எமக்கு அதிகாரப்பகிர்வு உட்பட இந்தியாவிற்கு கடந்தகால வாக்குறுதிகள் எதனையும் இலங்கை அரசாங்கம் நிறைவேற்றவில்லை. இலங்கை தொடர்பான இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையும் இந்திரா காந்திக்குப் பிறகு தோல்வியடைந்து விட்டது என்று கூறுவதையிட்டு நான் மிகவும் வருந்துகிறேன். இதனால், இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகிறது.

எவ்வாறாயினும் , பிரதமர் நரேந்திர மோடி மீது எனக்கு நம்பிக்கை உள்ளது. அவரை எனக்கு தனிப்பட்ட முறை யில் தெரியும். அவர் முதலமைச்சராக இருந்தபோது நான் குஜராத்துக்கு சென்றிருக்கிறேன், மிகவும் ஈர்க்கப்பட்டேன். அவர் இலங்கையின் பொய்யான வாக்குறுதிகளை நம் பாமல், இலங்கை தொடர்பில் மிகவும் கவனமாக இருப்பார் என்றும் தீர்க்கமான நடவடிக்கை எடுப்பார் என்றும் நான் நம்புகிறேன். இலங்கையில் தமிழ் மக்களின் நியாயபூர்வ உரிமைகள் மற்றும் தொடர்ச்சியான இருப்பை உறுதிப் படுத்த இந்தியப் பிரதமர் துணிச்சலான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர்கள் எதிர் பார்க்கிறார்கள், ஏனெனில் எமது இருப்புக்கே ஆபத்து அதிகம். இந்தியா எமக்கு அதிகாரம் அளிக்க எவ்வளவு பாடுபடுகிறதோ, அது இந்தியாவின் பாதுகாப்புக்கு சிறந்தது. எனவே, எமது வெளிவிவகார அமைச்சரின் விஜயத்தின் மூலம் எனது ஒரே எதிர்பார்ப்பு, பேராசிரியர் பீரிஸின் பேச்சுத்திறனைக் கண்டு இந்தியா ஏமாந்துவிடக்கூடாது என்பதுதான்.

✉ இலங்கை அரசியலமைப்பின் 13 வது திருத்தம் 1987 இல் இந்தியாவால் இணைந்து எழுதப்பட்டது. இது இலங் கைத் தமிழர்களுக்கு அதிக சுயாட்சிக்கு உத்தரவாதம் அளிக்கிறது, ஆனால் அது நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது. தற்போது, இந்தியாவின் முதன்மையான கவனம், இலங்கையைச் சுற்றியுள்ள சீனாவின் கடன் பொறி மற்றும் தீவு-தேசத்தில் அதன் அதிகரித்துவரும் பிரசன்னம் ஆகும். இலங்கையில் 'தமிழர் பிரச்சினை என்பது புதுடில்லியின் மனதில் அதிகளவுக்கு முன்னுரி மையாக இல்லை. அங்கிருந்து உங்கள் செய்தியை எவ் வாறு பெறுவீர்கள்?

நாங்கள் இந்தியாவிடம் அதிகம் கேட்கவில்லை, ஏனென் றால் 13வது திருத்தம் எமது அரசியலமைப்பில் உள்ளது, இந்தியாதான் காரணம். 1987ல் இந்திய-இலங்கை சமா தான ஒப்பந்தத்தில் (13வது திருத்தத்தை செயற் படுத்திய) தமிழர்களாகிய நாம் கையொப்பமிடவில்லை என்பதை மறந்துவிடாதீர்கள். எங்களின் சார்பாக இந்தியாதான் கையெழுத்திட்டது. இலங்கை அரசாங்கம் புதிய, மிகவும் மையப்படுத்தப்பட்டஜமத்தியில் குவிக்கப்பட்ட அரசியல மைப்பையும் 13 வது திருத்தத்தை முற்றிலுமாக அகற்ற வேண்டுமென்றும் விரும்புகிறது. எனவே, 13வது திருத்தம் புதிய அரசியலமைப்பில் இணைக்கப்படுவதை எவ்வாறு உறுதிப்படுத்தப் போகிறது என்று கொழும்பிடம் கேட்பதற்கு இந்தியாவின் தரப்பில் தார்மீகக் கடப்பாடும் சட்டரீதியான உரிமையும் உள்ளது.

இலங்கையில் சீனாவின் மேலெழுகையுடன் இந்தியா வின் கவலை முன்பை விட அதிகமாக உள்ளது. எமது வடமாகாணத்தில் உள்ள மூன்று தீவுகள் இந்தியாவிற்கு மிக அருகில் - 52 கிலோமீட்டர் தொலைவில் உள்ளன.

அந்தத் தீவுகளில் மின்சாரம் உற்பத்தி செய்வது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களைச் செயற் படுத்த சீனா முயற்சித்து வருகிறது. பார்த்துக் கொண்டு அமைதியாக இருப்பது இந்தியாவுக்கு இலகுவாக இருக்காது. எனவே, எம்மைப் பாதுகாக்கவும், உதவவும், வேண்டிய அவசியம் இந்தியா வின் சொந்த நலனில் உள்ளது. இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழர்களைப் பாதுகாப்பதன் மூலம், இந்தியா தன்னைப் பாதுகாத்துக் கொள்கிறது. மேலும் அந்த மாகாணங்களின் தமிழர்களாகிய நாம், சீனாவுக்கு மாறாக இந்தியாவுக்கு மிகவும் சாதகமாக இருப்போம் என்பதில் இந்தியா உறுதியாக இருக்க முடியும். இலங்கை அரசாங்கம் பல வழிகளில் சீனர்களை கவர்ந்திழுத்து, ஏற்கனவே தென்னிலங்கையில் 15000 ஏக்கரை சீனா விற்கு 99 வருட குத்தகைக்கு வழங்கியிருக்கும் போது, இந்தியா மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

✉ஆனால் 13வது திருத்தச் சட்டம் 25 ஆண்டுகளுக்கு முன்பே எழுதப்பட்டது. நிச்சயமாக அது பல வழிகளில் காலாவதியானதே ?

நிச்சயமாக, திருத்தம் மட்டுமே எமது எல்லாப் பிரச்சினை களையும் தீர்க்காது. ஆனால், தமிழர் பிரச்சினையில் இலங்கை அரசை கேள்வி கேட்க இந்தியாவுக்கு இருக்கும் ஒரே தொடர்பு அதுதான். தவிர, அதில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான விடயங்கள்: இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகப் பிரதேசங்கள். வெளியில் இருந்து சிங்களவர்களை வரவழைத்து புதிய குடியேற்றங்களை ஏற்படுத்தி வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இடையில் பிளவை ஏற்படுத்த கொழும்பு முயற்சிக்கிறது என்பதே யதார்த்தம். ஒற்றை யாட்சி அரசியலமைப்பு அனைத்து அதிகாரங்களையும் மத்திக்கு வழங்கும். ஒரு சமஷ்டி அரசியலமைப்பு சுற்ற யல்கூறுகளுக்கு அதிக அதிகாரங்களை வழங்கும். பின்னையது நாங்கள் எதிர்பார்ப்பதாகும்.


✉ விடுதலைப் புலிகள் மூன்று தசாப்தங்களாக தமிழ் பிரிவினைவாதத்திற்காக கொடூரமான போரை நடத்தினர். இது தற்கொலை குண்டுதாரிகளையும், சிறுவர் படையினரையும் மற்றும் பல போர்களின் போது அப்பாவி பொதுமக்களை முன்னணியில் தள்ளியது. மொத்தம் 120,000 பேர் கொல்லப்பட்டனர். இந்தியாவின் தேசிய விசாரணை முகவரமைப்பு (என்ஐஏ) அதிகாரிகள் கடந்த மாதம் இந்திய நாளிதழ் ஒன்றுக்கு, முன்னாள் விடுதலைப் புலிகள் இந்திய அடையாள ஆவணங்களை போலியாக உருவாக்கி இந்திய வங்கிக் கணக்குகளை இயக்கு கிறார்கள் என்று கூறியுள்ளனர். 10 மாதங்களில் நடை பெறும் இரண்டாவது என்ஐஏ விசாரணை இதுவாகும். பயங்கரவாதக் குழு இலங்கைக்கு வெளியே மீண்டும் குழுமி வருகிறதா? மேலும் இலங்கைத் தமிழர்களிட மிருந்து ஏதாவது ஆதரவு கிடைக்கிறதா?

வடக்கு கிழக்கு தமிழர்களைப் பொறுத்த வரையில் இவ் வாறான விடயங்களுக்கு ஆதரவு இல்லை. தேர்தலில் வெற்றி பெற்ற எமது கட்சிகள் அனைத்தும் பிரிந்த இலங் கையை அல்ல ஒரே நாட்டையே கோருகின்றன. எந்தச் சூழ்நிலையிலும் நாம் தமிழர்களுக்கான தனி நாடு என்ற சமன்பாட்டிற்குள் திரும்பப் போவதில்லை. உண்மையில், இலங்கையின் வடக்கு அல்லது கிழக்கில் எங்கும் புலிகள் மீள் எழுச்சிக்கான அறிகுறியே இல்லை. இந்தியாவில் இவர்கள் ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்கள் என்று தெரியவில்லை. அவர்களுக்கு சில பொருளாதார காரணங் கள் இருக்கலாம் மற்றும் இந்திய நிறுவனங்களை தங்கள் தனிப்பட்ட நலனுக்காக பயன்படுத்த முயற்சிக்கலாம். ஆனால் அவர்களுக்கு இங்கு ஆதரவு இல்லை. ஆனால் இலங்கை அரசாங்கம் குறிப்பிட முயல்வது போல் சமஷ்டி அலகு என்பது தனி நாடு என்று அர்த்தமல்ல. வடக்கு மற்றும் கிழக்கில் அதிகளவிலான அதிகாரப் பகிர்வை நாங்கள் விரும்புகிறோம்.

✉ பெப்ரவரி 28 அன்று, ஜெனிவாவில் உள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை 2009 உள்நாட்டுப் போரின் முடிவில், இலங்கை ஆயுதப் படைகள் மேற்கொண்டதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள் குறித்து விவாதிக்கும். நாளை, உங்கள் வெளியுறவு அமைச்சர் இந்தியாவை இலங்கைக்கு ஆதரவளிக்கக் கோருவார். அந்த விவாதத் தில் . இந்தியா எவ்வாறு பதிலளிக்க வேண்டும்?

இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப்படுகொலை குறித்து சுதந்திரமான சர்வதேச விசா ரணை நடத்தப்பட வேண்டும் என்று 2009 ஆம் ஆண்டு முதல் ஐநா மனித உரிமைகள் பேரவையை தமிழ் மக்கள் வலியுறுத்தி வருகின்றனர். அப்போது, இராணுவத்தில் இருந்த எனது நண்பர்கள், அப்பாவி மக்களை சுட்டுக் கொல்ல உத்தரவு பிறப்பிக்கப்பட்டது குறித்து எங்களுக்கு தகவல் கொடுத்தனர். அண்டை நாடான இலங்கைக்கு எதிரான சர்வதேச விசாரணையை ஆதரிப்பதில் இந்தியா வுக்கு ஏற்படக்கூடிய சங்கடத்தை நான் புரிந்துகொள் கிறேன். ஆனால் இந்தியாவினால் இந்த விடயத்தை நேரடியாக வலியுறுத்த முடியாவிட்டால் ஏனைய நாடுகள் ஊடாக சர்வதேச விசாரணையை நடத்துவதற்கு உரிய இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை எதிர்வரும் மார்ச் மாதம் இலங்கை தொடர்பில் கடுமையான அறிக்கை ஒன்றை வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதை இந்தியா ஆதரிக்க வேண்டும்.

மிக முக்கியமாக, இலங்கைத் தமிழ் மக்களின் வடக்கு மற்றும் கிழக்குத் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களுக்காக எமது நிலங்கள் தொடர்ந்தும் ஆக் கிரமிக்கப்படுவதை நிறுத்துவதற்கு ஐநா மனித உரிமை கள் பேரவையின் ஊடாக இந்தியா அர்த்தமுள்ள நடவடிக் கைகளை எடுக்கும் என நம்புகிறேன். இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணி களை அபகரித்து துஷ்பிரயோகம் செய்யும் நோக்கில் செயற்படும் இனவாத அரசு ஒன்று உள்ளது. இவ்வாறான ஆக்கிரமிப்பு இலங்கைத் தமிழர்களுக்கு மட்டுமின்றி இந்தியாவிற்கும் எதிர்காலத்தில் பெரும் பாதுகாப்பு அச் சுறுத்தலாக அமையும். இந்த ஊடுருவலைத் தடுக்க இந்தியாவும் இலங்கைத் தமிழர்களும் ஒருவருக் கொருவர் உதவ வேண்டும். இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர், எஸ். ஜெய்சங்கர் எங்களின் நண்பர். அவர் இங்கே இருந்தார், இதையெல்லாம் அறிந்துளார் . இந்தியா உதவும் என்று எதிர்பார்க்கிறோம்.



உலக வணிகம்
ULAGA VANIKAM
2022

வெளிவந்துவிட்டது

இப்பொழுது அனைத்து தமிழர்
வியாபர நிலையங்கள், உணவகங்கள், கோவில்கள்
அலுவலகங்களிலும் **'உலக வணிகம் 2022'**
கையேட்டினை
பெற்றுக்கொள்ளலாம்.



மேலதிக தொடர்புகளுக்கு: **437.345.4203**

13 ஆம் ஆண்டு

வீரவணக்கம்







ரவி
02.02.2009



இராதா
07.02.2009



இரவிச்சந்திரன்
07.02.2009



அமரேசன்
08.02.2009



தமிழ்வேந்தன்
18.02.2009



சிவப்பிரகாசம்
21.02.2009



கோகுலகிருஷ்ணன்
25.02.2009



சீனிவாசன்
01.03.2009



எழில்வளவன்
05.03.2009



ஆனந்த்
15.03.2009



இராசசேகர்
17.03.2009



பாலசுந்தரம்
22.03.2009



மாரிமுத்து
22.03.2009



சிவானந்தன்
17.04.2009



சுப்பிரமணி
23.04.2009

தமிழின் இரத்த உறவுக்காய்
தணலிற்கே தம்முயிர் தந்து – தமிழனின்
தன் மானத்தை நிலைநாட்டிய வீரச் செம்மல்களே
எம் தொப்புள்கொடி உறவுதனை
தரணியெங்கும் உணர்த்திட்ட தீரர்களே!
உங்கள் சுடரின் வழியில் எம் பயணம் தொடரும்...

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்